RESTAURANT VIGNESHWAR
முற்றிலும் வேறுபட்ட சுவையான பல புதிய உணவு வகைகள்
விக்னேஷ்வர் உணவகம்
உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்திற்குமான உணவுகளை வேண்டுகை செய்து பெற்றுக்கொள்ளலாம்
Tel: 0142052179 / 0620440537
14, Rue Perdonnet , 75010 Paris
Métro: La Chapelle/Gare du Nord

1.50 Euro பிரான்ஸ்

சரிமுரசு

ஐரோப்பா


POOBALAM WEEKLY

2004 12 - 18 Mai 2004 13

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(Mº: La Chapelle/Gare du Nord)

ஜான் பெற்றர்சன் வன்னி பயணம்

தேசியத் தலைவரை சந்தித்துப் பேசுகிறார்



(11.05.2004)

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சியை தீவிரப்படுத்தவதற்காக கொழும்பு சென்றுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பெற்றர்சன் இன்று வன்னி சென்றுள் ளார். அங்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர் களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்பில் விடு தலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல் வன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது.

தொடர்ச்சி 03ம் பக்கம்

உள்ளே




கருணாவின் பேட்டால் குழப்பமடையும் விசுவாசிகள் 23



அமைதி முயற்சி தடம்புரளுமா 06



பின்லாடனைப் பிடித்த பிள்ளைநயினார் 11



முரளிதரனின் உலகசாதனை 22

விசேட பூசைகள் மூலம் இமிகிரேசன் விசா கிடைக்குமா? 22

மோகன் ஜுவலரி மார்ட்
201 Rue du fg. st. Denis, 75010 Paris.
Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79
Mº: La Chapelle / Gare du Nord
தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!
Pub.



V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்நரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord

சமாதான முயற்சியை தொடர்வதற்கான உத்தரவாதம்

சிறீலங்கா அரசிடம் நோர்வே கோருகிறது

(10.05.04)

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக சிறீலங்கா அரசின் கருத்தை அறிவதற்காக ஐந்து அம்சக் கோரிக்கையை நோர்வே முன்வைத்துள்ளது. சிறீலங்கா அரசு இந்தப் பேச்சுவார்த்தையில் இதய சுத்தியுடன் ஈடுபடுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்தக் கோரிக்கைகளை நோர்வே முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்களானது விடுதலைப்புலிகளுடன் மட்டுமே நடைபெற வேண்டும். அந்தப் பேச்சுகள், வெளிநாட்டு உதவிகளைப் பெறும் நோக்கிலானதாய் அமையக் கூடாதென உறுதியளிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுகளுக்கான அனைத்துப் பொறுப்புகளையும் சிறீலங்காவின் அரசுத்தலைவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சுக்களானது குறித்த கால அட்டவணைக்குள் முடிவடையுமென உத்தரவாதமளிக்க வேண்டும்.

பேச்சுக்களானது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால, நிர்வாக சபை யோசனைகளின் அடிப்படையில் ஆரம்பிக்க வேண்டும். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக முன்வைக்கப்படும் இந்த யோசனைகளுக்கான பதிலை, நோர்வே அரசு தரப்பிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நோர்வே அனுசரணையாளர்களால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகள் குறித்து விடுதலைப்புலிகளுக்கும் தெரியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அன்னைபூபதியின் 16வது நினைவு தினம்

காலம்:- 15.05.2004 சனிக்கிழமை மாலை 4..30
இடம்:- Salle de Rencontre
Rue Jean Francois Chalgein
95140 Garges les Gonesse

மேலதிக தொடர்புகளுக்கு - 01 43 58 11 42

TCN Films, Indian Music இணைந்து வழங்கும்

2வது வெற்றி வாரமாக
இரசிகப் பெருமக்களின் மனதை
கொள்ளைகொண்ட

`பேரழகன்`

நடிகர்கள்


சூர்யா (இரட்டைவேடம்)
ஜோதிகா
மனோரமா
விவேக் மற்றும் பலர்

நேரம்

15.05.04 சனி 20:15
16.05.04 ஞாயிறு 18:00 – 21:00
17.05.04 திங்கள் 20:15

தொடர்புகட்கு:

www.tamilcine.net
TCN Films: 06 10 35 77 19
Indien Music: 01 40 05 18 22



டைரக்ஷன் – சசிசங்கர்
இசை: யுவன் சங்கர்ராஜா

இடம்: ESPACE CINEMA
Quatre Chemins, Aubervilliers

CEFT FORMATION

பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு தகுதி உள்ள ஆசிரியர்கள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

Tel: 01 41 14 94 21

உங்கள் 'வேதம் உங்கள் விருப்பம்' போல் பெண் - மாப்பிள்ளை தேடித் தரப்படும்.



தொடர்பு கொள்ள
அம்மா: 01 39 92 31 87
06 62 04 26 53
நேரம்: காலை 10 முதல்
இரவு 10 மணி வரை

ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு

வீட்டுத் தளபாடங்கள் மலிவு விற்பனையில் குசினி செட், சோக்கேஸ், லெதர் Setey 3+2+1, சாப்பாட்டு மேசைகள், கட்டில், அலுமாரி மற்றும் அனைத்துத் தளபாடங்களையும் உங்கள் விருப்பம்போல் தெரிவு செய்யலாம்.

தொடர்புகளுக்கு: 06 64 42 42 62

வீடு வாடகைக்கு

STUDETTE - Métro La Courneuve லிருந்து 5 நிமிட தூரம். Petit Meuolé, Wc, Douche, Lavabo, Evier, chauffage tous confor et Neuf, centre commerciale carrefour மற்றும் சந்தைக்கு அருகில் உள்ளது.

வாடகை: மாதம் 395 ஈரோ (Charges உட்பட).
தொடர்புகளுக்கு: 0674395902

EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

சாயி துர்க்கா புகைப்படச் சேவை

தரம், வேகம், மலிவு

இத்துடன் தரமான 'லெமனேசன் அல்பங்கள்' (இலவசம்) செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
சுரேஸ் - 06 17 51 17 58 / 01 53 26 06 89
T.M.S Video 33, Bd De La Chapelle - 75010 Paris

Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

Bombay	-	560 Eu
Delhi	-	560 Eu
Bangkok	-	550 Eu
Colombo	-	660 Eu
Singapour	-	660 Eu
Madras	-	658 Eu
New york	-	550 Eu
Montreal	-	540 Eu
Oslo	-	315 Eu
Toronto	-	540 Eu

நோர்வே வெளிவிவகார அமைச்சர் வன்னி பயணம்

தேசியத் தலைவரை சந்தித்து பேசுகிறார்

1ம் பக்கத் தொடர்ச்சி

(11.05.2004)

இதேவேளை, நேற்று திங்கட் கிழமை நண்பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங் கிய வெளியுறவு அமைச்சர் ஜான் பெற்றர்சன் நோர்வேயின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக ஊடக வியலாளரிடம் கருத்து வெளியிட்ட போது, சமாதானப் பேச்சுவார்த்தை எங்கு எப்போது ஆரம்பமாகும் என் பதை எம்மால் கூறிவிடமுடியாது. அதனை விடுதலைப் புலிகளும் அர சாங்கமும் தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்தார். சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக தென் பகுதியில் எழுகின்ற எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டியது அல்லது அதனை கட்டுப்படுத்துவது அரசுத் தலைவரின் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

எந்த அரசாங்கம் பதவிக்கு வந் தாலும் நோர்வே தனது சமாதானப் பணியை முன்னெடுக்கும் என்று அவர் சிறீலங்காவில் நிரந்தர அமைதி ஏற்படவேண்டும் என்பதே நோர் வேயின் பிரதான குறிக்கோள் என் றும் குறிப்பிட்டார்.

புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண் டும் என்பதில் அரசாங்கம் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கின்றது. விடு தலைப் புலிகளும் தாம் எதிர்பார்க் கின்ற தீர்வு அமையவேண்டும் என்பதிலும் பேச்சுவார்த்தைய விரை வில் ஆரம்பிக்க வேண்டும் என்ப திலும் அக்கறையுடன் இருக்கின் றனர். இம்முறை பிரதான எதிர்க் கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசிய முன்னணி சமாதானப் பேச்சுவார் த்தையை எதிர்க்காது என நோர்வே நம்புகின்றது. கடந்த இரண்டு ஆண் டுகாலமாக பேச்சுவார்த்தையை அவர்கள் தீவிரமாக முன்னெடுத்த வர்கள் என்பதனால் புலிகளுடனான சமாதானப் பேச்சு தொடர்வதை அவர்கள் வரவேற்பார்கள் என்றும் அமைச்சர் கூறினார். ஜே.வி.பி தொடர் பான கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான முழப்பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றிருக்கின்றார். எனவே ஜே.வி.பியைப்பற்றி நாம் அக்கறை கொள்ளவேண்டிய அவசி யம் இல்லையென்று சொன்னார்.

இதேவேளை கொழும்புக்கு விஜ யம் செய்த அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிக்கா வையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வையும் நேற்றுமாலை சந்தித்தார். சமாதான பேச்சுவார்த்தை தொடர் பான ஏற்பாடுகளை அவர் அறிந்து கொண்டதாக ஜனாதிபதி செயல கம் தெரிவித்திருக்கின்றது. கலந் துரையாடப்பட்ட மேலதிக விபரங் கள் எதனையும் செயலகம் தெரி விக்கவில்லை. போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவரை யும் அவர் சந்தித்தார்.

இதேவேளை, இன்று மாலை வன்னியில் இருந்து கொழும்பு திரும் பியதும் அரசுத் தலைவர் சந்திரி காவை அவர் மீண்டும் சந்திப்பார்.

செச்னியாவில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் செச்னிய அதிபர் படுகொலை

ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்காகப் பல வருடங்களாகப் போராடி வரும் செச்னிய போராளிகள் நடாத்திய தாக நம்பப்படும் இக் குண்டுவெடிப் பில், செச்னியாவின் அதிபர் அஹமத் நடிர்ரோவ் உட்பட, இன்னும் 5 பேர் உயிரிழந்துள்ளர்

இரண்டாம் உலகப்போரில் ஜேர் மனியின் நாசிகள் தோற்கடிக்கப் பட்ட நினைவுநாளை, வெற்றித் தினமாக (விக்ரறி டே) கொண் டாடிய வேளையில் இந்தச் சம்ப வம் நடந்துள்ளது,

இராணுவ அணிவகுப்பைப் பார் வையிட்டுக் கொண்டிருந்த செச் னிய அதிபரும், செச்னியாவுக்கான ரஷ்யாவின் இராணுவத் தளபதி ஜெனரல் வலரி பரனொவ் உட்பட இன்னும் ஐந்து முக்கிய நபர்களும் அமர்ந்திருந்த ஆசனங்களுக்குக் கீழே, நிலத்திற்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித் துள்ளது





2003ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் செச்னிய அதிபராகத் தெரிவானஅஹமத் கடிர்ரோவ் , ரஷ்ய அதிபர் புட்டினுடன் மிக நெருங்கமாக செயற்பட்டு வந்த துடன், ரஷ்ய ஆட்சியை ஆதரித் தும் வந்த ஒருவர் என்பதால், புட்டினுக்கு இந்த இழப்பு பாரிய பின்விளைவுகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பமாகும் சாத்தியம் இல்லை எரிக் சூல்ஹைய்ம் தெரிவிப்பு

(10.05.04)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடி சமாதான பேச்சுவார்த்தை உடன டியாக ஆரம்பிக்கப்படக் கூடிய சாத் தியம் இல்லை என்று நோர்வே யின் விசேட தூதுவர் எரிக் சூல் ஹைய்ம் கூறியுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு பய ணத்தை முடித்துக் கொண்டு நோர் வேக்கு திரும்பிய சந்தர்ப்பத்திலேயே கட்டுநாயக்கா விமான நிலையத் தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட விருக்கும் பேச்சுவார்த்தை மிக வும் கடினமானதாகவே இருக்கும் என்றும் நாளையோ அல்லது வெகு விரைவிலோ சமாதானப் பேச்சு வார்த்தை மீளவும் ஆரம்பிக்கப்படும் என்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது என்றும் அவர் அங்கு கூறியுள்ளார். பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும், அது மிகவும் இறுக்கமானதாகவும், நிபந்தனைகள் கடினமானதுமாகவே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைதிப் பேச்சுக்கு அமெரிக்க அதிபர் ஆதரவு

சிறீலங்கா தலைமை அமைச்சருக்கு கடிதம்

(10.05.04)

விடுதலைப் புலிகளுடன் சிறீ லங்காவின் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னனணி அரசாங்கம் நடத் தவுள்ள அமைதிப் பேச்சுவார்த் தைகளுக்கு அமெரிக்க அரசுத் தலைவர் ஜோர்ஜ டபிள்யு.புஷ் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சிறீ லங்காவின் தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடித மொன்றை அனுப்பியுள்ளார். இந் தக் கடிதத்தை சிறீலங்காவுக்கான அமெரிக்க தூதுவர் ஜிப்ரி லல்ஸ் ரர் கடந்தவாரம் மஹிந்த ராஜ பக்ஷவிடம் கையளித்துள்ளார்.

அமெரிக்க அரசுத் தலைவர் புஷ்சினால் அனுப்பப்பட்டுள்ள இந் தக் கடிதத்தில், ஐக்கிய இலங் கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்க அரசு பூரண ஆதரவு வழங்கும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசி னால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு அமெ ரிக்காவின் பூரண ஆதரவும் வாழ்த் தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

விடுதலைப் புலிகள் மீதான கதிர்காமரின் கரிசனம் ஐயத்தை ஏற்படுத்துகிறது

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்

(10.05.04)

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு ஏற்பட்டுள்ள திடீர் மனமாற்றம் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ம.கா.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார். கதிர்காமர் அண்மைக் காலமாக வெளியிட்டுவரும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு பெரும் ஐயங்களை ஏற்படுத்துகின்றன என்றும் யூலை இறுதியில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என அவர் கூறியுள்ளமை உலக நாடுகளிலிருந்து நிதியைப் பெறுவதற்கான ஓர் வியூகமாகவே பார்க்கவேண்டியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்

சமாதானப் பேச்சுவார்த்தைகள் விட்ட இடத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான கருத்து. ஆனால், அண்மைக் காலமாக இவை பற்றி ஜே.வி.பி. யினர் கூட மௌனம் சாதித்துவருகின்றனர். இதன் உட்பொருள் என்ன? இவர்கள் அனைவரும் அடிப்படை திட்டம் ஒன்றில் உள்ளனரா? விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள இந்தியா எவ்வாறு சமாதான முயற்சிகளில் பங்குகொள்ள முடியும்.

நாம் இந்தியாவிற்கு பகைவர்கள் அல்ல. இலங்கைத் தமிழர்களே இந்தியாவின் உண்மையான நண்பர்கள் என்பதை இந்தியா முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நோர்வேயின் அனுசரணை முயற்சிகளுக்கு இந்தியா துணையாக இருக்கலாமே தவிர, சுயநல நோக்கங்களுடன் தலையிடுமேயானால் அது அருவருக்கத்தக்க விடயமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்க படையதிகாரிகளுக்கு உத்தரவு

சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாகப் பயணம் செய்யும் விடுதலைப் புலிகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு படை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிழக்கில், விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை தமிழ் ஆயுதக் குழுக்களெனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்தும்நிலையிலேயே, வன்னியிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பிற்கும், மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கும் சென்றுவரும் விடுதலைப் புலிகளின் அணிகளுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடந்த சனிக்கிழமை வன்னியிலிருந்து மட்டக்களப்பிற்குச் சென்ற விடுதலைப்புலிகளின் அணிக்கு ஓமந்தை சோதனை நிலையம் முதல் மட்டக்களப்பு கறுத்தப்பாலம் சோதனை நிலையம் வரை படையினர் பலத்த பாதுகாப்பு வழங்கினர்.

புலிகளின் அணியுடன் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த குழுவொன்றும் சென்றிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாக புலிகள் செல்லும் போது எதுவித சிறு அசம்பாவிதங்களும் இடம்பெற்றுவிடக் கூடாதென பாதுகாப்பு அமைச்சு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

விலகிச் சென்ற போராளிகளை மீண்டும் இணையுமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை

(10.05.04)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளால் தமது அமைப்பில் இருந்து விலகிச் சென்று வீடுகளில் இருக்கும் போராளிகளை மீண்டும் அமைப்பில் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அட்டு அம்பாறை அரசியல்துறை துண்டப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தப் பிரசுரத்தில்

விடுதலைக்கான போராட்ட வரலாற்றில் பல பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் ஒவ்வொரு பின்னடைவின் மறுபக்கத்திலும் வெற்றியைச் சந்தித்து சர்வதேசத்தில் தமிழருக்கென ஒரு அங்கீகாரம் கிடைப்பதற்குரிய பேச்சுகள் நடைபெற்று வந்தமையை நீங்கள் அறிவீர்கள். இந்த வெற்றிகளுக்கு மக்களாகிய நீங்களே பெரிதும் பங்காற்றியுள்ளீர்கள். `புலிகள் வேறு மக்கள் வேறு' எனப் பிரித்துப் பார்த்த சிங்களப் பேரினவாத அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் `புலிகளே தமிழர், தமிழரே புலிகள்' என பொங்கியெழுந்து எமது திடமான, வலுவான, தன்மான, உணர்வுகளின் மூலம் வெளிப்படையாக நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள்.

நாடே போரற்ற அமைதியால் நிலைத்திருந்த வேளை சுயநலப் பயங்கரவாதிகளும், சுரணையற்ற கோழைகளும் அறத்திற்கும் பெரும் வீரத்திற்குமுரிய எமது மண்ணில் குழப்பத்தை விளைவித்து எமது மண்ணுக்கும், மாவீரர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிட்டனர். பொறுப்புணர்ச்சியற்ற கோழைகளின் செயல்களால் அவமானச் சேற்றுக்குள் புதையவிருந்த எமது மண்ணை, எங்கள் பிள்ளைகள் இன்று காப்பாற்றி நிற்கிறார்கள். சத்தியத்திற்கும் கடமைக்கும் இடையிலான போராட்டத்தில் சத்தியமே ஜெயித்திருக்கின்றது.

எமது தேசியத் தலைவரின் கூர்மதியாலும் எங்கள் போராளிகளின் தளரா உறுதியினாலும் பாரிய இழப்புகள் இன்றி எங்கள் மண்ணில் கௌரவம் நிலை நாட்டப்பட்டிருக்கின்றது. சிலர் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படாது, அறப்போரைக் கொச்சைப்படுத்தியவர்கள் அகன்று போக எமது உண்மைப் போராட்டத்தின் பலம் இன்னும் ஒரு தடவை மார்தட்டி திடமாக நிமிர்ந்து நிற்கிறது. சிங்கள ஏகாதிபத்தியம் எமது மண்ணை விழுங்குவதற்குத் துணை போகாமல் பாதுகாத்த பெருமை எமது மாவட்ட மக்களையும், போராளிகளையுமே சாரும் என தேசியத் தலைவரே பாராட்டியுள்ளார்.

எதிரி ஓய்ந்திருந்தாலும் துரோகிகள் ஓய்ந்துவிடவில்லை. எமது பிரதேசங்களில் நடைபெறும் கீழ்த்தரமான செயற்பாடுகளில் இருந்து இதனை அறியமுடிகிறது. எமது மண்ணை, எமது மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். எமக்கு தொலைநோக்கும் ஆற்றலும் மிக்க ஒரு தலைவர் உள்ளார். இந்த யுத்தக் கொடுரத்தை அடுத்த சந்ததியினரின் கையில் நாமே தூக்கிக் கொடுக்கலாமா? தமிழீழ விடுதலைக்காகப் பயிற்சிபெற்று வீடுகளில் நிற்கும் வீரர்களே ஒரு கணம் சிந்தியுங்கள். நீங்கள் சாவுக்கு அஞ்சுபவர்களா?

எத்தனையோ கரும்புலிகளின் தியாகத்தால் நிமிர்ந்தவர்கள் நாம். அவர்களின் தியாகம் வீண்போகக் கூடாது. சுயநலப் போக்கானவர்களின் நடவடிக்கை காரணமாக இன்று வீடுகளில் நிற்கும் வீரர்களே! நாம் அனைவரும் வலுவான படையணியாக நின்றதால்தான் சமாதான முன்னெடுப்புக்கள் துரிதப்படுத்தப்பட்டன. போரின் கொடுமையால் எமது மண் அடைந்த துயரங்கள் அனேகம். அவை மேலும் தொடராமல் தடுக்கப்படவேண்டும். இராணுவ பலத்தினாலும் எமது ஒற்றுமையினாலும் நாம் ஒன்றுபட்டுள்ள இவ்வேளையில். நாமே சிந்தித்து எமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள நாம் அனைவரும் அணிதிரள வேண்டும்.

நாம் இன்று போருக்கும் சமாதானத்துக்கும் இடையிலான நூலில் நடந்து கொண்டிருக்கிறோம். எமது தாயக விடுதலைக்காக நாம் அனைவரும் ஒன்றுதிரண்டால் மட்டுமே சமாதானத்தையோ அல்லது பாதுகாப்பையோ நிலைநிறுத்த முடியும். தமிழனை அடிமைப்படுத்தி எமது படைபலத்தை சிதைத்து விடலாம் என்று நப்பாசைக்கனவு காணும் எதிரிக்கு சரியான பாடம் புகட்ட, சிறப்புப் பயிற்சிகள் பெற்று வீட்டிலிருக்கும் எமது வீரர்கள் அனைவரும் எதுவித தயக்கமும் இன்றி ஒன்றுபட்டு எமது விடுதலையை விரைவுபடுத்த அணிதிரள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டது நாட்டுக்கும் மக்களுக்கும் இழைக்கப்பட்ட துரோகத்தனம்

ஜே.வி.பி. மீது ஹெல உறுமய குற்றச்சாட்டு

(10.05.04)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்கள மக்களுக்கு உறுதியளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் இழைத்து விட்டதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம் ஜயந்த, `அரசும் விடுதலைப்புலிகளுமே பேச்சுவார்த்தைகளில் பிரதானமானவர்கள்' என்று உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பாக அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. இணைந்து உருவாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் விடுதலைப்புலிகளைத் தமிழரின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்பதில்லையென்றும் அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டே பேச்சுகள் நடத்தப்படுமென்ற உறுதி மக்களுக்கு வழங்கப்பட்டது.

அதேபோன்று சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.செய்து கொண்ட உடன்படிக்கையிலும் இது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவையனைத்தும் ஆட்சிக்கு வருவதற்காக சிங்கள மக்களையும் ஏன் விடுதலைப்புலிகள் விரோத தமிழ், முஸ்லிம் மக்களையும் ஏமாற்றுவதற்காக இரண்டு கட்சிகளும் இணைந்து மேற்கொண்ட நாடகமாகும்.

ஜே.வி.பி.யின் நோர்வே புலிகள் எதிர்ப்புகள் எல்லாம் தற்போது அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் பறந்து போய் விட்டன.

அரசுத் தலைவி சந்திரிகா தனது சொற்படி நடக்கக்கூடிய கைப் பொம்மைகளை வைத்துக்கொண்டு தனது கருத்துகளை வெளியிடுகின்றார். இதன் முக்கிய நோக்கம் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதும், ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதுமேயாகும். நாட்டு மக்கள் தொடர்பில் அவர்களுக்கு எந்தவொரு கவலையுமில்லை. என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தேசிய அரசு அமைக்க திரைமறைவு முயற்சி

சிறீலங்காவில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திரை மறைவு முயற்சிகள் இடம் பெற்று வருவதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறிலங்காவின் அரசுத் தலைவருக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரின் தலைமையிலேயே இந்நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனேயே இதுகுறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த யோசனை தொடர்பான உறுதியான நிலைப்பாடுகளை குறுகிய காலத்திற்குள் எட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத் தகவல்கள் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவில் தேசிய அரசு ஒன்று நிறுவப்படுமானால் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா நேரடியாகப் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுமென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக முன்னரும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவை முறையாகக் கைகூடாமல் பிசுபிசுத்துப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வயல் வெளியிலிருந்து வயோதிபர் சடலம் மீட்பு!

புங்குடுதீவு மடத்து வெளிப் பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்ற வயோதிபர் மூன்று நாட்களுக்குப் பின்னர் அருகிலுள்ள வயல் வெளியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகமுத்து இராசையா (வயது-75) என்ற வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக மேற்படி வயலில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்றும் - இவ்வாறு மழை வெள்ளம் தேங்கியுள்ள ஆழமான பகுதி ஒன்றில் மூழ்கி இவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

தேர்தல் முடிவு தமிழக அரசுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்

- சோனியா -

தேர்தல் முடிவுகள் தமிழக அரசுக்கும் எச்சரிக்கையாக அமையும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறினார். தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணி, தேர்தலுக்குப் பிறகும் செம்மையாகத் தொடர ஒத்துழைப்பு அளிப்பேன் என்றும் அவர் அறிவித்தார்.

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியைத் தோற்கடிப்பதற்காக, தமிழகத்தில் மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் அனைவரையும் ஒன்று திரட்டி கூட்டணி அமைத்துள்ளமைக்காக தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பாராட்டி நன்றி தெரிவித்த அவர், சென்னைத் தீவுத் திடலில் வெள்ளிக்கிழமை நடந்த பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இந்த உறுதியை அளித்தார்.

தேர்தல் முடிவுகள் மத்தியிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை அகற்றுவதோடு மட்டுமன்றி, அ.தி.மு.க. ஆட்சியின் முடிவு நெருங்கிவிட்டது என்று எச்சரிக்கிற அறிகுறியையும் காட்டுவதாக அமைய வேண்டும் என்றும் சோனியா காந்தி கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் மகத்தான தலைவர் காமராஜர் பிறந்தார். பெரியார், அண்ணா கண்ட கனவுகளை நிறைவேற்ற அடிக்கல்லை காமராஜர் நாட்டினார். சுயமரியாதை மிக்க தமிழகத்தை அவர் உருவாக்கினார். அந்த பெருமை மிக்க தலைவருக்கு நாம் எந்த வகையில் சிறப்பு செய்ய போகிறோம். இந்த தேர்தலில் பாரதிய ஜனதா, அ.தி.மு.க. கூட்டணியைத் தோற்கடிப்பதைத் தவிர காமராஜருக்கு நாம் செய்கிற சிறப்பு வேறு என்னவாக இருக்க முடியும்? அ.தி.மு.க. அரசு, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் துரோகம் செய்து விட்டது. விவசாயிகள், நெசவாளர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கரும்பு விலை, நெல் விலை குறைந்துவிட்டன. விவசாயிகளின் வாழ்க்கைச் செலவோ அதிகரித்துவிட்டது. இந்தியாவின் நெற்களஞ்சியமான காவிரி ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் இப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணாததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தீராத பிரச்சினையாக இருக்கிற தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மக்களிடம் சொல்வதற்கு வேறு விசயங்கள் எதுவும் இல்லாததால், அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் என்னையும், என்னுடைய குடும்பத்தையும் பற்றி அவதூறாகப் பேசி வருகின்றனர். நாட்டுக்காகத் தியாகம் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மதச்சார்பற்ற, ஜனநாயக, ஒருமைப்பாடு கொண்ட இந்தியா என்ற என்னுடைய இலட்சியத்தை பா.ஜ.க.வோ, அ.தி.மு.க.வோ சிதைக்க முடியாது. மே 10ம் திகதி நடைபெறும் தேர்தலில் 40 தொகுதிகளிலும் திமுக, காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும். எங்கள் அணிக்குப் போடும் வாக்கு சமூக நல்லிணக்கத்துக்குப் போடும் வாக்கு. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க, மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க, பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதற்குப் போடுகிற வாக்கு என்றார் சோனியா.



ஜெயலலிதாவின் கனவில் நானும் பங்கேற்கிறேன்

- வாஜ்பாய் -

சென்னைப் பொதுக்கூட்டத்தில், முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் பிரதமர் வாஜ்பாய் ஒரே மேடையில் பிரசாரம் செய்தார். "நிலையான ஆட்சி அமைவதற்குப் பா.ஜனதா கூட்டணிக்கு வாக்களியுங்கள்" என்று, அவர் வேண்டுகோள் விடுத்தார். பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காகப் பிரதமர் வாஜ்பாய் ஒரு நாள் பயணமாக, தமிழ்நாட்டுக்கு வந்தார். சென்னை தீவுத்திடல் பொதுக்கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய் மீண்டும் தமிழக முதலமைச்சரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவுடன் ஒரே மேடையில் தோன்றிப் பேசினார்.

அவர் கூறியதாவது: நீங்கள் எங்கள் கூட்டணிக்கு தான் வாக்களிக்கப் போகிறீர்கள். அதில் சந்தேகம் எதுவும் எனக்கு இல்லை. அதேபோன்று உங்களுக்கும் எந்த சந்தேகமும் இருக்காது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மீண்டும் வெற்றி தேடி தருவீர்கள். ஆனால் நமக்கு தேவை அதிக அளவிலான பெரும்பான்மை. அதுவும் 3ல் 2 பங்கு வெற்றியைத் தாருங்கள். அதற்காகத்தான் நான் உங்களிடம் வந்துள்ளேன்.

தமிழ்நாட்டில் எனக்குப் பழைய நண்பர் அண்ணாதுரை. நாங்கள் இருவரும் ராஜ்ய சபையில் (மேல் -சபை) ஒன்றாக பணியாற்றி உள்ளோம். நாங்கள் வேறு வேறு கட்சியில் இருந்தாலும் நல்ல நண்பர்களாக இருந்தோம். அண்ணாதுரை சிறந்த தேசியவாதி. திராவிட இயக்கத்தில் பல புதுமைகளைப் புகுத்தியவர். அதே போல் தேசியகவி சுப்பிரமணிய பாரதி மீதும் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவருடைய கவிதைகள் நெஞ்சுரம் மிக்கவை.

தமிழ்நாட்டில் பாரதீயஜனதா, அ.தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்படுத்தி உள்ளது. அந்த கூட்டணி, எனக்கும் அன்பு சகோதரி ஜெயலலிதாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது. நமக்கு முந்திய வீரர், வீராங்கனைகள் பாடுபட்டு வளர்த்த தமிழகத்தின் பெருமையைப் பாதுகாக்க நாங்கள் கூட்டணி சேர்ந்துள்ளோம். எங்கள் கூட்டணிக்கு உங்களுடைய முழு ஆதரவு வேண்டும். அந்த ஆதரவு அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். எதிர் அணியான காங்கிரஸ் கூட்டணி மத்தியில் ஆட்சி அமைக்க எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால், தேசிய ஜனநாயக கூட்டணியை மத்தியில் பதவிக்கு வரவிடாமல் செய்யும் முயற்சியிலும் இந்திய அரசியலில் மத்தியில் நிலையற்ற ஆட்சியைக் கொண்டு வரவும்தான் அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

ஐ.கே.குஜ்ரால் தலைமையில் மத்தியில் நடந்த ஆட்சியை, தி.மு.க. விடுதலைப்புலிகளுடன் உறவு வைத்துள்ளது என்ற காரணத்தைக் கூறி காங்கிரஸ் கட்சி கவிழ்த்தது. இதை நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. தி.மு.க. மீது மிக மோசமான குற்றச்சாட்டுகளைக் கூறிய காங்கிரஸ் கட்சி இப்போது அவர்களுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. இது சந்தர்ப்பவாத கூட்டணியா? இல்லையா? அவர்கள் விளக்க வேண்டும். தி.மு.க. கடந்த 4 ஆண்டு காலமாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விட்டு விலகியதற்கான காரணத்தை விளக்க வேண்டும்.

தி.மு.க.வுடன் இப்போது கூட்டணியில் இருக்கும் சிறு, சிறு கட்சிகள் எங்களுடன் கூட்டணியில் இருந்தபோது பாரதீய ஜனதா கூட்டணி தர்மத்தை கடைபிடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா? சுதந்திரம் பெற்ற பிறகு எப்போதும் இல்லாத அளவுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் தான் தமிழ்நாட்டிற்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் அளித்தோம். இது தவறு என்று தி.மு.க., ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சிகள் சொல்ல முடியுமா? முடியாது. கூட்டணியில் இருந்து ஏன் விலகினோம் என்று சொல்ல இவர்கள் காரணத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் நாங்கள் அ.தி.மு.க. மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். 356வது சட்டத்தை நாங்கள் பயன்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சி தான் ஜனநாயகத்துக்கு எதிராக, மாநிலங்களுக்கு எதிராக பல முறை ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்தியது. நாங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை. செய்யவும் மாட்டோம்.

அடுத்து சோனியா காந்தி என்னைப்பற்றி மற்றொரு பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார். நான் கொஞ்சம் நிலை தடுமாறிப் பேசி வருவதாகவும், ஒரு நாள் பேசியதை மறுநாள் மாற்றி பேசுவதாகவும் என்னைப் பற்றி சோனியா காந்தி சொல்கிறார். அவர் தோல்வியின் விரக்தியில் தான் இப்படி பட்ட குற்றச்சாட்டை சொல்லி வருகிறார். நான் காற்றடிக்கும் திசை பக்கம் சாய்பவன் அல்ல. மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குக் காரணம் தேசிய வாதம் மீது நான் கொண்டுள்ள கொள்கை பிடிப்பு தான்.

எங்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியின் சாதனையைப் பார்த்து ஆதரவு தாருங்கள். நாங்கள் இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள், நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் அதிகம் உள்ளன. அவைகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவை. அதற்குப் பெரும் பலத்துடன் ஆட்சி எங்களுக்குத் தேவை. காங்கிரஸ் கட்சியை 50 ஆண்டு காலம் நீங்கள் ஆட்சி செய்ய விட்டீர்கள். அதற்கு மாற்றாக எங்களுக்கு 5 ஆண்டு காலத்துக்கு தான் ஆட்சியை தந்தீர்கள். 1999வது ஆண்டு முதல் நடந்த எங்கள் ஆட்சியின் பணிகளைத் திருப்தியாக எடைபோட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். எங்கள் திறமையான, நிலையான ஆட்சியை நினைத்து பார்த்துப் பெரும் அளவிலான ஆதரவைத் தாருங்கள்.

இந்தியாவில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்ற ஜெயலலிதா பாடுபட்டு வருகிறார். அவருடைய கனவில் நானும் பங்கேற்கிறேன். ஜெயலலிதாவின் இந்த கனவு நிறைவேற மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து பணியாற்றினால் தான் முடியும். இதற்காகத் தமிழ்நாடு எத்தனையோ சவால்களை சந்திக்க வேண்டிய உள்ளது. அதில் ஒன்று தண்ணீர் தட்டுப்பாடு. கடந்த சில நாட்களாக மழை பெய்வது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் தண்ணீர் தட்டுப்பாட்டிற்கு நிரந்தர தீர்வு கண்டாக வேண்டும்.

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியும், தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியும் இணைந்து பணியாற்றினால் மட்டுமே இதை தீர்க்க முடியும். ஏனென்றால் எங்களிடம் தான் பரந்த கண்ணோட்டம் உள்ளது என்றார்.

கடந்த ஆட்சிக்கு முந்தைய ஆட்சியில், பா.ஜ.க. ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வுடன் கூட்டமைத்து ஆட்சியமைத்ததும் பின்னர், வாஜ்பாய் அரசு கவிழ்வதற்கு ஜெயலலிதா காரணமாக இருந்ததும் தெரிந்ததே.



பல்கலைக்கழகத்தில் சோதிடத்தைப் பாடமாக வைக்கலாம் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக விஞ்ஞானி வழக்கு


(09.05.04)

பல்கலைக்கழகத்தில் சோதிடத்தைப் பாடமாக வைக்கலாம் என உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக இந்திய விஞ்ஞானி ஒருவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். இதுபற்றித் தெரியவருவதாவது, பல்கலைக்கழகத்தில் சோதிடத்தைப் பாடமாக வைக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் வழங்கியது. மத்திய மந்திரி முரளி மனோகர் ஜோஷி தலைமையில் செயல்படும் மனிதவள மேம்பாட்டுதுறை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் சோதிடத்தைச் சேர்க்க முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து கடந்த 2001ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களின் மானியக்குழு பரிந்துரை பேரில் 'ஜோதிர் விஞ்ஞான்' என்ற தலைப்பில் சோதிடம் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனை எதிர்த்து விஞ்ஞானி பி.எம்.பார்கவா என்பவர் ஆந்திர உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்காததால் அவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவர் தனது மனுவில், 'பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாகச் சேர்க்கும் அளவுக்குச் சோதிடம் தகுதி பெற்றதல்ல. பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிந்துரை பகுத்தறிவுக்கு ஏற்றதாக இல்லை' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ராஜேந்திர பாபு, நீதிபதி ஜி.பி.மாத்தூர் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் வாதாடுகையில், 'சோதிடம் இந்திய வேதங்களின் பிரதிபலிப்பு. இத்தகைய பாரம்பரியம்மிக்க பண்டைய விஞ்ஞானத்தை நாம் உலகுக்கு எடுத்துகாட்ட வேண்டியது அவசியமாகிறது' என்று எடுத்துரைக்கப்பட்டது.

சோதிடப் பாடத்திட்டத்துக்கு எதிரான வழக்கை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "பல்கலைக்கழக மானியக்குழு எடுத்த முடிவில் தவறில்லை. பல்கலைக்கழகங்களில் சோதிடத்தைப் பாடமாக வைக்கலாம்" என்று கூறினார்கள்.



தடம்புரளுமா அமைதி முயற்சி? பொறிக்குள் சிக்கிய சந்திரிகா!

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சிறீலங்காவின் புதிய அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறது. பல்வேறு நெருக்குதல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது என்ற முடிவை ஸ்ரீலங்காவின் அரசுத்தலைவி சந்திரிகா எடுத்திருக்கிறார்.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் தான் மீண்டும் சமாதான முயற்சிகளில் அனுசரனையாளராகப் பங்கேற்குமாறு சந்திரிகா நோர்வே அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தார். தனக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்காக விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது.

சிறீலங்காவின் அரசுத்தலைவி சந்திரிகாவைப் பொறுத்த வரையில் அவர் இப்போது பலபக்க நெருக்கடிக்குள் சிக்கிப் போயிருக்கிறார். அவர் எந்தப்பக்கத்தில் எந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும் - அதன் பார தூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது.

சந்திரிகா எதிர்கொள்ளும் பிரதான நெருக்கடி ஜே.வி.பி. தான் என்பது குறிப்பிடத்தக்கது

சிறீலங்காவின் அரசுத்தலைவி சந்திரிகாவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி உருவானது ஒரு பெருங் கதை.

இந்த இரண்டு தரப்புக்களும் இணக்கத்துக்கு வந்ததே, இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் புலிகளுடன் பேசத் தயாராக இருந்த ஐ.தே.மு அரசாங்கத்தை வீழ்த்தி, ஆட்சியைப் பிடித்தும் - புலிகளை எப்படியாவது அழித்து விட வேண்டும் என்ற இலக்குக்காகத்தான்.

சந்திரிகாவும், ஜே.வி.பி யும் புலிகளை அழிப்பது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும், நோர்வே மீது வெளியிட்ட காழ்ப்புணர்வுகளும் இதையெல்லாம் நிரூபிக்கப் போதுமான சான்றுகளாகும்.

எந்தப் பிசாசுடனுமாவது கூட்டுச் சேர்ந்து புலிகளை அழிப்பேன் என்று சந்திரிகா கங்கணம் கட்டி நின்றதும், அவரே நோர்வே மீது குற்றங்களை அவிழ்த்து விட்டதும் இலகுவில் மறந்துவிடக் கூடியவையல்ல.

புலிகளை அழிக்க - நோர்வேயைச் சமாதான முயற்சியிலிருந்து அகற்றவே சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி. யும் இணைந்தன. இதனடிப்படையில் தான் கடந்த நவம்பர் 4ம் திகதி பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட முக்கிய அமைச்சுக்களைப் பறித்து ஒத்திகை பார்த்தார் சந்திரிகா.

இப்படியான கூட்டணிக்கு இப்போது, அதாவது தேர்தலின் பின்னர், என்ன செய்வதென்றே தெரியாத தொருநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மை பலம் இல்லை இதனால் ஏனைய கட்சிகளிடம் கெஞ்சிக் கூத்தாடவேண்டியநிலை.

ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பிக்குகளைக் கடத்திச் சென்று எப்படியாவது சபாநாயகர் தெரிவில் வென்விடலாம் என விரும்பிய ஆளும் கட்சிகளுக்கு அதில் ஏற்பட்ட தோல்வி பெரும் பீதியைத் தோற்றுவித்துள்ளது.

ஆளும் கட்சியை விட வலுவான எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் இருக்கவுள்ளன என்ற நிலை எப்போதும் கழுத்துக்கு நேரே கத்தியுடன் ஆட்சியை நடத்த வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளியிருக்கிறது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைத்துவிட்டு, சிங்கள பௌத்த அடிப்படைவாத ஆட்சியை நடத்துவதற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்தாலும் அதை ஏற்பதற்குக்கூட ஜாதிக ஹெல உறுமய தயாராக இல்லை.

ஜே.வி.பிக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் இப்போது நானா, நீயா என்ற நிலையில் இருக்கிறது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணியுடன் ஒருபோதுமே ஒத்துழைக்க முடியாது என்ற கட்டத்துக்கு வந்துள்ளது - ஜாதிக ஹெல உறுமய.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள சிறுபான்மைக் கட்சிகளின் தயவை நாடுவதைத் தவிர சந்திரிகாவுக்கு வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சிறுபான்மைக் கட்சிகள் சந்திரிகாவை இலகுவாக நம்பி விடத் தயாராக இல்லை.

எப்படியும் பிடித்த ஆட்சியைக் கொஞ்சக்காலமாவது கொண்டு நடத்த வேண்டுமே என்பதற்காக இப்போது சந்திரிகா தனது முன்னைய கொள்ளைகள்,



நிலைப்பாடுகளையெல்லாம் கைவிட்டுவிட்டு புலிகளுடன் பேசவும் தயாராகிவிட்டார்.


புலிகளுடன் பேச்சு நடத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுத்தால் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற முடிவதுடன், புலிகள் பக்க நெருக்கடிகளையும் தவிர்க்க முடியும் என ஜனாதிபதி சந்திரிகா கருதுகிறார்.

ஆனால் புலிகளுடனான சமாதான முயற்சிகளை சந்திரிகாவினால் இலகுவாகக் கொண்டு நடத்த முடியுமா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை .சந்திரிகாவின் அழைப்பை ஏற்று நோர்வேயும் சமாதான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறது.

புலிகளும் இதற்குப் பச்சைக்கொடி காட்டியிருக்கிறார்கள். சந்திரிகா எந்தளவுக்குத் தன் நோக்கிற்காகச் சமாதான முயற்சிகளைக் கையில் எடுத்திருக்கிறாரோ, அதைப் புரிந்து கொண்டு புலிகளும் இராஜதந்திர ரீதியில் அணுகியிருக்கிறார்கள். இப்போது எந்த இடத்தில் சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டதோ அந்த இடத்தில் இருந்தே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனப் புலிகள் கூறியுள்ளனர்.

> சந்திரிகாவோ, ஜே.வி.பியோ சமாதான முயற்சிகளையே எதிர்த்த நிலையில் – ஏற்கனவே கடுமையாக விமர்சித்த புலிகளின் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பது சாத்தியமான விடயமாக இருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே.

சிறீலங்காவின் முன்னாள் தலைமை அமைச்சரும் இதுவரை சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றவருமான ரணில் விக்கிரமசிங்கவும், பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட கட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு தொடங்கினால் தான்



தம்மால் ஆதரவளிக்க முடியும் என்றும் கூறியிருக்கின்றார்.

புலிகள் முன் வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவிருந்த கட்டத்தில் தான் சமாதான முயற்சிகள் தடைப்பட்டன.

இப்போது இந்த இடக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. புலிகளும் சரி, பிரதான எதிர்க் கட்சியும் சரி இதையே வற்புறுத்தும் நிலையில் சந்திரிகாவினால் எதையும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற சக்திகளிடம் இருந்து பாதுகாப்புத்தேட சமாதான முயற்சிகளில் கால்வைத்த சந்திரிகாவுக்கு இது நெருக்கடியை ஏற்படுத்துகின்ற விடயம் தான்.

சந்திரிகாவோ, ஜே.வி.பியோ சமாதான முயற்சிகளையே எதிர்த்த நிலையில் - ஏற்கனவே கடுமையாக விமர்சித்த புலிகளின் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பது சாத்தியமான விடயமாக இருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை புலிகளுடன் பேச்சு நடத்த நிச்சயம் எதிர்ப்புத் தெரிவிக்கும் அதைவிட ஹெல உறுமயவைப் பற்றிக் கேட்கவே தேவையில்லை. இப்போது ஜே.வி.பி., ஹெல உறுமயவைத் தவிர, நாடாளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகள் புலிகளுடன் பேச்சுநடத்வதை எதிர்க்கவில்லை.

இந்த நிலையில் சிறுபான்மை அரசு ஒன்றை நடத்தும் சந்திரிகா எப்படி இந்தச் சிக்கலைச் சமாளிக்கப் போகின்றார். கூட்டணியிலுள்ள ஜே.வி.பி. யைக் கைகழுவிவிட்டுத் தேசிய அரசு ஒன்றை அமைத்து புலிகளுடன் பேச்சு நடத்துகிறதைவிடச் சந்திரிகாவுக்கு மிகப்பொருத்தமான வேறு தெரிவு இருக்கமுடியாது.

இப்போது ஜே.வி.பி. சந்திரிகாவின் திட்டங்களுக்கு ஒத்துக்கொண்டலும்கூட அது நீண்ட நாள் நிலைக்காது புலிகளுடனான பேச்சுக்களைவிட இந்த அரசு உட்கட்சிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே அதிக நேரத்தைச் செலவிட நேரிடும். இது தான் உண்மை.

- சுபத்ரா -

ஈழமுரசு
ஒரேயப்பா
POOBALAM WEEKLY

திரிசங்கு ஜே.வி.பி.

கடந்த காலங்களில் சிறீலங்காவின் ஆட்சியை திரும்பிப் பார்த்தீர்கள் என்றால், அங்கு ஆளும் கட்சியில் இருப்பவர்கள் போர் குறித்து பேசுவார்கள். ஆனால் எதிர்க் கட்சியில் இருப்பவர்களோ சமாதான பிரியர்கள் போல் பேசுவார்கள். எதிர்க்கட்சி என்றால் எதிர்ப்பது அல்லது எதிரான கருத்தை முன்வைப்பது என்ற அர்த்தம் என்று புரிந்துகொண்டதானாலா அல்லது வேறு காரணங்களா தெரியவில்லை. ஆனால், இருதரப்பும் எதிர் எதிரான கருத்தை எப்போதும் வெளியிட்டு வரும்.

ஆனால் இப்போது காலம் தலைகீழாக மாறிவிட்டது. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சமாதானம் குறித்துத்தான் பேச முடியும். எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் போர் குறித்து பேச முடியாது, எனினும் சமாதானத்திற்கு எதிராகப் பேச முடியும்.

ஐ.தே.க அரசு தமிழ் மக்கள் மீது போரைக் கட்டவிழ்த்து விட்டபோது, சந்திரிகா தன்னை சமாதான தேவதையாகக்காட்டி தமிழ் மக்கள் மனதில் இடத்தைப் பிடித்து, ஆட்சியையும் பிடித்தார். ஆட்சிக்கு வந்த பின்னர் மீண்டும் சமாதானத்தைக் கைவிட்டு போர் தொடுத்தார். ஆனால் முன்னர் போர் தொடுத்த ஐக்கிய தேசியக் கட்சியோ, சமாதானம் பேசத் தயார் என அறிவித்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

ஆனால், எதிரணிக்குச் சென்ற சந்திரிகாவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ சமாதானத்திற்கு எதிராக செயற்பட்டது. சமாதானப் பேச்சுக்களை குழப்புவதிலும் வெற்றியும் கண்டது. இப்போது மீண்டும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் கூட்டணியும் ஆட்சியமைத்துள்ளது. சந்திரிகாவும் அவர் குழாமும் இரண்டாவது தடவையாக இப்போது சமாதானம் குறித்து பேசுகின்றார்கள். ஆனால், ஆளும்கட்சியாக இருந்தபோது சமாதானம் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியோ அதற்கு எதிரான செயற்பாடுகளை இப்போது முடுக்கிவிட்டு வருகின்றது.

இந்நிலையில், முன்னர் போர் தொடர வேண்டும், விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும், நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று குரலெழுப்பிய ஆளும் கூட்டணிக்குள் இருக்கும் ஜே.வி.பியின் நிலையோ திரிசங்குவின் நிலையாக இருக்கின்றது. போர் குறித்தும் பேச முடியாமல், சமாதானத்திற்கும் ஆதரவு கொடுக்க முடியாமல் முழிக்கின்றார்கள். எந்த முகத்துடன் நோர்வேயின் மத்தியஸ்துடன், விடுதலைப் புலிகளின் முன்னால் பேச்சுக்கு செல்வதற்கு சம்மதிப்பது என்பதில் குழம்பிப்போய் இருக்கின்றார்கள். அதனால், நேரத்திற்கு நேரம் மாறிமாறி அறிக்கைகளை விட்டு தாங்களும் குழம்பி தென்னிலங்கை மக்களையும் குழப்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஜே.வி.பி. நிலை இவ்வாறென்றால் சந்திரிகாவின் நிலையும் அவ்வாறுதான் இருக்கின்றது. சிறுபான்மை பலத்துடன் ஆட்சியமைத்த பின்னர், சமாதானப் பேச்சுக்கள் குறித்து சந்திரிகா வெளியிடும் கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவையாக உள்ளன. சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா இல்லையா என்பதில் கூட குழப்பங்கள். எனினும் அவசர அவசரமாக நோர்வேக்கு அழைப்புவிடுத்து தன்னை மீண்டும் ஒரு சமாதானப் பிரியையாகக் காட்ட முனைந்துள்ளார். அவ்வாறு தன்னை அவர் காட்டாது போனால், சர்வதேச நிதியுதவிகளை இழக்கவேண்டி வந்துவிடும் என்பதே அதற்கு முக்கிய காரணம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன்நகர வேண்டுமானால் அதற்கான அரசியல், இராணுவ சூழ்நிலைகள் பேணப்படவேண்டும். சமாதானத்தை சந்திரிகா நேசிப்பவராக இருந்திருந்தால் முப்படைத் தளபதியாக இருந்துகொண்டு, இராணுவத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.

ஆனால், இன்று கிழக்கில் தொடரும் சம்பவங்கள் அவ்வாறு இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன. நிரந்தரமாக ஒரு தீர்வினைக்காண வேண்டும் என்றால் சிங்கள தரப்பு முதலில் ஒரு நிலையான நிலைப்பாட்டிற்கு வரவேண்டும். சமாதானத்தை உண்மையாக நேசிக்க வேண்டும். விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு மாறவேண்டும். அப்போதுதான் சமாதானத்திற்கான ஆரம்பமே நிகழமுடியும்.

அதற்கு இனவாதமும், போர் வெறியும், ஆளும் ஆசையும் இடம்கொடுக்குமா..?

குருநகல் இலக்கு

யாருடைய நலன்களுக்காக மேற்கொண்ட திட்டம்?

இலங்கையின் கிழக்கே கடந்த மாதம் நடந்து முடிந்த ஒரு நிகழ்வின் முடிவு ஏதுமற்றதாக ஆன போதிலும், அதனால் ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் பற்றியும் இப்போது சிந்திக்கவேண்டியுள்ளது. மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதியாக இருந்த கருணா அவ் அமைப்பில் இருந்து விலகிச் செயற்படப்போவதாக அறிவித்து உலகிற்கு பரபரப்பை ஏற்படுத்தினார். ஆனால், பிரபாகரனின் சக்திமிக்க, தந்திரோபாயமான இராணுவ நடவடிக்கையின் விளைவாக தனது எதிர்பார்ப்புக்கள் எல்லாம் கைவிட்டது மட்டுமன்றி தன்னோடு ஒன்றாக இருந்த தோழர்களையும் விட்டுவிட்டு தப்பியோடியது மட்டும்தான் எஞ்சியிருந்தது.

கருணாவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த கிழக்குப் பிராந்தியத்தின் வாகனப்பிரிவின் பொறுப்பாளராக செயற்பட்ட பிள்ளையான் என அழைக்கப்படும் கனகசபை துரைராஜசிங்கம் என்பவர் அண்மையில் மத்திய சிறீலங்காவின் குருநாகல் நகரப்பகுதியில் மர்மமான முறையில் மரணத்தைத் தழுவினார். மேற்படி நபர் கிழக்கு மாகாணத்தில் இருந்து வடபகுதித் தமிழர்கள் வெளியேற வேண்டும் என்ற கோசத்தை முன்வைத்து அதற்கான செயற்பாடுகளில் இறங்கிய ஒரு முக்கிய நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் நீண்டகால உறுப்பினராக இருந்த இவர், தனது சொந்த மண்ணில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு அந்நியப் பகுதியில் கொலையுண்டுபோன விடயம் சிறீலங்காவில் பலவிதமான சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

குருநாகல், தம்புள்ளபிரதான வீதியில் சந்தடிமிக்க ஒரு இடத்தில் அதிகாலை நான்கு மணியளவில் பாரிய குண்டுவெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. தேர்தல் காலம், பௌத்த வெசாக் காலம் போன்றவைகள் காரணமாக வெடிவெடிப்பது சாதாரணமான ஒரு விடயமாக இருந்தபோதிலும் மேற்படி குண்டுச் சத்தம் நகரையே உலுக்கிய ஒரு நிலையில், நகரையே அச்சத்திற்குத் தள்ளியது. ஆனாலும் காலை வரை யாரும் அப்பகுதிக்கு செல்லவில்லை. உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். உடல்சிதறி கிடந்த இடத்தில் ஒரு கைத்துப்பாக்கி, அதற்கான ரவைத் தொகுதி மற்றும் வெகு அருகில் ஒரு கைத் தொலைபேசி போன்றவை காணப்பட்டன. விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸ் அதிகாரி, கைத் தொலைபேசி பாரிய குண்டுவெடிப்பின் போதும் எந்தவித சேதமடையாமல் இயங்கும் நிலையில் காணப்பட்டதையிட்டு அதிர்ச்சியடைந்தார். அவரது எண்ணப்படி அக் கைத்தொலைபேசி பிள்ளையான் இறந்ததன்பின் அங்குவந்த யாராவது, ஒருவரால் கைவிடப்பட்டிருக்கலாம் என கூறினார். இறுதியாக அத் தொலைபேசியில் இருந்து வெளியே சென்ற அழைப்பு எண்களுடன் மீண்டும் தொடர்பை எற்படுத்த முயன்றபோது எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. உடனடியாக விசேட பொலிஸ் அணியினர் அத் தொலைபேசி எண்களின் மூலத்தை அறிந்துகொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதற்கிடையே அப்பகுதியில் மக்கள் கூடத்தொடங்கினர். அவர்களுக் கிடையே நின்ற ஒரு பெண் இறந்துகிடக்கும் நபரைத் தான் கண்டதாயும், சில தினங்களுக்கு முன் அருகிலுள்ள சிற்றுண்டிச்சாலையில் உணவருந்தியதாயும் அருகிலிருந்த ஒருவருக்கு கூறியதை, சிவில் உடையில் நின்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டார். உடனடியாக அப்பெண் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார். இதில் அவர் ஒரு இஸ்லாமிய மதத்தவர் என்றும் அவரது கணவர் மத்திய கிழக்கில் தொழில் புரிகின்றார் என்றும் தெரியவந்தது. இது ஒருபுறமிருக்க, தொலைபேசி எண்களைக் கண்டறிவதற்காகச் சென்ற குழுவினர் அத்தொலைபேசியில் இருந்த எண்களில் பெரும்பான்மையானவை கொழும்பையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் சேர்ந்தவை என்றும் ஒரு இலக்கம் மாத்திரம் குருநாகலை சேர்ந்தது என்றும் கண்டறிந்தனர். உடனடியாக பொலிஸ் அணியினர் அந்த இலக்கத்திற்கு உரியவரது வீட்டை தட்டியபோது அங்கு அவர்களுக்கு சந்தோசமான செய்திகள் காத்திருந்தன.

அந்த வீட்டின் உரிமையாளர் ஒரு இஸ்லாமியர் என்றும் அவர் கிழக்கில் ஏறாவூரை சொந்த இடமாக் கொண்டவர் என்றும் பொலிஸ் குழுவினர் அறிந்து கொண்டனர். 80களின் பிற்பகுதியில் கிழக்கில் மதக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல்கள் சில சமயங் களில் இனங்களுக்கிடையிலான மோதல்களாயும் வெடித்தன. இதனிடையே சிக்கிக்கொண்டவர்களில் மேற்படி நபரும் ஒருவர். இவர் ஜிகாத் எனப்படும் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பின் அங்கத் தவராக செயற்பட்டு வந்தார். இவ் அமைப்பிற்கு எதிராக நடவடிக்கைகள் ஆரம்பிக்க, இவர் கைகளில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு குருநாகல் வந்து சேர்ந்தார். 1986ம் ஆண்டில் குருநாகலில் வர்த்தகத்தை ஆரம்பித்த இவர், விரைவிலேயே குறிப்பிடத்தக்கதொரு புள்ளியாக மாறிவிட்டார். மேற்படி நபருக்கு சொந்தமான சில காணிகள் அண்மையில் கருணாவால் மீட்டுக்கொடுக்கப்பட்டன என்றும் அதனையடுத்து கருணா குழுவினருக்கும் இவருக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் ஆரம்பமாகின என்றும் நம்பப்படுகிறது. கருணா தப்பியோடியதன் பின் அவர் சார்ந்த, அவரோடிருந்த போராளிகளை பாதுகாப்பாக இவர் தங்கவைத்துள்ளார். கருணா விவகாரம் ஆரம்பமாகிய நாள் முதல் பலர் இவரிடம் பாது காப்பாகத் தங்கியிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. அந்த வகையிலேயே, கஜேந்திரன் எனும் கருணா குழு உறுப்பினர் மற்றும் அவரது தோழர்கள் சிலரை மேற்படி இஸ்லாமிய நபரே மட்டக்களப்பில் இருந்து இரகசியமாகக்கொண்டு வந்து தனது வீட்டில் வைத் திருந்து, வெளிநாட்டுக்கு செல்வதற்கு கடவுச்சீட்டு எடுத்துக்கொடுத்து அனுப்பியுள்ளார். கஜேந்திரன் தான் குருநாகலில் இருந்து வெளியேறும் முன்பாக ஒருநாள் மேற்படி பிள்ளையானை இஸ்லாமிய நண்பருக்கு அறிமுகம் செய்துவைத்து, தனது முக்கியமான ஒரு நண்பர் இவரென்றும் இவருக்கு உயிராபத்து உண்டு என்றும் வெளிநாடு செல்வதற்கு உதவி புரியவேண்டும் என்றும் வேண்டிச்சென்றார்.

கருணா வெளியேறிய பின் பிள்ளையான் குருநகாலில் இருந்து கொழும்பிற்கு இடம்மாறியுள்ளார். அங்கு தலைமறைவாக தங்குமிடங்களில் மாறிமாறி நின்று கடவுச்சீட்டு பெறும் முயற்சிகளில் இறங்கினார். இவருக்கான கடவுச்சீட்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி கிடைத்தது. உடனடியாக தனது இஸ்லாமிய நண்பர் அவரது பயணத்தை ஒழுங்குபடுத்தும் விடயங்களை மேற்கொண்டார். இதன்பின்பாக 25ம் திகதி ஏதோ ஒரு காரணத்திற்காக குருநாகலுக்கு வந்த பிள்ளையான் இஸ்லாமிய வர்த்தகரை சந்தித்துள்ளார். இச் சந்திப்பின்போது அவருடன் வேறும் இரண்டு நண்பர்களை அழைத்து வந்திருந்தார். அவ்விருவரும் கருணாவின் நண்பர்கள் என்றும் பயப்படவேண்டிய அவசியம் இல்லையென்றும் கூறினார். அன்று இரவு மூவரும் தங்கியிருந்தது அவ்வர்த்தகரின் இல்லத்திலேயே. மறுநாள் அதிகாலை நான்கு மணியளவில் மூவரும் எழுந்து எங்கையோ சென்றுள்ளனர். இதன் பின்பே குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

குண்டு வெடித்தவேளை அங்கிருந்த ஏனைய இருவரும் தப்பிச்சென்றுள்ளனர். ஒருவர் நகரப்பகுதியை நோக்கியும் மற்றையவர் நகரின் வெளிப்பகுதியூடாகவும் ஓடித்தப்பியுள்ளனர். பிள்ளையான் இறந்துகிடந்த முறையை பார்க்கும்பொழுது குண்டு அவருக்கு வெகு அருகிலேயோ கைகளிலேயோ இருந்திருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகிறது. வந்தவர்கள் இருவரும் மேற்படி நபரிடம் குண்டைக் கொடுத்துவிட்டு தூரத்தே சென்று வெடிக்க வைத்தனரா அல்லது மேற்படி இருவராலும் தான் கொல்லப் படாமல் பிள்ளையானே தன்னிடம் இருந்த குண்டை வெடிக்கவைத்து இறந்திருக்கலாமா என்றும் சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. பிள்ளையான் இறந்துகிடந்த இடத்திற்கு அருகே இரண்டரைக்கிலோ எடைகொண்ட கிளைமோர் குண்டு ஒன்றும் 50 மீற்றர் நீளமான வயரும் காணப்பட்டுள்ளன.

> **பிள்ளையானின் பிரதான இலக்காக புதிய கிழக்குத் தளபதி ரமேஷ் இருந்திருக்கலாம் என்றும் பொலிசார் நம்புகின்றனர்.**


கொழும்பில் வெளிநாடு செல்வதற்காக நின்ற பிள்ளையான் குருநாகலுக்கு மீண்டும் வந்தபோது தன்னுடன் மேற்படி குண்டினை கொண்டுவந்திருக்கவேண்டும் என்றும் பிள்ளையானின் பிரதான இலக்காக புதிய கிழக்குத் தளபதி ரமேஷ் இருந்திருக்கலாம் என்றும் பொலிசார் நம்புகின்றனர். ரமேஷ் அணியினர் கொழும்பிற்கு சென்றுள்ளனர் என்பதை அறிந்துகொண்ட பிள்ளையான் அவர் குருநாகல் வழியாக திரும்பிவரும்வேளை கிளைமோர் தாக்குதல் மூலம் அவரை அழிக்க நினைத்திருக்கலாம். இது யாருக்காக, யாருடைய நலன்களுக்காக மேற்கொள்ள திட்டமிடப்பட்டது என்பவை தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன. எப்படியாக இருந்தபோதிலும் கருணா விவகாரம் வடக்கு – கிழக்கில் முடிவுக்கு வந்தபோதிலும் தெற்கைப் பொறுத்தவரை தொடர்ந்தும் அச்சுறுத்தல்களையும், குண்டுச் சத்தங்களையும் ஏற்படுத்தும் ஒரு விவகாரமாகவே இருக்கப்போகின்றது. தென்பகுதியில் தங்களது தேவைகளுக்காக கொலை, கொள்ளை முயற்சிகளில் கருணாவின் நெருங்கிய சகாக்கள் ஈடுபடலாம் என்றும் அவர்களை அழிப்பதற்காக விடுதலைப் புலிகளின் விசேட குழுக்கள் தெற்கிற்கு அனுப்பப்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— சிங்கள மூலத்தில் இருந்து
தமிழில் உதயன்

சந்திரிகாவும் ஜே.வி.பியும் சமாதானமும்

சிறீலங்காவின் அரசுத்தலைவி சந்திரிகா குமாரணதுங்கா சமாதானம் பேச தயராகிவிட்டார்! சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு அனுசரணை வழங்கிவந்த நோர்வேயை மீண்டும் அழைத்து அவர்களது பணியினைத் தொடருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி விடுதலைப் புலிகளுடன் நடாத்தி வந்த சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பியது மட்டுமல்லாமல் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு, நோர்வேயின் சமாதானத் தூதுக்குழு ஆகியவற்றைக் கடுமையாக விமர்சித்தும் குற்றஞ்சாட்டியும் வந்தவர் சந்திரிகா, இன்று, ரணில் கையாண்ட அதே அமைப்பு முறையைக் கொண்டே சமாதானத்தை முன்னெடுக்க அவர் முயல்வதாகவே தெரிகிறது.

சுமார் ஒரு வருடத்திற்கு முன் சந்திரிகா, நாடாளுமன்றத்தைக் கலைத்தும் ரணில் அரசைக்கவிழ்க்க முயற்சிகள் மேற்கொண்டிருந்தவேளை, நோர்வேயின் முக்கியதஸ்தர் ஒருவரிடம் ஒரு தேநீர் விருந்தின்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார். 'திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஆட்சியை சந்திரிகா தலைமையிலான கட்சி கைப்பற்றினால் சமாதான முன்னெடுப்பின் நிலை என்னவாகும்' என்று! அதற்கு அந்த முக்கியஸ்தர் சிரித்தபடியே பதிலளித்தார், 'ஜே.வி.பி ஆட்சிக்கு வந்தாலும் சமாதானம் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை' என்று.



இன்று சிறீலங்கா அரசை முன்னாள் எந்தக்கட்சி ஆட்சிபுரிந்தாலும் விடுதலைப் புலிகளோடு சமாதானம் செய்வதைத்தவிர வேறு வழிகள் இல்லை. உண்மையில் சமாதானம் பேசி தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வொன்றைக்காண, அதாவது, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வொன்றினைக்காண முடியாவிடினும், அல்லது விரும்பாவிடினும், குறிப்பிட்ட காலத்திற்கு யுத்தமொன்று ஏற்படாதபடி சமாதானத்தை இழுத்துச் செல்லவேண்டிய அவசியம் சிங்கள அரசுகளுக்கு உண்டு.

சமாதானம் இவ்வாறு இழுபட்டுப்போகும் வழியில் ஒருகட்டத்தில் யுத்தம் வெடிக்கலாம். அவ்வாறு வெடித்தால், அதன் பழியை விடுதலைப் புலிகள் மீதே சுமத்தக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைச் சிங்கள அரசுகள் எதிர்பார்க்கின்றன. ரணில் தலைமையிலான அரசோ, சந்திரிகா தலைமையிலான அரசோ இரண்டுமே பேரினவாதம் என்கிற நாணயத்தின் இரு பக்கங்கள்தான்.

ஆளுகின்ற அரசாங்கத்தின் குறை நிறைகளை விமர்சித்து, அதனைச் சரியான வழியில் இட்டுச்செல்கின்ற பாரிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உள்ளது. அந்தவகையில் எதிர்கட்சி என்பது ஒரு மாற்று அரசாங்கமாகவே (ALTERNATIUE GOVERNMENT) செயற்படவேண்டிய தேவை உள்ளது. ஆனால், சிறீலங்கா, இந்தியா போன்ற நாடுகளில் இத்தகைய பண்பாடு முற்றாகவே இல்லை என்றுதான் கூறவேண்டும் இந்நாடுகளில் எதிர்க்கட்சி என்றால் எதிரிக் கட்சி என்பதே அர்த்தமாகிவிட்டது.

எல்லா விடயங்களிலும் குறைகாணுவதே இக்கட்சிகளினது நோக்கம். அதன் மூலம் ஒன்றைக் கவிழ்த்துவிட்டு அடுத்தது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முயலும். ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக எல்லா கொள்கைகளையும் கைவிட்டு யாரோடும் கூட்டுச்சேர்கின்ற மரபும் இன்று இந்நாடுகளில் வளர்ந்து வருகிறது.

புரட்சியொன்றின் மூலம் சிறீலாங்காவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்திய அமைப்பு தான் ஜே.வி.பி. அதற்காக நியாயமற்ற கொலைகள் பலவற்றை ஜே.வி.பியினர் அக்காலங்களில் மேற்கொண்டனர். சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரணதுங்கவைக் கொலை செய்தவர்களும் ஜே.வி.பி யினர் என்று சொல்லப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. அவ்வாறிருந்தும், அவர்களோடு கூட்டுச்சேர்ந்தால் தான், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என சந்திரிகா நம்பியதால் பழைய வரலாற்றை வசதியாக மறந்துவிட்டார். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையற்றேனும் ஒருவாறாக சந்திரிகா - ஜே.வி.பி கூட்டணி வெற்றி பெற்றுவிட்டது. இந்த வெற்றி என்பது சந்திரிகாவின் மிகப்பெரிய தோல்வி என்பதே உண்மை. உண்மையில் வெற்றிபெற்றது ஜே.வி.பி. தான்! சந்திரிகா பெற்றுக்கொண்டதாக அவர் நம்பும் வெற்றி கூட்டரசாங்கத்தில் ஜே.வி.பியினரைக் கட்டுப்படத்தக் கூடியதாக அமைந்திருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. ஜே.வி.பி. யே சந்திரிகாவைக் கட்டுப்படுத்தும் சக்தியாக வளர்த்து விட்டது.

அறுதிப் பெரும்பான்மையற்ற அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க இன்னும் ஏழு ஆசனங்களின் தேவை. கூட்டணியான ஜே.வி.பி யினரின் கட்டளைகளுக்கு இணங்கவேண்டியுள்ள நிர்ப்பந்தம் என பல்வேறு நெருக்கங்களுடன், சந்திரிகா சமாதானம் பேச வந்திருக்கிறார்.

விட்ட இடத்திலிருந்தே பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றனர். முதலிலிருந்தே இதை ஆரம்பிக்க வேண்டும் என்று சந்திரிகா விரும்புகிறார். அதாவது 'அ' வில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பது அவரது ஆசை. ரணில் அரசு மேற்கொண்ட பேச்சுவார்த்தையே இரண்டு வருடங்கள் தமிழ்மக்கள் எதிர்பார்த்த எவ்வித பலாபலனுமின்றி இழுபட்டு, பின்னர் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி வரைபோடு நின்றுபோனது. இனிவரும் பேச்சுவார்த்தை இடைக்காலத் தன்னாட்சி வரைபினை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட வேண்டியதுதான் யதார்த்தம். இதிலிருந்து ஆரம்பிப்பது சிக்கலானது என சந்திரிகா உணர்கிறார். இதிலிருந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானால் சமாதானத்தை இழுத்துச்செல்வது கடினமாகவே இருக்கும் என்பதை சந்திரிகா தெரிந்துவைத்திருக்கிறார். இதன் காரணமாகவே, ரணில் விக்கிரமசிங்க, தான் விட்டஇடத்திலிருந்து சந்திரிகா சமாதானப்பேச்சுக்களைத் தொடர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். சமாதானம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அல்ல சந்திரிகாவைச் சிக்கலுக்குள் தள்ளவேண்டும் என்பதே ரணிலின் தற்போதைய நோக்கம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. யின் நிலைப்பாடு தந்திரோபாயம் நிறைந்தது, கூர்மையானது! சந்திரிகா சமாதானம் செய்யப்புறப்பட்டமை, நோர்வே மீண்டும் வரவழைக்கப்பட்டமை, கதிர்காமர் புலிகளே ஏகப்பிரதிநிதிகள் என உணர்ந்து வருகிறோம் என கூறியமை எல்லாவற்றையும் கண்டும் காணாதது போல் விட்டுவிட்டு, ஜே.வி.பி. தனது நோக்கத்தில் கண்ணாகவுள்ளது. இடைக்கிடையே சில விமர்சனங்களை வெளியிட்டாலும், சமாதானப்பேச்சுக்களில் தடைக்கல்லாகத் தற்போதைக்கு ஜே.வி.பி இருக்காது. ஏனெனில் ஜே.வி.பி யின் வழி தனிவழி, எழுபதுகளில் ஆயுதப் போராட்டமொன்றை முன்னெடுத்துச் சிறீலங்காவைத் தனது ஆளுகைக்குள் கொண்டுவரலாம் என கடும்



பிரயத்தனம் செய்த ஜே.வி.பி, தனது அந்தப்போராட்டம் மூலம் சாதாரணச் சிங்கள மக்களை ஈர்த்துக்கொள்வதிற் கூட தோல்வியடைந்தது. ஆயுதப்போராட்டத்தைத் துறந்து அரசியல் கட்சியாகத் தம்மை மாற்றிக் கொண்டதன்பின் ஜே.வி.பி. யின் வளர்ச்சி என்பது அபரிமிதமானது. சாதாரண சிங்கள மக்கள் சமீப காலங்களிற் கூட ஜே.வி.பி. என்ற பெயரை உச்சரிப்பதற்கே பயந்தனர். குறிப்பிட்ட சில சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஆதரவிருந்தபோதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆதரவு தற்போதுதான் ஜே.வி.பி. யினருக்கு அதிகரித்து வருகின்றது. ஓர் எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் அமர்ந்து ஆளும் கட்சியிடம் கேள்விகள் கேட்பதையே ஜே.வி.பி. யிடம் சிங்கள மக்கள் எதிர்பார்த்தனர். அரசாங்கத்தை ஆளுகின்ற அமைப்பாக ஜே.வி.பி. தோற்றம் பெறுவதைச் சிங்கள மக்கள் விரும்பவில்லை. இதனை ஜே.வி.பி. யும் உணர்ந்தே வைத்துள்ளது. தற்போது தமக்குக்கிடைத்துள்ள மக்கள் ஆதரவுடனும், பெற்றுக்கொண்டுள்ள அமைச்சுக்களுடாகவும் பாரிய வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டு ஒட்டுமொத்தமான சிங்கள மக்களின் ஆதரவைப்பெற வேண்டுமென்பதே ஜே.வி.பி. யின் முக்கியமான இலக்கு. இந்த இலக்கினை அடைவதானால் தான் சார்ந்துள்ள கூட்டரசாங்கம் சில வருடங்களுக்கேனும் ஆட்சியிலிருக்க வேண்டும். ஆட்சியும் அபிவிருத்தியும் தொடரவேண்டுமானால், சமாதானமும் தொடர வேண்டும். சமாதானம் தொடர வேண்டுமானால் விடுதலைப்புலிகளுடன் சந்திரிகா பேசுவதைத் தடுக்க முடியாது. இது தான் ஜே.வி.பி.. யின் நிலை. சனாதிபதி சந்திரிகாவின் நகர்வு இவ்வாறு அமைந்துள்ளது. சமாதானப்பேச்சுக்களுக்கான ஆரம்பப்புள்ளியொன்றை இடுவதன் மூலம், அடுத்துவரும் பாராளுமன்றக்கூட்டத்தில் தனது அரசிற்கான பெரும்பான்மையைச் சரிசெய்துவிடலாம் என அவர் நம்புகின்றார். இருபத்திரண்டு ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் சமாதானப்பேச்சுக்கள் விடுதலைப் புலிகளுடன் நடை பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், தமக்கு ஆதரவளிக்காவிட்டாலும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் நடுநிலையேனும் வகிக்கலாம் எனச் சந்திரிகா நம்புகின்றார். மலையகத்தில் தோட்டத்தொழிலாளர்களுக்குச் சொந்தமாகக் காணியும் வீடும் வழங்குவதாக அறிவித்ததன் மூலம், மலையகத் தலைவர்களைக் குறிப்பாக ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான

> *ரணில் விக்கிரமசிங்க, தான் விட்ட இடத்திலிருந்து சந்திரிகா சமாதானப்பேச்சுக்களைத் தொடர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். சமாதானம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அல்ல சந்திரிகாவைச் சிக்கலுக்குள் தள்ளவேண்டும் என்பதே ரணிலின் தற்போதைய நோக்கம்.*

இ.தொ.கா வின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் முயல்கிறார். முஸ்லிம் காங்கிரஸ்காரர்களையும் எவ்வாறு வளைத்துக்கொள்ளலாம் எனவும் சிந்திக்கிறார்.

எது எவ்வாறாயினும் அதிகாரத்தைக்காப்பாற்ற வேண்டும். அதில் நிலைத்திருக்க வேண்டும். அதிகார போதைதரும் சுகங்களில் திளைத்திருக்க வேண்டும் என்கிற நோக்கங்களுக்காகச் சிங்களத் தலைமைகள் மேற்கொள்ளும் நகர்வுகள், கையாளும் தந்திரோபாயங்கள் யாவும் நீண்ட காலத்திற்கு நின்று பிடிக்கப்போவதில்லை என்பதை, காலம் அவர்களுக்கு உணர்த்தும்.

– வன்னியிலிருந்து **விவேக்.**



வன்னியில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தேசியத்தலைவருடன் தொடர் சந்திப்பு

(கிளிநொச்சி - 10.05.2004)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு சென்று தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்களை சந்தித்துள்ளார். கடந்த 6ம் திகதி வியாழக்கிழமை இலண்டனிலிருந்து யூ.எஸ்.507 விமானத்தில் புறப்பட்ட அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கமும், இலண்டனுக்கான விடுதலைப் புலிகளின் பிரதிநிதி சாந்தனும் 7ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.55 மணியளவில் சிறீலங்காவின் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சென்றிறங்கினர். சிறீலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் விமானநிலையத்தில் அவர்களை வரவேற்றார். விமான நிலையத்திற்கருகிலுள்ள தங்கும் விடுதி ஒன்றில் வைத்து அன்ரன் பாலசிங்கத்தோடு சுமார் ஒரு மணித்தியாலம் நோர்வே தூதுவர் கலந்துரையாடினார். சமாதானப்





பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வருகையையொட்டி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அங்கிருந்து சிறீலங்கா விமானப்படையினரின் விசேட உலங்குவானூர்தி மூலம் வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் வன்னி சென்ற அவர்களை, கிளிநொச்சி பொது மைதானத்தில் வைத்து தமிழீழ அரசியதுறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா உட்பட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் வரவேற்று அழைத்துச்சென்றனர். தொடர்ந்து கிளிநொச்சியில் வைத்து தேசியத்தலைவர் அவர்களை அன்ரன்பாலசிங்கம் சந்தித்து கலந்துரையாடினார். சுமார் ஒரு வருட கால இடை வெளிக்குப்பின்னர் வன்னிக்கு சென்றுள்ள அரசியல் ஆலோசகரை தேசியத்தலைவர் இன்முகத்துடன் வரவேற்று உரையாடினார். புதிய அரசுடன் நடைபெறவுள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் உரையாடப்பட்டது.

இலண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விமானத்திலேறுவதற்கு முன்னர் நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சூல்ஹைமையும் சந்தித்து உரையாடியது குறிப்பிடத்தக்கது.



TRISTAR ALLIANCE

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும்
மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்
BYBA TOURISME

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி,
ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
TRISTAR ALLIANCE
18, Rue Démarquai, 75010 Paris
Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05
Métro: Gare du nord
www.tristarassurance.com
Pub-Fr-40

ஆதீஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506



S.K. Rajan Jewellers

24, Rue Perdonnet, 75010 Paris.

தொடர்புகளுக்கு: Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN - Mº: La Chapelle / Gard du Nord.

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22K இல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

எஸ்.கே.ராஜன் ஜுவலர்ஸ்

வெளிவந்துவிட்டது!

அம்மா நலமா?

DVD இல்
வெளிவந்துள்ளது!





காளி கம்பா ஜோதிட நிலையம்

GOOD NEWS



இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சாஸ்த்திரி துளசிதாசமூர்த்தி அவர்கள் கைரேகை, சாதகம், முகநாடி, ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களையும் உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம், குடும்ப பிரச்சனைகள் ஆகியவை பற்றி விபரமாக அறிந்துகொள்ள இன்றே நாடுங்கள்.

(விசா இமிகிறேசனுக்குச் சிறப்பு பூஜை செய்து கொடுக்கப்படும்)

Port: 06 33 29 72 64

La Chapelle Cyber Café
70, rue Louis Blanc - 75010 Paris
Tél: 01 42 09 79 91

திறந்திருக்கும் நேரம் காலை 10 மணியிலிருந்து மாலை 9 மணி வரை

பூபாளம் பொத்தகசாலை

உங்களுக்குத் தேவையான அனைத்துவகையான பொத்தகங்களையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

உங்களுக்குத் தேவையான நூல்களை குறுகிய நாட்களுக்குள் பெற்றுத் தருவோம்.

தமிழீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய CDக்கள், மற்றும் தமிழீழத்தில் வெளியாகும் நூல்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

நூலகம்! நூலகம்!! நூலகம்!!!

தமிழ் மக்களுக்கோர் இனிய செய்தி!

பூபாளம் பொத்தகசாலையுடன் இணைந்த புதிய சேவை.
பல்துறை சார்ந்த 2000 க்கும் மேற்பட்ட பொத்தகங்களை வாசிப்பதற்கான அரியவாய்ப்பு.
பூபாளம் நூலகத்தில் இப்பொழுதே நீங்களும் ஒரு அங்கத்தவராகி உங்களுக்குப் பிரியமான பொத்தகங்களை வாசித்துப் பயன்பெறுங்கள்.

பூபாளம் பொத்தகசாலை
22, Rue Perdonnet, 75010 Paris, France.
Tél: 01 40 05 95 15

பூபாளம் Informatique

ORDINATEUR COMPLET
(OCCASION)

சிறப்பு மலிவு விற்பனை

à partir de 150 Euro

Ecran 15”
u Centrale PII, PIII ou Celeron
Claviet
Souris
Haut Parleur (150 watts)

விபரங்கட்கு
தொடர்புகொள்ளவும்.



12 – 18 மே 2004

முரசு இதழ்

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

இன்று புலியாய்ப் பிறந்தோம்

இன்றைய நாள் ஓர் இனிய நாள். அப்படிச் சொல்லலாமா. ஓம் சொல்லலாம். தாராளமாகச் சொல்லலாம்.

குட்டக்குட்ட தலை குனிந்து
வெட்ட வெட்ட தலை சரிந்து
பட்ட மரமாய் பாழ்பட்ட காலம்போய்
எட்ட முடியா உயரம் தொட்டநாள்.
நம் வாழ்வு துலங்கியநாள்.

இன்றைய நாள் இதனைச் சொல்கின்றோம். என்றைய நாளும் போலல்ல இன்றைய நாள். அதனால் சொல்கின்றோம். அன்றைய காலம் போயிற்று. அல்லல்பட்டு துடித்த காலம் ஓடிற்று. அது இன்றைய நாளில் இருந்து தொடங்கிற்று. அதனால் சொல்கின்றோம்.

1976 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி

அந்தநாளைக் குறித்துக்கொள்ளுங்கள். நினைவில் கொள்ளுங்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் என்று ஈழத்துத் தமிழ்த் தேசிய விடுதலைச் சூரியனுக்கு விலாசம் குறித்துக்கொண்ட நாள். வெற்றியை நமதாக எடுத்துக்கொண்ட நாள். நம்மை ஈழத்துத் தழிழரை புலிகள் என நம்மை அணைவோடும் நம்மைப் பகைவோரும் பதிவுசெய்த நாள்.

எலி என எம்மை இகழ்ந்தவர் நடுங்க
புலி என செயல் செய்யப் புறப்பட்டநாள்.

நறுக்குவோம் பகையின் வேர். நாம் புலிக்கூட்டம். குறுக்குவோம் அயலார் ஆட்சி. கூண்டோடு ஒழிப்போம் என்று கொள்கை முழங்கி, விடுதலைத் தீ கொழுந்துவிட்டெரிய வந்தநாள். தமிழுக்கு விலங்கிட்டு தாயகம் பற்றி, நமக்குள்ள உரிமையை தமக்கென்பாரை தட்டிக்கேட்க, தவிடுபொடியாக்க வந்தநாள். விட்டுக்கொடுக்கோம். விலைபோகோம். எட்டுத்திக்கும் எம் வல்லபம் காட்டுவோம். என்று வந்தநாள். வாளும், வேலும், வில்லும், ஈட்டியும் இன்னும் இருக்கக்கூடிய எல்லா ஆயுதங்களையும் ஏந்திய நாள். ஏறுபோல் நிமிர்ந்து போரில் ஏறிய நாள். தமிழ் வீரர் புலி வீரராய் பொங்கியநாள். விடுதலைபெற ஏங்கிய நாள்.

இந்த நாளின் பின்னர் தான், நாம் தமிழராய் தலை நிமிர்ந்தநாள். மனிதராய் மற்றோர் மதிக்க வாழ்ந்தநாள். எம்மிடம் குளம் இருந்தது. வயல் விளைந்தது. வளம் மிகுந்தது. ஆனால் வாழ்ந்ததில்லையே. வாழ எதிரி விட்டு வைத்ததில்லையே!

எம்மிடம் கடல் இருந்தது. கப்பல் ஓடியது. வலை விரிந்தது. மீன் விளைந்தது. ஆயினும் வாழ்ந்ததில்லையே! யாரும் வாழ விட்டதில்லையே.

நமக்கும் காற்று வீசியது. நம்மிடமும் காதல் பெருகியது. வாடை என்றும், சோளகம் என்றும் வசந்தம் என்றும், விழாநாள் என்றும் வந்துபோயினதான். ஆயினும் வாழ்வு செத்துப்போயினவே!

நதி நகர்ந்த நாடுதானே நமது. நமக்கு எழுதப்பட்ட விதிதானே வேறு. நாம் தமிழராய் பிறந்தோம் என்பதைத் தவிர, நம் வாழ்வில் தவறு என்ன செய்தோம்? நமக்கும் அம்மா இருந்தா. நம்மை ஆசையாய்ப் பெற்றா. அமுதூட்டி வளர்த்தா. நாமும் மழலை மொழி பேசினோம். நாமும் தளிர்நடை பயின்றோம். நாமும் சின்னச்சின்னச் சட்டிகளில், சிரட்டைகளில் சோறு காய்ச்சி விளையாடினோம். கறிகள் செய்து பகிர்ந்தோம். அம்மாவை விட்டு விட்டு பள்ளிக்கூடம் போக முடியாது என்று அடம் பிடித்து அழுதோம். ஆசிரியரிடம் 'அச்சா' என்று சொல்லும் படியாய்ப் படித்தோம். பின்னேரங்களில் விளையாடினோம். பொழுதுபட்டால் முகம் கழுவி சாமிகும்பிட்டோம். இரவு படிக்க மேசையின் முன் குந்தினால் நித்திரை தூங்கினோம். அக்கா, அண்ணா, தம்பி, தங்கை என்று சண்டை பிடித்தோம். உயிர்ப்புடன் இருந்தோம். உணர்வாய் இருந்தோம்.

மழலை மொழி பேசினோமே! அதனுடன் நாம் அப்படியே இருந்திருக்க வேண்டும். அசையாது வாழ்ந்திருக்க வேண்டும். ஊமை மொழி பேசியிருந்தாலும் ஒன்றுமில்லை. நாக்கை வளைத்து, நெளித்து, உதட்டைக் குவித்து, சுளித்து, நாங்கள் தமிழ்மொழி பேசி விட்டோம். அதுதான் செய்த தவறு. சரி செய்யப்பட முடியாத தவறு. மகாதவறு. அதுவும் இலங்கையில் இரு இனங்கள் வாழுகின்ற தேசத்தில், சொர்க்கத்தில் இருந்து நேரே வந்தோம் என்று சொல்லுகின்ற சிங்களம் அதிகாரம் செலுத்துகின்ற தேசத்தில், வீரஞ்செறிந்த சிங்கத்தின் பரம்பரையில் வந்தவர் நாம் என்று பறைகின்ற ஓர் இனம் வாழ்கின்ற தேசத்தில் நாம் வந்து பிறந்துவிட்டோம். வாழத் தலைப்பட்டோம். அதுதான் தவறு. மகாதவறு.

அல்ல, தமிழராய் நாம் பிறந்த தவறை

மாயோன் எதுவது...

இலங்கையில் மாத்திரம் செய்தோமல்லோம். இந்தியாவிலும் செய்தோம். இன்னும் இருக்கக்கூடிய நாடுகள் யாவற்றிலும் செய்தோம். நம்மூர்க்கவி புதுவை இரத்தினதுரை பாடுவார்:

கேட்டுப்பார்
யாருன்னைக் கணக்கில் எடுத்தார்?
மலேசியாவில் கூலி
சிங்கப்பூரில் சித்தாள்
ஆபிரிக்காவில் அடிமை
பர்மாவில் துரத்தப்பட்ட வேண்டாத ஆள்.
இத்தனை கோடிபேர் இருந்தும்,
இந்தியாவில் மட்டும் என்னவாம்
ஆரியனுக்கு அடிமைதானே?
கோயில் கட்டி கும்பாபிஷேசம் நடத்தியபோதும்
நீ வாசலுக்கு வெளியே நின்றுதானே வணங்கினாய்.
உன் யானைப் பலமறியாது நசிந்தாய்
ஆரியன்தானே ஆள்கின்றான்

எங்கும் நாம் அடிமை. அங்கும் தான். இங்கும்தான். ஆரியன் தானே ஆள்கின்றான். ஹிட்லர் வழிவந்தவன்தானே நமக்கு இம்சை செய்கின்றான். விலங்கிடுகின்றான். தாம் தூய்மையான இனம். நாம் கூறு கெட்ட இனம் என்று தூற்றுகின்றான்.

அட, மலையகத்தில் வாழ்ந்து மலைகளை மாத்திரம் கண்டிருந்து தேயிலைக்கு உரமாகி, கடலையே காணாதவரை, கப்பலையே தெரியாதவரை கள்ளத்தோணி என்கின்றானே! இது என்ன கதை! **கள்ளத் தோணிகள்** என்று சொல்லக் காரணம் அவர்கள் தமிழர்கள். அதுவன்றி வேறு என்ன காரணம்?

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்றார் மகாமேதை **கார்ல்மார்க்ஸ்** அவர்கள். சிங்களத் தொழிலாள வர்க்கம் நமக்குத் தோள்கொடுக்கும் என்று நம்பினோம். மார்க்சீய வழி மார்க்கத்தைக் கண்டவர்கள். கொம்மியுனிசக்கொள்கை கொண்டவர்கள். அவர்கள் தோள் கொடுப்பார்கள் என்று தோன்றியது. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்.

தோசைக்கடே, மசால்வடே, அப்பிட்ட எப்பா

தோசைக் கடைகளும் மசால் வடைகளும் எங்களுக்கு வேண்டாம். தோசைக் கடைகளும், மசாலை வடைகளும் குறித்து வந்தது தமிழரை. தமிழர்தம் உணவுப் பழக்கத்தை தமிழரின் உணர்வை அதனைத்தான் சிங்களத் தொழிலாளர் வர்க்கம், மார்க்சீய வழி வந்த இந்த, மகோன்னதர் சொல்லினர். **தமிழர் எங்களுக்கு வேண்டாம்.**

தமிழராய் பிறந்தோம். அதுதானே நாம் செய்த தவறு! என் அம்மா தமிழ் பேசிறா. என் அப்பா தமிழ் பேசிறார். என் அயல் தமிழ் பேசுகின்றது. என் சூழல் தமிழில் விளையாடுகின்றது. என் பள்ளிக்கூடத்தில் தமிழில் எல்லாம் சொல்லித்தருகின்றனர். யாரும் தமிழில் ஏதும் சொன்னால்தான் மற்றவர்களுக்குப் புரிகின்றது.

என் வாழ்வு தமிழ்.
என் உணர்வு தமிழ்.
என் அடையாளம் தமிழ்.

இதில் எங்கே வருகின்றது தவறு? எப்படி வருகின்றது தவறு. நாம் தமிழராய் இருப்பதில் தவறு என்ன?

எம்மை மனிதர் என்று எவரும் பார்க்கவில்லையே!
அடையாளப்படுத்தவில்லையே!
தமிழர் என்றுதானே அடையாளப் படுத்துகின்றார்கள். ஆரியர் நம்மை தமிழர் என்றுதானே அடக்குகின்றார்கள். சிங்களவர் நம்மை தமிழர் என்றுதானே சீறிச் சினக்கின்றார்கள்.

அனைவரும்தானே நம்மை தமிழர் என்று தாக்குகின்றனர். ஆகவே நாமும் தமிழர் என்று தாக்குதலை எதிர்கொள்வதில், தலை நிமிர்வதில் என்ன தவறு?

சுதந்திரத்தின் பின் இலங்கையை ஆள முதலில் ஒருவன் வந்தான். **டி.எஸ். சேனநாயக்கா** என்பது அவன் பெயர். அவன் தன் முதல் வேலையாக அறிந்து கொண்டது தமிழர்களை அழிப்பது. அதாவது தமிழர் நிலங்களை அபகரிப்பது. அதனூடாக தமிழர்களை இல்லாதொழிப்பது.

அடுத்து ஒருவன் வந்தான். அவன் பெயர் **பண்டாரநாயக்கா**. இலங்கையில் இனவாதத்தை விசமாக வீச்சுடன் கக்கிய முதல் மனிதன். 24 மணிநேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் என்றான். சிங்கள சிறீ எங்கும் எழுதினான்.

நண்டெழுத்து வேண்டாம் நமக்கு

என்று நம் **மகாகவி** முணுமுணுத்தார். நாமும் முணுமுணுத்தோம். முணுமுணுத்ததற்காக முறையாய் வாங்கினோம். இலங்கைத் தரையெங்கும் தமிழரின் இரத்த ஆறு ஓடியது.

பண்டார நாயக்காவின் மனைவி **சிறீமாவோ** பிறகு வந்தாள். தமிழ் என்ற சொல் வந்த இடமெல்லாம் தவறாது அழித்தாள்.

தமிழ் படிக்கும் எங்களுக்கு
தமிழிலேதான் பக்தி-அதை
தடுக்க வந்தால் திரண்டு எழும்
மாணவர்கள் சக்தி

என்று பாடியதற்காகப் பல்லை உடைத்தாள். பாதாளச் சிறையில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞரை அடைத்தாள்.

அடுத்து வந்தான் **ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.**

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று போரை தமிழரினுள் புகுவித்தான். ஆயிரக்கணக்கில் தமிழர்களின் உயிரை அழித்தான். அதனையே அடுத்து வந்த **பிரேமதாசா** என்பானும் செய்தான்.

(தொடர்ச்சி VIII ம் பக்கம்)

பின்லாடனைப் பிடித்து பிள்ளைநயினார்!

சிறுகதை

கதை உலகமெல்லாம் பரவியது!

பின்லாடனைப் பிடித்து, மட்டுமட்டாகத் தவறவிட்ட பிள்ளைநயினாரின் செய்தி கிடைத்தவுடன் அமெரிக்காவே ஆடிப் போய்விட்டதாகச் சனம் கதைத்தது.

ஆப்கானிஸ்தானில் பின்லாடனைத் தேடி அமெரிக்கா படையோடு போக டென்மார்க்கில் பின்லாடன் இருப்பதைத் தமிழரான பிள்ளைநயினார் எப்படி அறிந்தாரென எல்லோரும் துடித்தனர்.

பின்லாடனால் தாக்கப்பட்ட பிள்ளைநயினார் அறிவு மயங்கிய நிலையில் புலம்பிக் கொண்டிருந்தார். அவருக்கு நினைவு திரும்பியவுடன்தான் விபரம் அறியலாம். அமெரிக்காவில் இருந்து விசேட புலனாய்வுக்குழு புறப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது.

டென்மார்க் ஒசன்போ நகரின் வைத்தியசாலையில் சன நெரிசல் கரை



புரண்டோடியது. பின்லாடன் எப்படி டென்மார்க் வந்தார் என்று தொலைக்காட்சிகள் ஊகங்களைத் தெரிவித்தன. இங்குள்ள முதலாவது இலக்கத் தொலைக்காட்சியும், இரண்டாவது இலக்கத் தொலைக்காட்சியும் ஏட்டிக்குப் போட்டியாகத் தகவலை வெளியிட்டன.

திடீரென அம்புலன்ஸ் அலறும் ஓசை காதுகளைப் பிளந்தது. பதினைந்து அம்புலன்ஸ் வண்டிகள் வரை குளறியபடி வந்தன. ஒரு தமிழரை இரத்தக் காயங்களுடன் இறக்கினார்கள். அரசடி காங்கேசு அறிவு மயங்கிக் கிடந்தார். இரண்டு தமிழர்கள் கூட்டாகப் பின்லாடனை நெருங்கியபோது, அவர்களைப் பயங்கர ஆயுதத்தால் தாக்கிவிட்டு மறைந்திருக்கிறார் பின்லாடன், என்று வானொலியொன்று நேரடி வர்ணனை செய்தது.

ஆப்கானிஸ்தானைச் சுற்றி வளைத்து நிற்கும் போர்க் கப்பல்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கின்றன. அவைகளை

- கி.செ.துரை

உடனடியாக டென்மார்க் திரும்ப உத்தரவிடலாமென்று இராணுவ ஆலோசகர் ஒருவர் தொலைக்காட்சியில் பேசினார்.

ஒசன்போ பற்றைக் காடுகளை நோக்கி கவச வாகனங்கள் பறந்தன. துப்பாக்கி வேட்டுக்கள் கிரனைட் வீச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டன. பின்லாடன் தப்ப முடியாது என்று ஒரு டேனிஸ் நண்பர் கொடிகளை உயர்த்தி ஆட்டினார்.

பின்லாடனை எங்கே கண்டார் பிள்ளைநயினார்..? எப்படி நெருங்கினார் என்பது எவருக்குமே தெரியவில்லை. அவருக்குச் சுய நினைவு வந்தால்தான் விபரமறியலாம், அதுவரை ஒரே பரபரப்புத்தான்.

'ஆளான ஆட்களெல்லாம் கிடக்க, குடிச்சு வெறிச்சு, குடும்பத்தை அடிச்சுக் கலைச்சுப் போட்டு ஸ்டேசனிலை படுத்துக்கிடக்கிற பிள்ளைநயினார் எப்படி ஐயா பின்லாடனைப் பிடித்தார்..?' என்று பல தமிழர் துடித்தனர். அடடா கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வீரம் விலைபோகுமா என்று ஒரு தமிழ்க் கவிஞர் பாடல் யாத்தார்.

'ஐயோ கடவுளே இவன் பாவி ஏனாம் பின்லாடனைப் பிடிக்கப் போனவன்? இனி தமிழ்ப் பகுதியிலை எல்லோ தாக்குதல் நடக்கப் போகுது.' சிறீலங்கா அரசாங்கம் தமிழர் பகுதியிலை இதைச் சாட்டி குண்டு வீசலாமென சில ஆய்வாளர்கள் கூறினார்கள். கேட்கக் கேட்க எல்லாத் தமிழருக்குமே குலை நடுக்கமாயிருந்தது.

பிள்ளைநயினாரைத் தமிழரென்று கூறி வேலையில் இருந்து கல்தா கொடுத்த டேனிஸ் மரக்கம்பனி அவருக்கு டபிள் பிறமோசன் கொடுக்க இருப்பதாகத் துடித்தது. பின்லாடன் இருக்கும் இடத்தை அவர் காட்டி விட்டால் கோடி கோடியாக உழைத்துவிடுவார் என்று சில தமிழருக்குப் பொறாமை. அவர்கள் நம்மை விட்டுவிட்டு ஒருதனும் பணக்காரனாகவோ, அல்லது முன்னேறவோ விடமாட்டோம் என்று முறுகினர்.

அமெரிக்காவில் கட்டடங்களில் விமானங்கள் மோதின செய்தியோ.. அல்லது உலகத்திலை நடக்கிற பிரச்சினையளோ.. எதுவுமே தெரியாமல் சீனட்டி முருகேசுவுக்கு வாளாலை வெட்ட ஓடித்திரிஞ்ச பிள்ளைநயினாரும், அரசடிக் காங்கேசுவும் பின்லாடனையும் குறி வைத்திருக்கிறார்கள் என்றால் அடடா! அவர்கள் லேசுப்பட்ட ஆக்கள் இல்லை! என்று, 'அளவு குடிகாரர் சங்கம்' ஓர் அறிக்கை வெளியிட்டது. 'மதுவே ஜீவநாடி. மதுவை அருந்தாதவன் பேடி! பார்த்தீர்களா பிள்ளைநயினாரின் வீரத்தை' என்று அடிக் குறிப்பில் ஒரு கவிதையும் பாடியிருந்தார்கள்.

ஓடிப்போன பிள்ளை நயினாரின் மனைவி சீதாதேவியும், காங்கேசு பெண்சாதி சோதியும் 'அத்தான்! அத்தான்! ஆசை அத்தான்!' என்று வாய்க்கு வந்தபடி கத்திப்புரண்டார்கள். அடித்தாலும் உதைத்தாலும் நானுந்தன் பிள்ளை என்று அழுதார்கள் பிள்ளைகள். பின்லாடனைப் பிடித்துக் கொடுத்தால் வரக்கூடிய 'றிவாட்' கிடைக்காமல் போயிடுமோ என்ற கவலையில் புலம்பினார் சோதி. பிள்ளைநயினாரில் எல்லோருக்கும் பாசம் பொங்கியது, திடீரென அவர் டென்மார்க்கின் தேசிய வீரராகப் பேசப்பட்டார்.

இப்படி எல்லோரும் அலைபாய்ந்த மனதுடன் காத்திருக்க, மெல்லக் கண்களைத் திறந்தார் பிள்ளைநயினார். இரகசியப் பொலிசார் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

'மிஸ்டர் நயினார் எப்படி பின்லாடனை அடையாளம் கண்டீர்?' சி.ஐ.டி.

'ஐயா பின்லாடனைப் பிடிச்சால் கன காசு வரும் எண்டு கேள்விப்பட்டனாங்கள் அதுதான் காரியத்திலை இறங்கினாங்கள்! எப்பன் நெருப்பெட்டி எடுக்கலாமே?' தீப்பெட்டி வந்ததும் சிகரட்டை கொழுத்திக் கொண்டார். 'குறை விளங்கப்படாது எனக்கு ஒரு தம் அடிக்காட்டி ரொயிலற்றும் போகாது, மூளையும் வேலை செய்யாது!' என்று கூறிச் சிரித்தார் நயினார். அவ்வேளை காங்கேசும் கண் விழித்து சாட்சி சொல்லத் தொடங்கினார்.

'உங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி நன்றி கூறுவாரெண்டு நினைக்கிறன்!'

பிள்ளைநயினாரும், காங்கேசுவும் பேந்தப் பேந்த முழிச்சனர். அவர் யாரென்று தெரியாமல் சிறு பொழுது தடுமாறினார்கள். பிறகு 'ஓ! அவரோ தெரியும்! தெரியும்!' என்று சமாளித்துக் கொண்டார்கள்.

'சரி! சரி! இப்ப சொல்லுங்கோ பின்லாடனை எங்கே பார்த்தீர்கள்?'

'ஒசன்போ காட்டுக்கைதான்! வாங்கோ நேரடியாகக் காட்டுறம்!' பிள்ளைநயினார் பாய்ந்து எழுந்தார். காங்கேசுவும் இராணுவ வாகனத்தில் ஏறினார். தொலைக் காட்சிகள் நேரடியாக ஒளிபரப்புச் செய்தன.

சிங்க நடை போட்டு சிகரத்தில் ஏறு..!

சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு...! வீரமாக நடந்தனர்.

காடு நெருங்கியது, எல்லோரும் பதுங்கிக் கொண்டார்கள். பிள்ளை நயினாரும், காங்கேசுவும் - 'கவனம் பிறங்கால் அடியிலை அவன் விண்ணன்! அவன் அடிச்சுத்தான் நாங்கள் காயப்பட்டனாங்கள்' என்றார்கள். எல்லோரும் பயத்துடன் தவழ்ந்து தவழ்ந்து போனார்கள். சிலர் பயத்தால் சிறு நீரும் கழித்தனர்.

'கவனம்! கவனம்! பொல்லாதவன்! தாயாரே என்ன அடியப்பா?' காங்கேசு எச்சரித்தது.

'அதோ அங்கை பாருங்கோ' என்று பிள்ளைநயினார் பலமாகக் கத்தினார். துப்பாக்கிகள் சூழ்ந்தன, உலங்குவானூர்திகள் வட்டமிட்டன. ஒரு குதிரை நின்று கொண்டிருந்தது. சும்மா சொல்லக்கூடாது பின்லாடன் குதிரையில் தப்பியதாக வந்த செய்தி சரி போலத்தான் தெரிந்தது.

'குதிரை நிற்கிறது ஆளைக்காணோமே?' இராணுவம் வயர்லஸ்சில் பிள்ளைநயினாரிடம் கேட்டது. ஒரு மொழி பெயர்ப்பாளன் அதை தமிழில் நைனாருக்கு எடுத்துரைத்தான்.

'முதலிலை குதிரையைப் பிடியுங்கோ பிறகு நான் பின்லாடனைப் பிடிக்கிறன்' பிள்ளைநயினார் வீறாப்பாக பதில் கூறினார்.

சட்டென வானத்தில் இருந்து வலையை வீசிக் குதிரையை மடக்கினர்.

பிள்ளைநயினார் வேகமாக ஓடிச் சென்று குதிரையின் பின்னங்காலைப் பிடித்துக் கொண்டு, 'பின்லாடனைப் பிடித்து விட்டேன்! பின்லாடனைப் பிடித்துவிட்டேன்!' என்று கத்தினார். பாய்ந்து சென்ற காங்கேசு குதிரையின் முன்னங் கால்களைப் பிடித்துக் கொண்டு 'முன்லாடனைப் பிடித்து விட்டேன்! முன்லாடனைப் பிடித்து விட்டேன்!' என்று முழங்கினார்.

என்னப்பா ஒருத்தன் பின்லாடன் என்கிறான், இன்னொருவன் முன்லாடன் என்கிறான்? - இராணுவம் குழம்பியது.

'பிள்ளைநயினார் பின்லாடன் எங்கே? விளையாட இது நேரமில்லை' - இது மொழி பெயர்ப்பாளன்.

'நான் ஏன் விளையாடுறன்? இதோ இதுதானையா பின்லாடன்! கெதியாப் பணத்தை



வெட்டுங்கோ!' என்று துடித்தார்.

இராணுவம் ஓடிவந்து பார்த்தது. குதிரைக்காலில் போட்டிருந்த இரும்புத் தகட்டை தடவிக்காட்டினார் நைனார். 'இதுக்குத்தானையா லாடன் எண்டு பேர்'. குதிரையின் பின்னங்காலில் இருந்த லாடனைக் காட்டினார்.

'ஐயா! அது பின்னங்காலிலை இருக்கிறபடியால் பின்லாடன்; இது முன்னங்காலிலை இருக்கிறபடியால் முன்லாடன்'. காங்கேசு சேட் கொலரை விலாசமாக இழுத்து விட்டார்.

பாகம் - 2

13

வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்

ஓர் அநர்த்தம் நடந்து முடிந்ததின் பின் அதற்காக அனுதாபச் செய்தி அனுப்பவும், கண்டனங்கள் தெரிவிக்கவும், இனிமேல் இப்படியொன்று நடை பெறாமல் இருக்கவேண்டும் என்று எல்லாம் அறிக்கைகள் விடும் உலகப்பெரியார்கள் யாரும் எமது உயிர்களுக்கு உத்தரவாதம் அளிப்பவர்கள் அல்ல. அவர்களை விட ஈழத்தமிழ் மக்களுக்குக் கேடயமாகவும், அவர்கள் விடுத லைக்கு உயிரையும் கொடுக்கும் போராளிகளையும், சந் தர்ப்பம் ஏற்பட்டால் தமிழ்மக்களுக்காகத் தன்னையே அழித்துக்கொள்ளவும் தயங்காத இலட்சியத்தையும் கொண்டுள்ள பிரபாகரனே எமது தலைவன் என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை. வந்தபின் காக்கவும் வலுவில்லாதவர்களைவிட வருமுன்காக்கும் போராளியைத் தலைவனாக ஏற்பதே சிறந்தது' என்றார் அந்தக் குருவா னவர். அவரது தெளிவான சிந்தனையான பேச்சு எனக்குள் இருந்த கலக்கத்தைத் தெளியவைத்தது.

நாவற்குழியை நான் அடைந்தபோது பொழுது மங்கிக்கொண்டிருந்தது. அந்தவேளையில் யாழ்ப்பா ணத்துக்குள் செல்வது புத்திசாலித்தனமான செயலா கப்படவில்லை. நாவற்குழியில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தார். இரவு அங்கு அவரது வீட் டில் தங்கி மீண்டும் புறப்படலாம் என்று அவரது வீட் டுக்குச் சென்றேன். நான் எதிர்பார்த்துச் சென்றது போல என் நண்பரும் குடும்பத்தவர்களும் அங்கு இருக்கவே அன்றைய இரவு அங்கேயே கழிந்தது.

மறுநாள் காலை ஐந்து மணிக்கே எனது யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தை ஆரம்பித்துவிட்டேன். நிலம் இன் னும் நன்கு விடியவில்லை. வீதியெங்கும் மக்கள் நடமாட் டமே காணப்படவில்லை. இடப்பெயர்வு அன்று அந்த வீதியில் நிறைந்திருந்த சன சமுத்திரத்தை எண்ணிப்பார்க் கிறேன். பகலில் என்றால் நாங்கள் அன்று கடந்து சென்ற புகையிரதப்பாதை தெரிந்திருக்கும். அதுகூடக் கண்களுக் குத் தெரியவில்லை.

அந்த வெள்ளாப்பில், வீதியைப் பார்த்து ஓடக்கூடிய தாக இருந்தது. நேரமும் அதிகாலையானபடியால் சைக் கிலை வேகமாக வேகமாக ஓடக்கூடியதாக இருந்தது. ஓடி யவேகத்தில் வீதியிலே என்ன கிடந்தது என்பதைக் கூடக் கவனிக்கவில்லை. எனது சைக்கிலின் இரண்டு உருளைக ளும் 'தொப்தொப்' என்று ஏறி இறங்கியது. எதற்குமேலால் என்சைக்கில் ஏறியது என்பதைப் பார்ப்பதற்காகத் திரும்பி அந்த இடத்துக்கு வந்து பார்த்தேன். பாவம் யார் வீட்டுச் செல்லப்பிராணியோ? சடை நாய் ஒன்று பக்கவாட்டாக விழுந்து விறைத்துக் கிடந் தது. அந்த நாயின் காட்சி யைக் கண்டபோது நேற்று மீசாலையில் புதுவை சொன்ன வரிகள் நினை வுக்கு வந்தன. அதை மாற்றி 'யாரோ தான் வளர்த்த நாயை விட்டிட்டு தன்னை வளர்த்த தாயைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார் கள்' என்று எனக்குள் சொல் லிப் பார்த்துக்கொண்டேன்.

கிழக்கு வெளிக்கத் தொடங்கிவிட்டதால் இப்பொழுது நிலம் வெளிச்சமாக இருந்தது. வீதியையும், சுற்றாடலையும் நன்கு பார்க்கக் கூடியதாக விருந்தது, வீதிநெடுகிலும் ஆடுமாடு, கோழி, நாய்கள் போன்றவை இறந்துகிடந்ததால் வீசிய துர்வாடை சுவாசிக்கவிடாமல் தடைசெய்தது. வீதிநெடுகிலும் அறுந்த செருப்புகள் மயமாக இருந்தது. 1994ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம்நாள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அநர்த்தங்களுக்குப் பின்னர் முற்றவெளி முழுவதும் செருப்பு மயமாகக் கிடந்தது என்று திரு. நாக. பத்மநாதன் அவர்கள் கூறியது நினைவுக்கு வந்தது. நல்லவேளை கால்துண்டிக்கப்பட்டு எம்மவர்கள் வீதிகளில் கிடக்கும் நிலைமை வருமுன்னர் ஒடித்தப்பிவிட்டனர். 'காலுக்கு வந்தது செருப்போடு போயிற்று' என்று புதுமொழியொன்று என் மனதில் தோன்றிற்று.



பரபரப்பாக இருந்த யாழ்ப்பாணத்தைவிட்டு மக்கள் வெளி யேறி வாரம் ஒன்றுகூட ஆகவில்லை. மனித காலடி படா மற் போன அந்த குறுகிய காலத்தில் ஒரு ஊர் இப்படிப் பாழடைந்த பூமி மாதிரி ஆகிற்றே என்ற வியப்பு எனக் குள்.

> குடும்பத் தலைவன் அவர்கள் விசுவாசிகளில் ஒருவர். ஆகையால் இவர்கள் குடும்பத்துக்கு உள்ளே செல்ல அனுமதிகிடைத்தது. 'அவர்களது இந்த வரவேற்பே மனித மாண்பைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்திருந்தது.'

அரியாலையைத் தாண்டிப் போகின்றேன். ஓர் இடத்தில் வீதியின் இடது பக்கத்தில் பசுமாடு ஒன்று நின்றது. அதன் காலடியில் கன்று ஒன்று இறந்துகிடந்தது. அந் தத் தாய்ப்பசு பாச உணர்வு மேலிட 'அம்மா' என்று குரல் கொடுத்து அழுதது. நான் அந்த இடத்தைக் கடந் தபோது அக்காட்சி என் நெஞ்சைப் பிழிந்தது. நான் வெகுதூரம் செல்லும் வரைக் கும் அந்த காரமான அந்தவேளை, அத்தாய்ப் பசுவின் அவலக்குரல் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

அத்தனை தெலைவுதூரம் சென்றதன் பின்னர்தான் நான் முதன் முதலில் மனித நடமாட்டத்தைக் கண்டேன். அகில இலங்கை பெந்தக்கோஸ்த்து சபை ஆலயத்தில்தான். மனித சக்தியை விடவும் கடவுளின் சக்தியில் நம்பிக்கை வைத்து அவர்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறாமல் இருக்கின்றார்கள் என்று நாவற்குழிக்கு அப்பால் யாரோ சொல்லியிருந்தார்கள். அது உண்மையாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் நாமிருந்த மாட்டின் வீதியை வந்த டைந்தேன். நடுவீதியிலே முயல்களும், கோழிகளும் செத் துக்கிடந்தன. நாமிருந்து புறப்பட்ட அந்த வீட்டின் கதவைத் திறந்தேன். வீட்டின் கூடத்தின் நடுவில் இருந்த 'ஷோ கேஸ்' மீது எனது மகள் ஜெனியின் படம் இருந்தது. பிளா ஸ்டிக் சட்டமிடப்பட்டு, கண்ணாடியிடப்பட்ட படம் அவர். தரையிலே உட்கார்ந்து முழங்கால்களை மடித்துப் பிடித்து அவற்றைச் சுற்றி தன் இரு கரங்களையும் கோத்தபடி இருந்தாள். எந்தநேரமும் குழந்தை மாதிரிச் சிரித்தபடி காணும் அவள் அப்பொழுதும் அதே சிரிப்புடன் காணப் பட்டாள். அந்தச் சிரிப்பு 'நான் மரண பயத்தையெல்லாம் கடந்து இங்கு தனிமையாக இருக்கிறேன். நீங்கள்தான் உயிருக்குப் பயந்து என்னைத் தனிமையில் விட்டு ஓடிவிட் டீர்கள்' என்று பல்லெல்லாம் தெரிய என்னைப் பார்த்து நையாண்டி செய்வதுபோல் இருந்தது.

அவளது நிழற்படத்தையும், ஏனைய படங்களையும் எடுத்துப் பத்திரமாக அலுமாரிக்குள் வைக்கின்றேன். மீண் டும் ஒருமுறை வந்து ஏனையவற்றை எடுத்துச்செல்ல வேண்டும் என்ற நினைப்பில் மிக அத்தியாவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டேன்.

வாயிற்கதவுகளை திறந்தே வைத்திருந்தேன். திடுமென யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்கவே அறைக்குள் இருந்து வெளியே வந்துபார்த்தேன். என்ன ஆச்சரியம் எனது மனைவியின் தங்கை டெய்சி அங்கே நின்றாள்.

'நீ இஞ்சை எங்க? இன்னும் வெளிக்கிட இல்லையா?'

'இல்லை' என்று பதிலளித்த வளாக உள்ளே வந்தாள். வலிகாமத்தை விட்டுவெளி யேறும்படி அறிவிக்கப்பட்ட அன்று அவளும் குடும்பத் தவரும் வெளிக்கிட்டிருக் கின்றார்கள். ஆனால் அன்றைய சனநெரிசலில் அகப்பட்டு பயணத்தைத் தொடர முடியாதவர்க ளாகப் பாதுகாப்பாக எங்கேனும் நின்று விட்டு இரண்டொரு நாளில் மீண்டும் போக லாம் என்று திரும்பி யிருக்கிறார்கள்.


இத்தனைக்கும் அவ ளது கணவன் பெந்தக்கோஸ் சபை யைச் சேர்ந்தவர். எனவே அவர்களது ஆலயத்துக்கு அடைக்கலம் கோரிச் சென்றிருக்கின்றார்கள். அங்கு சென்ற அவர்களுக்குக் கிடைத்த அனுபவமே வித்தியாச மாகவிருந்தது.

ஏற்கனவே பொதுமக்கள் பலர் அவ்வாலயத்துள் இருந் தும்கூட ஆலயத்தின் வாசலிலே வழிமறித்துக்கொண்டு நின்ற அச்சபையின் ஊழியர் ஒருவர் 'இங்கு விசுவாசிகள் மட்டும் உள்ளே வாருங்கள்' என்று வெளிப்படலையை திறப்பதும் மூடுவதுமாக நின்றுகொண்டிருந்தார். குடும்பத் தலைவன் அவர்கள் விசுவாசிகளில் ஒருவர். ஆகையால் இவர்கள் குடும்பத்துக்கு உள்ளே செல்ல அனுமதிகிடைத் தது. 'அவர்களது இந்த வரவேற்பே மனித மாண்பைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்திருந்தது.'

அன்றைய இரவு ஜெபவழிபாட்டின்போது 'கர்த்தரை விசுவாசிக்காதவர்கள் மீது, மனம் திரும்பி ஞானஸ்நானம் பெறாதாவர்கள் மீது அக்கினி மழை பொழியப்போகிறது' என்று உரத்தகுரலில் சப்தமிட்டுப் பிரார்த்தனை செய்திருக்கின் றார்கள். ஆபத்தில் இருப்பவன், துன்பப்படுகின்றவன் எல் லோரும் உன் சகோதரர்கள், பகைவனையும் அன்பு செய் யுங்கள்' என்ற கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவத் திற்கே முரண்பாடான வழிபாடாக அது அமைந்திருந்தது.

அந்தவழிபாட்டைக் கேட்டதின் பின்னர் அங்கு இருக்கவே விருப்பமின்றி இருந்த இவர்கள் அவர்களால் வழங்கப்பட்ட தேனீரைக்கூட வாங்கிப் பருகவில்லை. எப்போ விடியும் என்று காத்திருந்துவிட்டு விடிந்ததும் திருக்குடும்பக் கன்னி யர் மட மகாவித்தியாலயத்தில் வந்து அடைக்கலம் புகுந்து இருக்கின்றார்கள். *(தொடரும்)*

நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201



ஐரோப்பாவில் தமிழுக்குத் தேர்வு....


பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் - தமிழ் குழந்தைகளின் தாய்மொழி அறிவு, கடந்த 08.05.2004 சனிக்கிழமை சோதித்துப் பார்க்கப்பட்டது. பிரான்ஸ், ஜேர்மனி, சுவீஸ், டென்மார்க், இத்தாலி, நோர்வே, பிரித்தானியா, சுவீடன், நெதர்லாந்து, பிரித்தானியா முதலான நாடுகளில் தமிழ்சோலை - தமிழாலயம் என்று பல்வேறு பெயர்களில் நடாத்தப் பட்ட தமிழ் கல்விக்கூடங்களில் கல்விகற்ற 12 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் குழந்தைகளுக்கான தமிழ்மொழித் தேர்வுப் பரீட்சையை ஐரோப்பா, அவுஸ்திரேலியா தழுவிய அளவில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் - சுவிஸ் நாட்டில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச் சேவையும் நடத்தின. ஆண்டு ஒன்று தொடக்கம் 10 வரையிலான பிள்ளைகளுக்கான தேர்வு 26 தேர்வு நிலையங்களில் சுவிசில் நடைபெற்றது. இதில் 2345 பிள்ளைகள் கலந்துகொண்டனர்.


பிரான்சில் - பாரிஸ், துலூஸ் துறுவா, என்கின்ற மூன்று இடங்களில் 5 தேர்வு நிலையங்களில் நடைபெற்ற தேர்வில் 44 பாடசாலைகளைச் சேர்ந்த 1234 பிள்ளைகள் கலந்துகொண்டதாக பிரான்சின் தமிழ்க் கல்விக்கு பொறுப்பான தமிழ்ச்சோலை நிர்வாகிகள் தெரிவித்தனர்.


இத்தாலியில் பலர்மோ மாநிலத்தில் - வளர்நிலை ஒன்று தொடக்கம் மூன்று வரையிலான பிரிவுகளுக்கான தமிழ் தேர்வு திலீபன் தமிழ் பாடசாலையில் இடம் பெற்றது.

நோர்வேயின் பல்வேறு நகரங்களில் அன்னை பூபதி தமிழ் கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் நடந்த தமிழ் தேர்வில் 800 வரையிலான பிள்ளைகள் கலந்துகொண்டுள்ளனர்.


ஜேர்மனியின் பல்வேறு மாநிலங்களிலும் நடைபெற்ற தேர்வில் 3000க்கும் அதிகமான குழந்தைகள் பங்குபற்றினர்.








இத்தாலி



ஐரோப்பாவில் தமிழுக்கு தேர்வு....



சுவீஸ்














பிரான்ஸ்



எமது விடியற்காகத் தமது உயிர்களை...

வீரவேங்கை செந்தாளன்

வளங்கள் நிறைந்த, இயற்கை எழில் பொங்கும் யாழ். மாவட்டத்திலே ஒரு பகுதி தான் அரியாலை. அரியாலையிலே கந்தையா - இராசபூரணம் ஆகியோருக்கு 5வது பிள்ளையாகப் பிறந்தான். இவனுகுப் பெற்றோர் இட்ட பெயர் சுதர்சன். சுரேஸ் என்று செல்லமாக அழைத்தனர். இரண்டு அண்ணாக்களும், 2 அக்காமாரும், ஒரு தங்கையும், ஒரு தம்பியும் இவனுக்குச் சகோதரர்கள். சுரேஸ் சிறுவயதிலே துடியாட்டம் மிகுந்தவனாகவே இருந்தான். எந்த நேரமும் எதையும் செய்து கொண்டே இருப்பான். எந்த நேரமும் பம்பல் அடித்து வீட்டிலுள்ள அனைவரையும் சிரிக்க வைப்பான். அதே போல்தான் இயக்கப் போராளியாக மாறிய பின் சோகத்தில் இருக்கும் போராளிகளுக்கும் ஏதாவது கதை சொல்லிச் சிரிக்க வைப்பான். இதனால் நிறையப் போராளிகளின் மனங்களில் நிறைந்து இருக்கிறான்.

சுரேஸ் தனது கல்வியை மகேஸ்வரி வித்தியாசாலையில் கற்றான். தாயை நேசிப்பவன்தான் தாய் நாட்டையும் நேசிப்பான். தானும் ஒரு விடுதலைப் போராளியாக மாறிவிட வேண்டும். 'எங்கட மக்களை எங்கட கண்முன்னே சுட்டவனை நான் அவன்ர துவக்கெடுத்து அவனையே சுடோணும்' என்று நினைத்தவன்; அதற்குச் செயல் வடிவம் கொடுத்தான். 1990ம் ஆண்டு தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்டான்.

90ம் ஆண்டு பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான். வயதில் சிறியவனாக இருந்தாலும் ஏனைய போராளிகள் போன்று கடும் பயிற்சியினையும் மிக வேகமாகவும் திறம்படவும் செய்து முடிப்பான். எவ்வளவு கடுமையான பயிற்சி என்றாலும் சளைக்காது செய்வான். இப்படித் தன் ஆரம்பப் பயிற்சியை நிறைவு செய்தவன். முகுந்தன் என்ற பெயருடன் வெளிவந்தான். அதன் பின் படிப்பதற்காகப் படைத்துறைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். அங்கு படிப்பிலும் சரி கலைத்துறையிலும் சரி மிகுந்த கெட்டிக் காரனாகவே இருந்தான். அதன் பின் தொழிநுட்பப்பிரிவுக்கு அனுப்பப்பட்டான். இப்பிரிவில் அறிக்கை செய்வதற்காக நியமிக்கப்பட்டான். தனது வேலையைத் திறம்படச்செய்தான். பொறுப்பாளரிடம் இவன் நன் மதிப்பும் பெற்றான். பின் இவனது பெயர் செந்தாளனாக மாற்றப்பட்டது.

கலைத் திறமைகளில் இவனிடம் இருந்தவை கராட்டி, பிறேக், பாடுதல், ஓவியம் வரைதல் என்பன ஆகும். கராட்டியில் மிகவும் சிறந்தவனாக விளங்கினான். செந்தாளனைப் பற்றி யாராவது கேட்டால் கராட்டிச் செந்தாளனா என்பதே அனைவரது வாய்களிலும் வரும் வினா. அப்படிக் கராட்டியில் ஒரு கதாநாயகன். இதனால் தலைவரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தான். பிறேக் நடனம் ஆடுவதிலும் வல்லவன். எந்தவொரு பாடல் என்றாலும் அதற்கேற்ற வடிவமைப்பிலே ஆடுவான். 2000ம் ஆண்டு மாவீரர் நாளுக்கு நடந்த நிகழ்ச்சியில் 'சூரியப்புதல்விகள்' இசை நாடாவில் உருவான 'பூங்கொடியாய் இருந்தாய் நீயும் புயல் வடிவாய் நிமிர்வாய்...' என்ற பாடலிற்குப் பிறேக் ஆடியது இன்றும் மறக்க முடியாத நிஜங்களாகத்தான் இருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்விலும் தவறாது பங்கு பற்றித் தனது திறமையான செயற்பாடுகளினால் அந்தப்பகுதி மக்களின் மனங்களில் நிறைந்து இருக்கின்றான் செந்தாளன்.

அதை விட ஓவியம் வரைதல் இவனின் கை தேர்ந்த கலையாகும். ஒருவரை நேரிற் பார்த்தால் அடுத்த கணமே படமாக வரையும் ஆற்றல் இவனுக்கு உண்டு. எப்படியாக எடுக்கத் தேவையோ அப்படியான படமாக வரைந்து தருவான். ஒரு முறை தலைவரின் பிறந்த நாளிற்கு அனுப்பிய படம் தலைவரையே மகிழச்செய்தது. இதனால் தலைவரின் பாராட்டைப் பெற்றான்.

இப்படி ஒரு சிறந்த போராளியாக இருந்து தலைவரின் சக போராளிகளினதும் மக்களினதும் மனங்களில் நிறைந்து இருந்தவன், 04.07.2001 அன்று எதிர்பாராத வெடி விபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். இவன் வீரச்சாவு அடைந்துவிட்டான் என்ற செய்தி கேட்டவர்கள் துடித்துப் போனார்கள். சுதர்சன் என்ற இயற்பெயரொடு வந்து செந்தாளன் என்ற நாமத்துடன் எழுந்த வீரனே! பம்பல்க் கதை பல பேசி எம்மை மகிழ்வித்து விட்டு இன்று கல்லறையில் துயில் கொள்ளும் வீரனே! நீ நடந்த தேசமும் உன் உறவுகளும் காத்திருக்கின்றது. மீண்டும் நீ வருவாய் என்ற நம்பிக்கையில்.

- போராளி அக்கா முகுந்தா

(கேணல் கிட்டு பீரங்கி மகளிர் பிரிவு)

என்னோடு நான்

கந்தையா நவரேந்திரன்

எண்ணமும் புலனுணர்வும்

மனித குலம் எண்ணத்திற்கு ஏன் இவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுக்கிறது என்று தெரியவில்லை. எண்ணம் பல வகைகளிலும் மனிதனுக்கு உளவியல் ரீதியாகவும் மட்டுமல்லாமல், உடல்-பொருள் ரீதியாகவும் பாதுகாப்பளிக்கிறது என்பதாலா இப்படி மனிதனுக்குப் பாதுகாப்புக்கொடுக்கும் எண்ணத்தால் தனக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்க முடியாது இருக்கிறது.?

எண்ணம் என்பது வெறுமனே ஒரு நினைவேயாகும். எண்ணத்தால் தனக்குத்தானே பாதுகாப்பாக இருக்க முடியாதபோது, அதனால் எப்படி மனிதனுக்குப் பாதுகாப்பளிக்க இயலும் என்பது மிகவும் முக்கியமான ஒரு வினாவாகும். அது தன்னளவில் பாதுகாப்பாக இல்லாதபடியால்தான் அது புறத்திலிருந்து தனது பாதுகாப்பைத்தேடி நாடுகிறது. எண்ணம் எமக்குள் இடைவிடாது - ஓயாது மாறிக்கொண்டும் அசைந்து கொண்டும் இருக்கிறது. ஆனால் அதன் இந்த அடிக்கடி அழியும் நிலையிலிருந்து அழியா நிலையை நாடும் அசைவையிட்டும் அது திருப்தி கொள்ளுவதாகத் தோன்றவில்லை. 'நான் வெறும் எண்ணம்தான். நான் வெறும் நினைவுதான்' என்று உண்மையைக் கூறிவிட்டுச் சும்மா இருக்காமல் எதற்காக அது இயற்கையைப் போல் தொடர்ச்சியான அசைவுகளாக வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறது? நாங்கள் அதனிடமில்லாத ஒன்றாகிய நுண்ணறிவை கொடுத்து, அதன் தகுதிக்கும் மீறிய ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இதுதான் நாம் விடுகிற பாரிய உளவியற் தவறாகும். 'நான் பாதுகாப்பற்றது. நான் நிரந்தரமற்றது' என்று தன் உண்மை நிலையைத் தானே புரிந்து சொல்லும் அளவுக்கு அது தன்நிறைவு கொண்டிருக்கவில்லை. அது பற்றுடையதாக இருப்பதுவே அதன் இந்நிறைவற்ற தன்மைக்குக் காரணம். இந்தப் பற்றுத்தான் அதன் இயக்கத்தில் தொய்வோ தேக்கமோ ஏற்படாமல் பார்த்துக்கொண்டு இருக்கிறது.

எண்ணம் ஓர் இயந்திரம் போல் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனால்தான் அது உயிர்ப்புத் திறனற்று, அறிவுத் திறனற்று, மரபு வழிப்பட்டு வெறும் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருக்கிறது. 'எண்ணம்' இயந்திரம் போல் இயங்குகிறது என்றால் அது பாதுகாப்பை நாடவேண்டியதில்லையே என்ற ஐயப்பாடு எமக்கு ஏற்படுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஏனென்றால் இயந்திரம் குறிப்பாக எதையும் நாடுவது இல்லை. குறிப்பாக எதையும் நாடுவதில்லை என்று கூறுவதைக் காட்டிலும், இயந்திரமானது எப்பொழுதும் எதையுமே நாடுவதில்லை என்று கூறுவதே மிகவும் சரியான கூற்றாக இருக்கும். இயந்திரத்தை நாம் இயங்கச் செய்துவிட்டால் அது இயங்கிக்கொண்டே இருக்கும். அதற்குச் 'சக்தி' இருக்கும் வரைக்கும் அது இயங்கிக்கொண்டே இருக்கும். இயந்திரத்துக்கு எப்படி தான் இயங்கிக்கொண்டிருப்பது தெரியாதோ, அப்படியே எண்ணத்திற்கும் தான் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருப்பது தெரியாது. எண்ணத்தின் உள்ளடக்கத்தில் இன்பம் இருக்கிறது, இன்ப நுகர்வு இருக்கிறது. புலன் உணர்வு சார்ந்த மகிழ்ச்சியும், விருப்பு வெறுப்பும், நோவும் வேதனையும், ஊறும், அதனால் விளையும் துன்பமும், பொறாமையும் எரிச்சலும், நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும், அகந்தையும் அகங்காரமும் போன்ற இன்னோரன்ன பலவும் இருக்கின்றன. இந்த உள்ளடக்கங்களில் இருந்துதான் எண்ணமானது தன் இருப்புக்கான ஊட்டங்களைப் பெற்றுக்கொள்கின்றது.

இயந்திரத்துக்கு, எப்படி தான் இயங்கிக்கொண்டிருப்பது தெரியாதோ, அப்படியே எண்ணத்திற்கும் தான் இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருப்பது தெரியாது. எண்ணத்திற்குத் தான் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருப்பது தெரிந்திருந்தால், அது எச்சந்தர்ப்பத்திலும் ஊறுபடவோ, துன்பப்படவோ, நோவுறவோ, பொறாமைப்படவோ, நம்பிக்கைகள் கொள்ளவோ மாட்டாது.

எதற்காக எண்ணம் ஊறுக்கு ஆட்படுகிறது? ஆட்பட்டுத் துன்ப வேதனையை அது எதற்காக அனுபவிக்கிறது?

எண்ணத்தின் இன்னுமொரு மிக முக்கிய செயற்பாடு என்னவெனில், அது மிகத் தாராளமாக விம்பங்களை உருவாக்கும். அப்படித் தன்னால் உருவாக்கப்பட்ட விம்பங்களிலேயே தனது பாதுகாப்பை தேடுகிறது. இப்படி அது விம்பங்களை உருவாக்குவதற்கான காரணமே தனக்குத் தோதான பாதுகாப்புக்களை நிச்சயப் படுத்துவதற்காகத்தான். இப்படிப் பல பாதுகாப்பு மையங்களைத் தனது விம்பங்களையொட்டி உருவாக்கிவிட்டு, அவற்றை எல்லாம் உள்ளடக்கக்கூடிய ஒரு பாரிய பாதுகாப்பு வலையத்தையும் அமைத்துவிடும் சாதுரியம் அதற்கு உண்டு.

எண்ணமானது, தான் இயந்திரத் தன்மை கொண்டது என்பதை உணராதபடியால்தான், தன்னை இயந்திரத்திலிருந்தும் வேறுபடுத்தித் தான் ஓர் இயந்திரமில்லை எனக்கருதுகிறது போலும். தான் உயிர் உள்ள ஒன்று என்ற நுண்ணறிவும் உணர்வும் அந்த எண்ணத்திற்கு இருக்குமேயானால் அது அக்கணமே இயந்திரத்தன்மை இல்லாத உள்ளார்ந்த பண்புகளையும் இயற்பண்புகளையும் பெற்றுக்கொண்டுவிடும் அல்லவா? இதுவே முக்கியமான அடிப்படை.

எண்ணம் தன்னை உயிருள்ள ஒன்று என்று எண்ணுகிறது,

கற்பனை பண்ணிக்கொள்கிறது,

நினைக்கிறது. 'அப்படித்தான் உள்ளேன்' என்ற உறுதியான நிலைப்பாட்டையும் எடுத்துக்கொள்கிறது. அதற்குத் துணையாகத் தன்னாலேயே படைக்கப்பட்ட விம்பங்களையும் தனது பற்றால் பிணைத்துத் தன் துணைக்கு வைத்துக்கொள்கிறது. எனவே தான், அது, தனது இயந்திரத்தன்மையற்ற இருப்புக்குத் தேவையான இயற்பண்புக் கூறுகளைத் தனது சொந்த உடைமைக் கூறுகளாகக் காட்டிக்கொள்கின்றது. இதுதான் எண்ணத்தின் சூழ்ச்சித்திறன். அடிப்படையில் தன்னிடமில்லாத, தான் அறவே கொண்டிராத தன்னியல்புகளைத் தன்னிடம் இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் ஓர் அபூர்வமான சூழ்ச்சிமுறை இது. இதுதான் எம்மை ஏமாற்றிக்கொண்டிருக்கும் மாயை.



குறுங்கதை

தோழமை



கிழிசல் துணியைத் தைக்கும் வேலையில் விரல்கள்.
சுட்டு விரல் அடுத்த விரலைப் பார்த்து,
'துன்பப் படுகிறவர்களுக்குத் துன்பப் படுகிறவர்களே துணை' என்றது.
அடுத்த விரல் கேட்டது:
'ஏன் அப்படிச் சொல்கிறாய்?'
'இதோ பாரேன்....' சுட்டு விரல் சொன்னது:
'கிழிசல் துணிக்கு ஓட்டை ஊசி'

- காசி ஆனந்தன்.

கவிதை

விதைகள்

விதைகள் விதைத்தோம்
சமாதானத்துக்காக பல்லாயிரம் உயிர்களை
விதைத்தோம்
அந்த விதைகளால் வந்தது தான் சமாதானம்
அதுதான் தமிழனுடைய வாழ்வை அவனே
தீர்மானிப்பது.
நாம் விதைத்த விதைகள் தான் எமது போராளிகள்.
அவர்களுடைய உடம்பு இரும்பு போன்றது.
அவர்களுடைய மனம் பஞ்சைப் போன்றது.
இவர்களுடைய வீரத்தினால் எதிரியே நடுங்கி
பயந்தோடினான்.
உலகமே எம்மைத் திரும்பிப் பார்த்தது.
தமிழர்களுடன் போர் செய்து பயன் இல்லை என்பதை
உணர்ந்தது.
நாம் விதைத்த விதைகள் பலமானது.
அது எதிரிக்கு மிதிவெடி, நல்லவர்களுக்குக் காக்கும்
கடவுள்கள்.
நாம் விதைத்த விதைகளுக்கோ பணமதிப்பீடு
செய்யமுடியாது.
ஆனால் இறைவனுக்கு ஒப்பானவர்கள்.
இவர்களால் தமிழனுக்குப் புகழும் பெருமையும்
கிடைக்கிறது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

பா.லக்ஷன்
16 வயது
Landau, Germany (D)

கடந்த வாரவிடைகள்:



1. அட்லஸ் (Atlas), 2. ஜூடோ (judo), 3. நீக்ரோ, 4. கேடி (KD), 5. அனகொன்டா (ஆனை கொன்றான்), 6. கதர், 7. Moped, 8. ஜீன் (Gene), 9. ஜெராக்ஸ், 10.யோகா, 11. கராத்தே, 12 Sony, 13. ஆமென்

கதை முற்றம்

தன் பெயரை மறந்த ஈ

ஒருநாள் ஒரு ஈ தன் பெயரை மறந்துவிட்டது.

'என் பெயர் என்ன? என் பெயர் என்ன?' என்று யோசித்துப் பார்த்தது.



பெயரை நினைக்க முடியவில்லை.


ஈ பக்கத்தில் நின்ற பூனையிடம் 'மியா மியாப் பூனையே! நான் என் பெயரை மறந்துவிட்டேன். உனக்குத் தெரியுமா?' 'மியா மியா... உன் பெயர் எனக்குத் தெரியாது' என்றது பூனை.

ஈ பறந்து சென்றது. வீட்டு வாசலில் நின்ற நாயிடம் 'வள்... வள்... நாயாரே! என் பெயரை மறந்துவிட்டேன். நீ சொல்லுவாயா?' 'வள்.. வள்... உன் பெயர் எனக்குத் தெரியவே தெரியாது.'

ஈ புல் தரையில் மேயும் குதிரையை கண்டது. அது பறந்து சென்று குதிரையின் மூக்கின் மேல் அமர்ந்தது. குதிரை 'யார் என் மூக்கின் மேல் அமர்ந்தது?' என்று கேட்டது. 'குதிரையே! அது நான்தான்' என்றது ஈ. 'என்ன நான்தான்? நீ ஒரு மடப்பூச்சி. உன் பெயரைக் கூற முடியாதா? வெட்கம் வெட்கம்.'

'என் மூக்குக் கூசுகிறது. எழுந்து போ.' குதிரை தலையை மேலும் கீழும் ஆட்டியது. 'குதிரையே! என் அழகான பெயரை மறந்துவிட்டேன். அய்யனே! தயவுசெய்து நீ சொல்ல மாட்டாயா?' கெஞ்சியது ஈ.

குதிரைக்குச் சுறுக்கென்று கோபம் வந்தது. 'ஈ....ஈ....ஈ...' என்று குதிரை கனைத்தது. 'ஈ.... ஈ... நன்றி நன்றி குதிரையாரே!' ஈ சந்தோசத்தோடு பறந்து சென்றது.



சென்ற வார விடுகதையின் விடைகள்:

1. நிழல். 2. ஈ. 3. முயல். 4. பப்பாளி. 5. ஆலமர விழுது. 6. மண்ணெண்ணெய். 7. காற்று. 8. செருப்பு – மின்விசிறி. 9.டாக்டர்–கொசு. 10.அலாரம் மணி –தீ விபத்து. 11. தேங்காய் –கண்ணாடி. 12. கண்ணாடி. 13. நட்சத்திரம். 14. தேங்காய். 15. உப்பு 16. பூட்டு –சாவி. 17. பட்டாணி. 18. நுங்கு. 19. மிளகாய். 20. தந்தம். 21. கண்கள். 22. சாலை.

விடுகதை போட்ட சுட்டிகள்: வெ. ராஜாராம், எஸ்.மெகந்திபாரதி, ஆதிஜெயலட்சுமி, ஆர்.பிரசன்னா, ஜி. பிரணவ், குட்டி பிரசன்னா, ஆர். ராஜலட்சுமி.

கவிதை முற்றம்

ஆசை

சின்ன சின்ன ஆசை
சிட்டுக் குருவி போல
பறந்து திரிய ஆசை

சின்ன சின்ன ஆசை
பப்பிக் குட்டி போல
துள்ளி ஆட ஆசை

சின்ன சின்ன ஆசை
குட்டி மீனைப் போல
நீந்தி ஓட ஆசை

சின்ன சின்ன ஆசை
கறுத்தக் குயிலைப் போல
கூவி மகிழ ஆசை

சின்ன சின்ன ஆசை
வண்ண மயிலைப் போல
நடனம் ஆட ஆசை

சின்ன சின்ன ஆசை
சிரிக்கும் குழந்தை போல
குலுங்கிச் சிரிக்க ஆசை

சிந்தனைத் துளிகள்

1. நன்றியுள்ள மனிதனுக்கு கேட்டதைவிட அதிகமாக கொடு.
2. அன்பான குணம் அலையில்லாத நதி.
3. பள்ளிக் கதவைத் திறப்பவன், சிறைச்சாலைக் கதவை மூடுவான்.
4. ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு.
5. கண்ணீர் துயரத்தின் மௌன பாஷை.
6. குரு பக்தியினால் கைகூடாதது ஒன்றுமில்லை.
7. பணம் என்பது பாம்பு, மகிழ்ச்சி என்பது கீரி இவை ஒன்று சேராது.
8. பணம் சேமிப்பது, ஊசியால் குழிதோண்டுவது மாதிரி.
9. அவசரத்தில் திருமணம் செய்யின் ஓய்வு நேரத்தில் வருந்தவேண்டும்.
10. பொருளை அடகுவைப்பதைவிட விற்றுவிடுவது மேல்.
11. கொடுத்தவனை புகழ்வார் கொடாதவனை இகழ்வார்.
12. பயணி தூங்கினால் சொகுசு பயணம். சாரதி தூங்கினால் இறுதி பயணம்.
13. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
14. அன்னமும் கழுகும் நூறாண்டுகள் கூட வாழும்.
15. அரைகுறை படிப்பு அதிக ஆபத்து.
16. அன்புக்கு அடங்காதவரும் இல்லை, அது இல்லாமல் வாழ்ந்தவரும் இல்லை.
17. கவலையைவிட மிகக் கொடியது ஒருவரிட முள்ள சந்தேகம்.

தொகுப்பு: எஸ். கே. திவ்யா.

பயம் வேண்டாம்!



படத்தை பார்த்து பயந்து விடாதீர்கள்..! இதனைப் பார்க்கும் போது உங்களை வெருட்டுவது போன்றுதான் இருக்கும். ஆனால் உண்மை அதுவல்ல. அவர்கள் சிரிக்கின்றார்கள்..! இவர்கள் அனைவரும் 'சர்வதேச சிரிக்கும் கழகத்தின் உறுப்பினர்கள்' கடந்த 2ம் திகதி சர்வதேச சிரிப்பாளர்கள் தினமாம். இந்தியாவின் பெங்களூர் பகுதியில் உள்ள சிரிக்கும் கழக உறுப்பினர்கள் சிரிப்பதையே நீங்கள் படத்தில் காண்கிறீர்கள்.

டாக்டர் மதன் கட்டாரியாவால் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம், அன்று முதல் இயங்கி (சிரித்து) வருகிறது.

இப்படியும் மறதியா..?!



மருத்துவர் ஒருவரின் மறதியினால் வந்தவினையைப் பாருங்கள்...! அவுஸ்திரேலியா சிட்னியில் 2001ம் மே மாதம் சிகிச்சைக்கு சென்ற 69 வயதுப் பெண் ஒருவருக்கு அவரது பெருங்குடலின் ஒரு பகுதியை அகற்ற வேண்டியதாகிவிட்டது. மருத்துவர்கள் இதற்காக சத்திரசிகிச்சை செய்தனர். இச்சத்திர சிகிச்சை இடம்பெற்று சில மாதங்களில் அவருக்கு தொடர்ச்சியாக வயிற்றில் கடும் வலி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மருத்துவர்கள் எக்ஸ் கதிர்ப்படம் மூலம் அவரது வயிற்றை படம் பிடித்து பார்த்தபோது அதிர்ந்துள்ளனர். அவர் வயிற்றினுள் அறுவைச்சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் ஒன்று இருப்பதை கதிர்ப்படம் தெளிவாகக் காட்டியது. உடனடியாக மீண்டும் ஒரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு கத்திரிக்கோல் அகற்றப்பட்டது.

40,000 வரையான சத்திரசிகிச்சைகளை செய்துள்ளோம். இவ்வாறு ஒரு சம்பவம் நடந்தது இதுவே முதற்தடவை எனக்கூறி இச்சம்பவத்திற்காக மருத்துவமனை அப்பெண்ணிடம் மன்னிப்பு கோரியது.

ஆனால், மருத்துவமனைக்கு எதிராக வழக்கினை தொடர்வது தொடர்பாக, தனது வழக்கறிஞர்களுடன் அப்பெண் இப்போது ஆலோசனை செய்துவருகிறார். வழக்கு நடந்தால் மருத்துவமனை தப்புமா..? நோயாளிகள் தப்புவார்களா..?

62 வயதில் குழந்தைபெற்ற இந்தியத் தாய்!

62 வயதில் குழந்தையொன்றை பெற்றெடுத்ததன் மூலம், உலகத்திலேயே கூடிய வயதில் குழந்தையைப் பெற்ற தாய் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் இந்தியப் பெண் ஒருவர். ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியையான பவானி என்று அழைக்கப்படும் இப்பெண், நீண்டகாலமாக குழந்தையின்றி இருந்துள்ளார். இந்நிலையில், இன்னொருவரால் தானம் செய்யப்பட்ட கருவைத் தனது வயிற்றில் சுமந்து, கடந்தவாரம் இந்தியா கேரளா மாநிலத்தின் திருவேந்திரம் பகுதியில் அமைந்துள்ள சமட் என்ற மருத்துவமனையில் ஆண் குழந்தை ஒன்றை சத்திர சிகிச்சை மூலம் பெற்றெடுத்து சாதனையைப் படைத்துள்ளார்.

'எனது சொந்தப் பிள்ளையை என் கைகளில் ஏந்துவதே என் வாழ்க்கையில் நெஞ்சார நேசிக்கும் கணமாகும்' என்று சொல்லிய அந்தத் தாயின் கனவு, இந்த விஞ்ஞான உலகில் நனவாகியுள்ளது.

சதாம் உசேன் நாவல் எழுதுகிறார்



சிறையில் இருக்கும் தலைவர்கள் நாவல் எழுதுவது என்பது இப்போது நியதியாகி வருகிறது. அமெரிக்க இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கும் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனும் ஒரு நாவல் எழுதி வருகிறார். அவரைச் சந்திக்கச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்றபோது தான் அவர் நாவல் எழுதி வருவது தெரியவந்தது. அவரை நாவல் எழுத அமெரிக்க அதிகாரிகள் அனுமதித்துள்ளனர். அவர் எழுதுவதன் மூலம் அவர் மனநிலையைப் புரிந்துகொள்ள முடியும் என அதிகாரிகள் நினைக்கிறார்கள். இந்த நாவலை அவர் தன்னை ஒரு கதாநாயகனாகவும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்சை வில்லனாகவும் உருவகப்படுத்தி இருக்கிறார். இங்கிலாந்து பிரதமர் டோனிபிளேர், இஸ்ரேல் பிரதமர் ஷரோன் ஆகியோரும் வில்லனாக வருகிறார்கள். இந்த நாவலில் வரும் ஹீரோவுக்கு அவர் சூட்டி இருக்கும் பெயர் சலீம். ஹீரோ சலீம் ஒரு வீரமிக்க அரபு. உயரமானவன். அழகானவன். நீண்டு உயர்ந்த மூக்கும் அதன் கீழ் அடர்த்தியான மீசையும் உடையவன் என்று வர்ணித்து இருக்கிறார்.

சதாம் அதிபராக இருந்த போது இரு நாவல்கள் எழுதி இருக்கிறார். அவை ஈராக்கில் அமோகமாக விற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பலரும் பத்தும்

ஒரே ஒருவருக்காக நடந்த இசை நிகழ்ச்சி

விழாக்கள், நிகழ்ச்சிகள் ஒரு சில பேருடன் நடப்பது ஐரோப்பிய நாடுகளில் தமிழ் மக்களின் அதிகமான நிகழ்வுகளில் காணக்கூடியதுதான். ஆனால், சீனாவில் அதையெல்லாம் மிஞ்சும் வகையில் ஒருவர் மட்டுமே பங்குகொண்ட ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது!

இசை நிகழ்ச்சியை இரசிக்க ஒரே ஒருவர் மட்டும் வந்து இருந்தார். அவருக்காக மட்டும் இசை நிகழ்ச்சி நடந்தது. இந்த சம்பவம் மேற்கு சீனாவில் சிச்சுவான் மாகாணத்தில் செங்கு என்ற இடத்தில் நடந்தது. உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி திரட்டுவதற்காக இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1,500 இலவச நுழைவுச் சீட்டுக்கள் கூட விநியோகிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் ஒரே ஒரு மாணவர் மட்டுமே நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். ஒரே ஒருவர்தான் நிகழ்ச்சிக்கு வந்து இருந்தபோதிலும் திட்டமிட்டபடி இசை நிகழ்ச்சி நடந்தது.

108 வினாடிகளில் தையல்காரரின் சாதனை

108 வினாடிகளில் 2 கால் சட்டைகள் (டிரவுசர்களை) தைத்து சாதனை படைத்து இருக்கிறார் ஒரு தையல்காரர். சீனாவைச் சேர்ந்தவர் யாங் வென்ஷே. 60 வயதான இவர், கடந்த 40 ஆண்டுகளாக தையல் தொழில் செய்து வருகிறார். லியாயோனிங் மாகாணம் ஷென்யாங் என்ற இடத்தைச் சேர்ந்தவர் யாங். இவர் உலகிலேயே வேகமான தையல்காரர் என்று பெயர் எடுத்து இருக்கிறார். அளவு எடுப்பதில் இருந்து அது முழுமையாக தைத்து முடிக்கும் வரை 108 வினாடிகளில் 2 கால்சட்டைகளை இவர் தைத்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்தார். இந்த வேலையை முடிக்க ஒரு சாதாரண தையல்காரருக்கு குறைந்தது 10 நிமிடம் பிடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானம் பேசிவந்தாள் *சந்திரிகா*. சமாதானத்துக்கான யுத்தம் என்று சொன்னாள். யுத்தம், சரணம், கச்சாமி என்று பாடிப்பாடியே தமிழரைப் பழிவாங்கி அழித்தாள். இது வெறும் வரலாறு அல்ல, தமிழர் தலை சரிந்த வரலாறு.

ஆனால் தமிழர் தலை நிமிர்ந்த வரலாற்றின் புள்ளி குறிக்கப்பட்ட நாள்தான் 1976 ஆம் ஆண்டு மேமாதம் 5ம் திகதி. தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தமிழர் தலை நிமிரக்குறிக்கப்பட்டநாள்.

தொழும் வாழ்வு அற
இன்றாயினும் எழுந்தோமே!
தகும் இது.
புலியான வாழ்வே நமக்குப் பெருமைதந்தது.
அடிமாடாய்க் கிடந்தபோது யார் நம்மை மதித்தார்?
உழக்கிச் சென்றனர் எல்லோரும்
புலியெனத் தலை நிமிர்த்திய பின்னரே
நம்மை ஒளிவட்டம் சுற்றிக்கொண்டது
நேற்றுவரை நமக்கு என்ன பெருமை?
காற்றில் சருகான சிறுமை.

இல்லையா? இன்று தலை நிமிர்ந்தோம். இல்லையா? சொல்லுங்கள். நாம் தலை உயர்த்தி எழுந்தது யாரினால்? நெஞ்சு நிமிர்த்தி எழுந்தது எவரினால்? நமது கால் நேராய் நடந்தது யாரால்? நாம் தமிழர் என்று சொல்லிப் பெருமைப்படுவது எவரினால்?

மறவர் படைதான் தமிழ்ப்படை
குலமானம் ஒன்றுதான் அடிப்படை

என்று சொல்ல வைத்தவர் யார்?

வெறிகொள் தமிழர் புலிப்படை
அவர் வெல்வர் என்பது வெளிப்படை

என்று சொல்ல வைத்தவர் யார்? எம் பலம் எத்தகையது என்று எவரினால் நாம் அறிந்தோம்? யானை தன் பலம் அறியாதாம். சிறிய நூலைக்கொண்டே யானையை அடக்கிவிடலாமாம். ஆனால் யானை மிரண்டால் திமிறி எழுந்தால் காடே கொள்ளாதாம். இந்த விதமாய் நாம் எழுந்தோமே! யாரினால் இது சாத்தியமாயிற்று?

தமிழர் நாம் என்று சொல்லி நம்மை தலை நிமிர நிற்க வைத்தவர் யார்? வாழைபோல வெட்ட வெட்ட முளைக்கும் வகை சொன்னவர் யார்? சங்குபோல சுடச்சுட வெளுக்கும் தன்மை சொன்னவர் யார்?

இவற்றுக்கெல்லாம் ஒரு பதில் **1976 மே 5ம் திகதி** அடிக்கோடிட்ட பதில். அகில உலகிற்கே சொன்ன பதில். காலத்துக்குக் காலம் காலால் மிதிபட்டும், வருடமொரு தடவை வதைபட்டும் வந்த வாழ்விற்கு

விடைசொன்ன நாள். புலியாகும் மட்டும் நாம் பிய்த்தெறிபட்டோம். பின்னர்தானே பேசும் பொருளானோம். இன்று உலகெங்கும் நமக்கு வேர்கள். வையப்பரப்பெங்கும் நமக்கு வாய்கள்.

சாவு வரினும் வரட்டும்
போகும் திசைமட்டும் மாறாது.

என்று பொங்கிய புலியின் நாளை நாம்புதிதாய்ப்பதிந்துவைப்போம்

ஈழத்துத் தமிழர்களுக்கு என்று அல்ல, இதயத்தில் தமிழர்களாய் இருக்கும் எவருக்கும் இந்த நாள்தான் இனிய நாள். புதிதாய்ப் பிறந்தோம், புலியாய்ப் பிறந்தோம் என்று சொன்னநாள். உன்னதம் பெற்றநாள். தமிழரென்றால் புலி என்று உரைத்தநாள். உலகெங்கும் தமிழர் தலை நிமிரத்தொடங்கிய நாள்

1976 மே 5ம் நாள்.

RESTAURANT HARIHARAN

குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

இறைச்சிச் சாப்பாடு

பிரியாணிச் சோறு
ஆட்டிறைச்சிக் கறி
கோழிக்கறி
கத்தரிக்காய்க் கறி
பருப்பு
வெங்காயச் சம்பல்
கோழிப் பொரியல்
நண்டு வறை
Salade ஜெலி பலவகை கலர்கள்

சைவச் சாப்பாடு

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

சிற்றுண்டிகள்

வடை	00 € 50
Rol	00 € 60
Samusa	00 € 60
Samusa மரக்கறி	00 € 60
கடலைவடை	00 € 50
பகோடா	4 € 70
மிஸ்சர்	5 € 20
கேசரி	00 € 50



அன்பளிப்பு

* 200 சாப்பாடுக்கு
  20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு
  30 சாப்பாடு இலவசம்

அன்பளிப்பு

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.



- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு


உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்

ஹரிகரன்

20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.
Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran

பேச்சுவார்த்தையைக் குழப்ப ஐக்கிய தேசிய கட்சி சதி?

– ஜாதிக ஹெல உறுமயவைத் துண்டிவிடத் திட்டம்!



புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை நாடத்துவதற்கு சனாதிபதி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்ற அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) அதனைக் குழப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. அதற்கு இரண்டு உத்திகளை ஐ.தே.க கையாளுகின்றது. ஒன்று ஜாதிக ஹெல உறுமய, இரண்டாவது கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவருடனான உறவு. இதில் முதலாவது காரணத்தை நோக்கும்போது, ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி கடந்த இரு ஆண்டுகாலமாக ஆட்சியை நடத்தியது. பொதுத்தேர்தலில் ஆட்சியமைக்க முடியாது போன சூழ்நிலையில் தற்போது பிரதான எதிர்க் கட்சியாக அங்கம் வகிக்கின்றது. பௌத்த குருமாரை மையமாகக் கொண்ட ஹெல உறுமயக்கட்சியின் ஊடாகவே சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்கான ஏற்பாடுகளில் ஐக்கிய தேசிய முன்னணி மறைமுகமாக இறங்கியிருக்கின்றது. திலக் கருணாரட்னவின் தலைமையிலான சிஹல உறுமய என்ற கட்சியே ஜாதிக ஹெல உறுமய என்ற பெயர் மாற்றம் பெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கரு ஜெயசூரியவின் முயற்சியினாலேயே முற்றிலும் பௌத்த குருமாரைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய உருவாக்கப்பட்டது.



ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியின் தேர்தல் செலவுகளிற்கான நிதிகள் அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐக்கிய தேசிய முன்னணி) முக்கியஸ்த்தரும், சிறீலங்கா கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை சிறீலங்கா ரெலிகொம் தலைவரும், விசா மோசடிக் குற்றச்சாட்டில் தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவருமான திலங்க சுமதிபாலவின் மூலமாகவே வழங்கப்பட்டன. ஜாதிக ஹெல உறுமயவின் போசகராகத் திலங்க சுமதிபாலவின் தாயார் மிலினா சுமதிபால பதவி வகிக்கின்றார். சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகளை உடைப்பதற்காகவே ஜாதிக ஹெல உறுமயவை ஐ.தே.க பொதுத் தேர்தலில் இறக்கியது. ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக ஐ.தே.கவின் வாக்குகளையே ஹெல உறுமய பெற்றுக்கொண்டது. இருந்தாலும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்துகொண்டு ஹெல உறுமய ஐ.தே.கவிற்கு ஆதரவு வழங்குகின்றது.

சமாதான நடவடிக்கைகளை ஐ.தே.க நேரடியாகக் குழப்பவோ அல்லது அது பற்றிய எதிர் விமர்சனங்களை முன்வைக்கவோ முடியாது. ஏனெனில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஆட்சியமைத்திருந்த வேளை தீவிரமான முறையில் புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்கள் அவர்கள். அது மட்டுமல்ல, அப்போது சனாதிபதியும் ஜே.வி.பியும் ஏனைய பௌத்த குருமார்களும் சமாதான முயற்சிகளை விமர்சித்த போது அதனை எதிர்த்து, சர்வதேச சமூகத்திற்குத் தங்களைச் சமாதான விரும்பிகளாக காண்பித்தவர்கள். அத்துடன், சனாதிபதியின் இடையூறுகள் இல்லையென்றால் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் மேலும் மேலும் முன்னேற்றங்களைக் காணமுடியும் என்றும், பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் அப்போது கதைவிட்டவர்கள் அவர்கள். ஆனால், தற்போது எதிர்பாராதவிதமாக எதிர்க்கட்சியாக மாறிய நிலையில், நோர்வேயின் மத்தியஸ்த்தத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தையை நேரடியாக எதிர்த்தால் தமது உண்மையான சுயரூபம் தெரிந்துவிடும் என்ற நோக்கிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் பின்னால் மறைந்திருந்துகொண்டு நாடகம் ஒன்றை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றார்கள்.


ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரவி கருணாநாயக்கா, மகிந்த சமரசிங்கா ஆகியோர் தமது வீடுகளில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களுடன் தீவிரமாகக் கலந்துரையாடி வருகின்றனர். முக்கியமாக விடுதலைப் புலிகளையும் சனாதிபதியின் சமாதான முயற்சிகளையும் ஜே.வி.பியின் முன்னைய நிலைப்பாட்டையும் தற்போதைய நடைமுறையையும் விமர்சித்தல், நாடாளுமன்றத்தில் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து வாக்களித்தல், தமக்கு சாதகமான விடயங்களில் அரசிற்கு ஆதரவாகச் செயற்படுதல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றன. ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவர் எல்லாவல மேதானந்த தேரர், ரவி கருணாநாயக்காவின் நெருங்கிய நண்பர். தற்போது சிறையில் இருக்கும் திலங்க சுமதிபாலவை வெளியில் கொண்டு வந்து அவருக்கு எதிரான வழக்குகளையும் தள்ளுபடி செய்வதற்குரிய வகையில் சனாதிபதியிடம் நிபந்தனைகளை விதித்துத் தற்காலிகமாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க ஹெல உறுமய முடிவு செய்திருக்கின்றது. இந்த முடிவு, மேற்படிச் சந்திப்பின் போதே எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகமொத்தம் தமக்குச் சாதகமான சில விடயங்களிற்கு ஹெல உறுமய மூலமாக அரசாங்கத்திடம் இருந்து சில சலுகைகளையும் ஐக்கிய தேசியக்கட்சி பெற இருக்கின்றது போல் தெரிகின்றது. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விரும்பியோ விரும்பாமலோ சனாதிபதியும் ஜாதிக ஹெல உறுமயவினரின் சில நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். முக்கியமாகத் திலங்க சுமதிபால விவகாரம். அது வெற்றிகரமாக முடிந்த பின்னர்தான் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பிலான அழுத்தங்களை ஹெல உறுமய மூலமாகச் சனாதிபதி எதிர்கொள்ளப்போகின்றார் என்பதும் கூடுதல். ஒருவகையில் கூறுவதானால் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு தம்மைச் சமாதானப் புறாக்களாகவும், அதேவேளை சிங்கள மக்களுக்குத் தர்மராச்சியத்தைக் காப்பாற்றும் தேசப்பற்றாளர்களாகவும் சித்தரிப்பதற்கு ஐ.தே.க. தயாராகின்றது.

– கொழும்பிலிருந்து
ஊரோடி

இந்திய தூதுவரின் இல்லத்தில் ஐ.தே.க. பிரமுகர்களின் இரகசியக் கலந்துரையாடல்கள்

சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் ஐ.தே.கவின் இரண்டாவது உத்தியை ஆராயும் போது ஐ.தே.க தனது இரட்டை வேடத்தை வெற்றிகரமான முறையில் கொண்டு செல்வதற்குக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் இந்தியத் தூதுவரின் இல்லத்தில் ரவி கருணாநாயக்காவும் மகிந்த சமரசிங்காவும் மற்றும் ஐ.தே.கவின் பிரதேச அமைப்பாளர்கள் சிலரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இந்தியத் தூதுவரின் நோக்கம் ஐ.தே.கவிற்குத் தெரியாததல்ல. அதே போன்று ஐ.தே.கவின் நோக்கமும் இந்தியத் தூதுவருக்குத் தெரியாததல்ல. சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால் நோர்வேயின் மத்தியஸ்த்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடையூறு விளைவிக்க வேண்டும் என்பதில் இந்தியத் தூதுவரும், சனாதிபதியின் முயற்சிகளைக் குழப்பியடித்துச் சிங்கள மக்கள் முன்னிலையில் தங்களை தேசப்பிரியர்களாகக் காட்ட வேண்டும் என்பதில் ஐ.தே.கவும் குறியாக இருப்பதினால், இரண்டு நோக்கங்களும் ஒன்றிற்கு ஒன்று சாதகமான முறையில் அமைந்திருக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இருந்தபோதும் இதேபோன்றுதான் இந்தியத் தூதுவருக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான உறவு அமைந்திருந்தது. *(இது பற்றிக் கடந்த காலங்களில் இப்பத்தியில் எழுதப்பட்டுள்ளது)*



யார் குற்றியேனும் அரிசியாக வேண்டும் என்பது போல், இந்தியத் தூதுவர் நிருபம் சென்னை பொறுத்தவரை யாரைப் பயன் படுத்தியேனும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைப்பதைத் தடுத்து விட வேண்டும். அத்துடன் புலிகளை மட்டம் தட்டவேண்டும் என்ற சிந்தனைதான் அவருக்கு மேலோங்கி நிற்கின்றது. ஐக்கிய மக்களைச் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்கி அதனைப் பொதுத்தேர்தலில் வெற்றிபெறச் செய்து ஆட்சியமைக்க உதவியளித்தார். ஆனால் அவர் எந்த நோக்கத்திற்காக அதனை உருவாக்கினாரோ அது நிறைவேறவில்லை. மாறாக புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சுதந்திர முன்னணி தயாராகிவிட்டது. தற்போது நிருபம் சென்னுக்கு கிடைத்திருக்கும் தும்பு ஐக்கிய தேசியக்கட்சிதான்.

சிறீலங்கா அரசியலில் இந்த நடைமுறை வரலாற்று ரீதியாக இடம்பெற்று வருகின்ற ஒன்றுதான். புதிய விடயமல்ல. ஆனாலும் சர்வதேச சமூகத்திற்குத் தங்களைச் சமாதான விரும்பிகளாகக் காண்பித்தவர்கள், பின்னாளில் அதற்கு விரோதமாக எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதைச் சர்வதேசச் சமூகம் ஏன் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றது என்ற கேள்வி, தமிழ் மக்கள் மத்தியில் எழுகின்றது. அல்லது, தெரிந்தும் தமது அரசியல் இலாபங்களுக்காகச் சர்வதேச சமூகங்களும் தமிழ்மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றார்களா என்ற சந்தேகம் நிலவுகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு முன்னர் நோர்வேயின் சமாதானப் பணிகளையும் விடுதலைப் புலிகளையும் காரசாரமாக விமர்சித்த சனாதிபதி சந்திரிக்கா, தற்போது தீவிரமாக நோர்வேயின் உதவியை நாடியிருப்பதன் நோக்கமென்ன?

இலங்கைக்குப் படை அனுப்ப இந்திரா காந்தி தீட்டிய திட்டம்



அங்கம் 7

ஆரோஹணம்! நோ நோவோ!

(பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர்)

ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் இரு முறை ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டிருக் கின்றார்கள். பதினாறாம் நூற்றாண்டில் நல்லூர் அரசன் தலைமையில் போத்துக்கேயர்களையும், இருபதாம் நூற்றாண்டில் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் இந்தியர்களையும் அவர்கள் எதிர்த்தார்கள். யாழ்ப்பாணத் தின் இறுதி அரச பரம்பரையினன் 1591ம் ஆண்டு போத் துக்கேயர்களினால் கொல்லப்பட்டான். அந்த அரசன் இடத்தில் ஒரு 'சோதாப் பயலை' அவர்கள் அரியாசனம் ஏற்றி தமது ஆட்சியைத் தொடர்ந்தனர். 1987-1990 காலப் பகுதியில் இந்தியர்கள் ஒரு ஆக்கிரமிப்புப் போரை ஈழத் தமிழர்கள் மீது திணித்தனர். மாத்தையா என்ற சோதாப் பயலை பதவியேற்ற அவர்கள் எடுத்த முயற்சி தோல்வி கண்டது. தனது முயற்சியில் விடாப்பிடியாக இருந்த இந்தியர்கள், அண்ணா லை வரதராஜப்பெருமாள் என்ற இன்னுமொருவனைத் தூக்கி வைத் தனர். இந்திய இராணுவம் வெளி யேறும்போது அவனும் முண்டிய டித்துக் கொண்டு ஓடிவிட்டான்.




இந்த நிகழ்ச்சிகளை மீள் பார்வை செய்வோம். ஜூன் 04, 1987இல் *'ஒப்பரேசன் பூமாலை'* நடைபெற்றது. அதே யாழ். குடா நாட்டின் மீதான இந்தியப் படைக ளின் *'ஒப்பரேசன் பவான்'* என்ற ரிய இராணுவ நடவடிக்கை ஒக் ரோபர் 10, 1987ல் நடத்தப்பட்டது. அதாவது படுமோசமானதொரு வஞ்சகச் செயலை இந் தியர்கள் அரங்கேற்றினார்கள்.

பவான் என்ற இந்திச் சொல்லிற்குப் பெருங்காற்று என்று அர்த்தம். புயல் என்று கூடச் சொல்லலாம். தமிழர் கள் மீதான தாக்குதல்கள் ஒரு விபத்தல்ல. இது முன் கூட்டியே நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட வரலாற்று நிகழ் -ச்சி. தமிழர்களுடைய தேசிய எழுச்சியைக் கருவியாகப் பயன்படுத்தி சிங்கள அரசை அடிபணிய வைத்த பின் அதே தேசிய எழுச்சியைக் கொன்றொழிப்பதுதான் இந்தி யன் வகுத்த திட்டம். பஞ்சதந்திரங்களில் ஒன்றான அடுத் துக் கெடுத்தலை அவர்கள் தமக்குத் தெரிந்த விதத்தில் நடைமுறைப்படுத்தித் தோல்வி கண்டார்கள்.

ஜூலை 29, 1987இல் ஒப்பந்தம் செய்யும்போதே தமி ழர் தேசிய எழுச்சியை முன்னெடுத்த புலிகளை இரா ணுவ ரீதியாக அழிப்பதற்கு இந்தியா தீர்மானித்திருந்தது. அதற்கான சான்று ஒப்பந்தத்திலேயே இருக்கின்றது. ஒப் பந்தத்தின் சரத்து 2.9 'சிறீலங்கா அரசினால் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் ஆயுதக் குழுக் களிடமுள்ள எல்லா ஆயுதங்களும் கையளிக்கப்பட வேண்டும்.' 'இரு பக்க போர்நிறுத்தம் அமுலுக்குள் வரு கின்ற 72 மணி நேரத்திற்குள் ஆயுத ஒப்படைப்பும் சிறீ லங்கா ஆயுதப்படைகள் தமது முகாம்களுக்குள் முடங்கு தும் நடைபெற வேண்டும்' ஆனால் எல்லாம் தவறான பாதையில் சென்றன. புலிகளின் திடசங்கற்பமும் கொள் கைப்பிடிப்பும் இந்தியர்கள் வகுத்த திட்டத்திற்கு குறுக்கே நின்றன.

இந்தியர்களின் இரு வருட ஆக்கிரமிப்பு புலிகளை இறுக்கமான இராணுவமாகக் கட்டியெழுப்பியதோடு வடக்கு-கிழக்கு உள்ளடங்கலான தமிழீழத்தின் எல்லை களை நிர்ணயம் செய்வதற்கும் உதவியது. சி.ஐ.ஏ உளவ மைப்பின் உறுப்பினரும் பயங்கரவாதம் பற்றிய கற்கையில் கலாநிதிப் பட்டம் பெற்ற இங்கிலாந்தில் வதியும் சிங்களவர் றோகான குணரத்தினா, சிறீலங்காவில் இந்தியத் தலையீடும் இந்திய உளவமைப்புக்களின் பங்களிப்பும் என்ற ஆய்வு நூலில் இலங் கையை ஆக்கிரமிக்கும் திட்டம் இந்திரா காந்தியின் காலத்திலேயே தீட்டப்பட்டதாக வும், உளவுப்படையின் ஊடுருவல் அப் போதே ஆரம்பித்து விட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (Indian Intervention In Sri Lanka: The Role of India's Intelligence Services : Rohan Gunaratna , Published By South Asian Network on Conflict Research, Colombo 1993) இந்திரா காந்தி இலங்கை மீது படையெடுப்பதற்குத் தயார் நிலையில் கேரளாவின் திருவனந்தபுரத்தில் விமானப் படையணியையும் பிறிதோர் இராணுவ முகா மில் தரைப்படையணிகளையும் வைத்திருந்தாக யாவரும் அறியக் கூடியதாக தகவல்கள் கிடைக்கின்றன.

1987இல் அமைதிப்படை என்ற பெயர் சூட்டப்பட்டதே மிகவும் வியப்பூட்டும் விடயமாகும். ஓர் ஆக்கிரமிப்பைக் குறியாகக் கொண்ட படை ஐ.பி.கே.எப். என்ற பெயருடன் உட்புகுவது உலக வரலாற்றில் முதலாவதாகக் கருதப்படு கின்றது. ஐ.நா செயலாளர் நாயகம் பெரஸ் *தி குயிலர்* (Perez de Cueller) அமை திப் பணிக்காக ஐ.நாவுக்கு வழங்கப்பட்ட நோபேல் பரிசை ஏற்கும்போது, 'அமைதிப்படையினர் எதிரி களற்ற படையினராவார். பிணக்கில் பங்குபற்றாது அவர்கள் நடுநிலை வகிக் கின்றனர் அவர்கள் சர்வ தேச சமூகத்தின் பிரதிநிதி களாக நிற்கின்றனர். அவர் களுடைய பிரசன்னம் அமை தியைப் பேண அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது' என்றார். இந்தியப் படை மேற்கூறிய வரையறைக்குள் உட்படாத படை அது இவ்வாறு தன்னை அழைத்ததால் ஒரு கெடுதலான முன்னுதாரணம் உருவாக்கப்பட்டது. இந்தியாவைப் பின்பற்றி தனது தமிழர்களுக்கு எதிரான போரைச் சந்திரிகா 'அமைதிக்கான போர்' (War for peace) என்று அழைப்பதற்கு அது உடனடி உதவி புரிந்தது. ஒரு பொருத்தமில்லாத பெயர் இன்னுமொரு பொருத்தமில்லாத பெயர் வைப்பிற்கு முன்மாதிரியாக அமைந்தது.



1987இல் அமைதிப்படை என்ற பெயர் சூட்டப்பட்டதே மிகவும் வியப்பூட்டும் விடயமாகும். ஓர் ஆக்கிரமிப்பைக் குறியாகக் கொண்ட படை ஐ.பி.கே.எப். என்ற பெயருடன் உட்புகுவது உலக வரலாற்றில் முதலாவதாகக் கருதப்படுகின்றது.

ஐ.பி.கே.எப்.பின் வருகைக்கு முன்னரே தீட்டப்பட்ட திட்டத்தின் நீட்சி என்பதைப் பின்வருவனவற்றில் இருந்து அறியலாம். இந்திய விசேட படையணிகளில் ஒன்றான விமானம் மூலம் தரையிறங்கும் படை (Para Brigade) கட் டுநாயக்கா, பலாலி, திருகோணமலை ஆகிய விமானதளங் களை அதிவேக நடவடிக்கை மூலம் கைப்பற்றி தாக்கு தல் அணிகளின் வருகைக்கு ஒத்தாசை புரிவார்களாம். இப்பணி 50ஆம் சுயாதீன விமான மூலம் தரையிறங்கும் படைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது இந்திராகாந்தி பதவி வகித்த காலத்தில் 1984இல் தீட்டப்பட்ட திட்டம். 50வது INEPENDENTANT PARA BRIGADE என்ற



பெயருடைய இவ்வணி வட இந்தியாவின் ஆக்கிரா (Agra) விமானதளத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. தரைப் படை மற்றும் கடற்படை அணிகள் கேரளாவின் திருவ னந்தபுரம் விமானத் தளத்திலும் கொச்சி கடற்தளத்திலும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்திரா காந்தியின் உத்தரவு கிடைத்ததும் திட்டம் நிறைவேற்றப்படவிருந்தது. இத்திட்டம் அம்பலமான விதம் சுவாரஸ்சியமானது. இந்திரா காந்தியின் இறுதிக்காலத்தில் உயர் மட்டத்தினரின் உதவியோடு வெளிநாடுகளுக்கு இந் திய ஐந்தாம் படையினர் பல இராணுவ இரகசியங்களை விற்றுப் பணமாக்கினர். பிரதமர் அலுவலகத்திலேயே இப் படியான திருடர்கள் இருந்திருக் கின்றார்கள். இவர்கள் இந்தியா வுக்கான பிரெஞ்சுத் தூதுவ ருக்கு விற்ற ஆவணங்களில் மேற்கூறிய தாக்குதல் திட்டத் தின் பிரதிகளும் காணப்பட்டன. இச்செய்தி கொழும்பில் பிரசுர மாகும் *த ஐலன்ட்* என்ற ஆங்கி லப் பத்திரிகையில் காணப்படு கின்றது (Island, 12 July 2000. Indian Rope Tricks Which Boomeranged, A Feature By Ravana).

பிரதமர் றணிலின் யு.என்.பி அரசால் பாதுகாப்பு அமைச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்ட முன்னாள் புலனாய்வு அதிகாரி யும் உதவிப் பொலிஸ்மா அதிப ருமான மெரில் குணரத்தினா ஒப்பரேசன் பவான் பற்றிய புதிய தகவல்களைச் சென்ற வருடம் கசிய விட்டுள்ளார். ஐ.பி.கே.எப். நடவடிக்கைகள் பற்றி இலங்கைக்கான இந்தியத் தூதர் டிக்சிற் தனது நூலிலும் வேறு நேர்காணல்களிலும் கூறி யவற்றைக் கணக்கில் எடுக்கும் போது மெரில் குணரத்தினா கூறியதை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவற்றையெல்லாம் அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.

(தொடரும்)



விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography



புத்திசிகாமணி பதில்கள்

அண்மையில் சில அரபுத்தொலைக்காட்சிகளில் தோன்றிய அமெரிக்க சனாதிபதி புஸ் ஈராக்கிய கைதிகள் மீதான அமெரிக்க இராணுவத்தின் மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளமையானது எதனை வெளிப்படுத்துகிறது?

ச. சிவலிங்கம் – பாரிஸ், பிரான்ஸ்.

ஜோர்ஜ் புஸ் தனது நாட்டின் இராணுவத்தினர் மீதே கண்டனம் தெரிவிப்பதென்பது விசித்திரமானது. அந்தக் கண்டனத்தை அரபுத் தொலைக்காட்சிகளில் தோன்றி வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது இன்னும் விசித்திரமானது. உண்மையில் அரபுலகத்தின் கோபாவேசத்தையும் பேரெழுச்சியையும் தணித்துக்கொள்வதற்காகவும், சர்வதேசத்தின் கண்டனங்களில் இருந்து தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்வதற்காகவும் புஸ் நடத்திய தொலைக்காட்சி நாடகங்கள்தான் இவையெல்லாம்.

தமிழகம் வந்திருந்த காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அவர்களை 'இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க' எனக் கலைஞர் கருணாநிதி அடுக்கு மொழித் தமிழில் வரவேற்றுள்ளாரே...?

கு. சிவபாலசுந்தரம் – பாரிஸ், பிரான்ஸ்.

அரசியலைவிட அடுக்குமொழியும் அழகு தமிழும்தான் கருணாநிதிக்கு கைவந்த கலையாச்சே. கருணாநிதி ஒரு நல்ல அரசியல்வாதி அல்ல. ஆனால் அவர் ஒரு நல்ல தமிழ்மொழி வல்லுநர் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. சோனியா மீது அவர் அடுக்கிய மொழித் தொடரும் அதைத்தான் புலப்படுத்துகிறது. 'பூசாரியைத் தாக்கினேன் அவன் பக்தன் என்பதற்காக அல்ல...' எனத் தொடரும் அன்றைய கருணாநிதியின் வசனங்களைக் கூட இன்னும் எம்மால் மறக்க முடியவில்லையல்லவா.

புத்திசிகாமணியாரே! ஜேர்மனி டொட்முன்ட் பகுதியில் வசித்து வருகிறேன். இதுவரை எனக்கு நிரந்தர வதிவிட அனுமதி கிடைக்கவில்லை. பிரான்ஸ் வந்தால் நம்பிக்கையாக விசா பெறமுடியும் எனவும் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சாஸ்திரியார் ஒருவர் விசேட பூசைகள் சில செய்வதன் மூலம் இமிக்கிரேசன் விசா பெற்றுக்கொடுப்பதாகவும் எனது நண்பர் ஒருவர் கூறினார். நான் அங்கு வந்தால் பலன் கிடைக்குமா?

சி. குணபாலசிங்கம் – டொற்முன்ட், ஜேர்மனி.

நீங்கள் பிரான்ஸ் வந்தால் உமக்கு பலன் கிடைக்குமா இல்லையா என்பது உங்களது முயற்சியைப் பொறுத்த விடயம். ஆனால் சாஸ்திரியார், பூசைகள் என உங்களது நண்பனின் பேச்சை நம்பி இங்கு வராதீர். அண்மைக்காலமாகத் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளை நோக்கி பூசாரியார், சாஸ்திரிமார், மாந்திரிகர்கள், நாட்டு வைத்தியர்கள் எனப் பல வகையறாக்கள் படையெடுக்கத் தொடங்கியுள்ளார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களின் பலவீனங்கள் மீதும், சுமைகள் மீதும் குறிவைத்து அவற்றை

விசேட பூசைகள் மூலம் இமிகிரேசன் விசா கிடைக்குமா?

காசாக்கிக்கொள்ள இவர்கள் முயல்வதை எம்மால் அறிய முடிகிறது. ஏற்கனவே தமிழகத்திலிருந்து சீரழிவுச் சினிமாக்களும் தொ(ல்)லைக் காட்சிகளுமாகப் புகலிடத் தமிழர்களை அலைக்கழித்துக்கொண்டிருக்கும் நிலையில் தற்போதைய பகுத்தறிவுக்குச் சவால் விடும் புதிதான கிருமிகளின் வருகை குறித்துப் புகலிடத் தமிழர்கள் அனைவருமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இலங்கை கிரக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் உலக சாதனை குறித்து உங்கள் கருத்தென்ன புத்திசிகாமணியாரே?

தவமோகன் – லியோன், பிரான்ஸ்.

முரளியின் சாதனையால் தமிழர்களுக்குப் பெருமை. இலங்கைவாழ் அனைத்து மக்களுக்கும் பெருமை. வாய்ப்பும் வசதியும் கிடைத்தால் எம்மாலும் சாதிக்க முடியும் என நிரூபித்திருக்கின்றார் முரளிதரன். அவரை நாமும் வாழ்த்தி வரவேற்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்கள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்க சனாதிபதி தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதே...?

த. சிவகுமாரன் – பாரிஸ், பிரான்ஸ்.

தற்போதைக்கு அதைத் தவிர வேறு வழி சனாதிபதி சந்திரிகாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. போரா, சமாதானமா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு சந்திரிகாவிடமே விடப்பட்டிருக்கிறது. சமாதானத்தைத் தேர்வு செய்வது சந்திரிகாவுக்குத் தவிர்க்க முடியாமல் இருந்தாலும் அதை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதென்பதே அவருக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கப் போகிறது.

நோர்வேயை மிகக் கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி, தனது வேகத்தைத் தணித்துக்கொண்டுள்ளதே, ஏன்?

த. குருபரன் – பாரிஸ், பிரான்ஸ்.

எல்லாம் அந்தச் சர்வ வல்லமை பொருந்தியவரின் அன்புக் கட்டளையினால்த்தான் என அறிய முடிகிறது. அத்துடன் தற்போது தமக்குக் கிடைத்திருக்கும், முன் எப்போதும் இல்லாத அரிய வாய்ப்பைப் பயன்படுத்தித் தமது கட்சியை ஸ்திரப்படுத்தவும், சிங்களக் கிராமப்புற மக்கள் மத்தியில் தமது கட்சிக்கு உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்துவதிலுமே அவர்கள் தமது முழுக்கவனத்தையும் செலுத்துவதுபோல இருக்கிறது.

தமிழ் ஊடகங்கள் மீது இந்தியத் தூதுவர் நிருபம் சென் மீண்டும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளாரே. ஏன்?

க. கருணாகரன் –சென்ரனிஸ், பிரான்ஸ்.

தமிழ் தேசியத்தின் பின்னால் தமிழ் ஊடகங்கள் அனைத்தும் அணிவகுத்து நிற்பதை இந்தியத் தூதுவர் நிருபம் சென் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இந்தியாவின் ஊதுகுழல்களாகவும், இலங்கை மீதான தமது பிராந்திய ஆதிக்கச் செயற்பாடுகளைத் தமிழ் ஊடகங்கள் வெளிப்படுத்தக்கூடாது எனவும் அவர்கள் அவாக் கொள்கிறார்கள். அண்மையில் நடந்து முடிந்த கருணா விவகாரத்தில் ஒட்டுமொத்தமாகத் தமிழ் ஊடகங்கள் எடுத்த நிலைப்பாடு இந்தியாவை அதிர்ச்சிகொள்ள வைத்ததுடன் பெரும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. அத்துடன் தேர்தல் முடிவுகளும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை முன் எப்போதும் இல்லாதவாறு அபாரமாக வெளிப்படுத்திவிட்டது. இவை எல்லாமே நிருபம் சென் அவர்களை எரிச்சல் அடையச் செய்துள்ளது. இதனாலேயே அவர் தமிழ் ஊடகங்கள் மீது மீண்டும் சீறிப்பாய்ந்துள்ளார்.

எந்தக்கட்டத்திலாவது சந்திரிகா - ரணில் இணைவு சாத்தியப்படுமா?

வேனிலவன் – பாரிஸ், பிரான்ஸ்.

தமிழர்களின் விடிவிற்காக அது ஏற்படாது. தமிழர்களின் முடிவுக்காக சில வேளைகளில் அது ஏற்படலாம்.

சாதனையின் உச்சியில் முரளிதரன்

சிறீலங்கா கிரிக்கெற் அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்தியவர் வரிசையில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். 513 விக்கற்றுக்களை வீழ்த்தி இருந்த நிலையில், சிம்பாவே சென்ற முரளிதரன் கடந்த 06.05.2004 அன்று முதல் ரெஸ்ற் போட்டியின் முதலாவது இனிங்சில் 24.2 ஓவர்களில் 45 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெற்றுக்களை வீழ்த்தி, அதுவரை உலக சாதனையாளராகத் திகழ்ந்த மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் குற்னி வால்சின் சாதனையான 519 விக்கெற்றுக்கள் என்ற இலக்கினை அடைந்தார். 2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 132 ரெஸ்ற் ஆட்டங்களில் இச்சாதனையை குற்னிவால்ஸ் படைத்திருந்தார். அதே சாதனையை கடந்த வாரம் (2004- மே) 89 ரெஸ்ற் ஆட்டங்களில் முத்தையா முரளிதரன் எட்டியுள்ளார். தொடர்ந்து 08.05.2004 அன்று இரண்டாவது இனிங்சில் 8.1 ஓவர்களில் 27 ஓட்டங்களிற்கு இரண்டு விக்கெற்றுக்களை பெற்றார். இவ்விரண்டு விக்கெற்றுக்களுடன் 521 என்ற உயரிய இலக்கினைப் பெற்று இன்று உலக சாதனையாளர் என்ற பட்டத்தினையும் பெற்றுள்ளார். அதே சமயம் இச்சாதனையைப் படைத்த முதலாவது சுழற்பந்து வீச்சாளரும் இவரே. அண்மைக் காலங்களில் பலமுறை இவரது பந்துவீச்சினை விமர்சனத்திற்கு உள்ளாக்கிய அவுஸ்திரேலியா, அடுத்தமாதம் சிம்பாவே செல்லவுள்ளது. அப்பொழுது 517 விக்கெற்றுக்களுடன் காத்திருக்கும் சேர்ன்வார்ன் தனது முத்திரையைப் பதிய முயலுவார் என்பதில் சந்தேகம் இல்லை. முரளிதரன் பெற்றுள்ள 521 விக்கெற்றுக்களில் 337, தனது நாட்டில் (சிறீலங்கா) பெற்றவையாகும். அதே சமயம் 401 விக்கெற்றுக்கள் ஆசியாவிலும், 47 ஆபிரிக்காவிலும் பெற்றவையாகும். இவரது சுழல்பந்திற்கு இரையாகியவர்களில் தென் ஆபிரிக்கா (77), இங்கிலாந்து, சிம்பாவே (தலா 69), இந்தியா(51), அவுஸ்திரேலியா(50) என்பன குறிப்பிடத்தக்கவை. இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் கபில்தேவின் சாதனையை சிம்பாவேயிற்கு எதிரான ஆட்டத்திலேயே மேற்கு இந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் குற்னி வால்ஸ் முறியடித்தது போலவே இன்று முரளியும் குற்னி வால்சிற் சாதனையை



சிம்பாவேயிற்கு எதிரான ஆட்டத்தில் முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காவுடனான முதல் ரெஸ்ரில் முதலாவது இனிங்சில் 5 விக்கெற் இழப்பிற்கு 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதுவே ரெஸ்ற் வரலாறு தொடங்கிய காலம் முதல் (1876) இன்றுவரை, குறைந்த ஓட்டங்கள் ஆகும். இதற்கு முன்னர் 1954ம் ஆண்டு இங்கிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இம்முதலாவது ரெஸ்ரில் சிறீலங்கா முதல் இனிங்சில் 541 ஓட்டங்களைப் பெற, சிம்பாவே 102 ஓட்டங்களைப் பெற்றதனால் இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை தொடரவேண்டி ஏற்பட, அதில் 199 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்தது. இதனால் சிறீலங்கா ஒரு இனிங்ஸ் 240 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. 1992 இல் ரெஸ்ற் அந்தஸ்து பெற்ற சிம்பாவேயிற்கு இது மறக்க முடியாத தோல்வியாகும்.

* * *

உதைபந்தாட்டம்

பின்தள்ளப்பட்ட ஐரோப்பிய ஜாம்பாவான்கள்

கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் முதல்முறையாக ஐரோப்பிய முதன்மை அணிகள் சுற்றில் இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற தவறிவிட்டன. முன்னணி அணிகள் இத்தாலி, ஸ்பெயின், ஜேர்மனி, இங்கிலாந்து என்பனவற்றின் முன்னணிக் கழகங்களில் எதுவும் இவ்வாண்டின் இறுதியாட்டத்திற்குத் தகுதிபெறவில்லை. மிகுந்த பெருமைக்கும், பெரும் நிதி வருவாயையும் கொடுக்கும் இச்சுற்றுப் போட்டியே இப்பிராந்தியத்தின் முதன்மைச் சுற்றுப்போட்டியாகும். கடந்த ஆண்டுச் சம்பியனான மிலான் ஏ.சி ஒன்பது முறை இக்கிண்ணத்தை வெற்றி கொண்டவர்களும்- உதைபந்தாட்ட முன்னணி நட்சத்திரங்களைத் தன்னகத்தே கொண்டவர்களுமான ஸ்பெயினின் றியல்மட்றிட், உலகின் பணபலம் பொருந்திய முதலாவது அணியான இங்கிலாந்தின் மன்செஸ்ரர் யுனைரெட், ஜேர்மனியின் வெயன்மியூசிச் போன்ற முன்னணி அணிகள் இம்முறை இரண்டாவது சுற்றின் ஆரம்பத்தில் இருந்து மறையத் தொடங்கின. இறுதியாக இத்தாலியின் மிலான் ஏ.சி அணி தேறும் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் லகுறோன் அணியினால் ஊதித் தள்ளப்பட்டுவிட்டது. காலிறுதி ஆட்டத்தில் பிரான்சின் மொனாகோ அணியிடம் மறக்க முடியாத் தோல்வியினை அடைந்தது றியல் மட்றிட், இவ்வாறு முன்னணி அணிகள் எல்லாம் இரண்டாம் நிலை அணிகளால் பந்தாடப்பட்டன.

அரையிறுதி ஆட்டத்தில் மொனாகோ அணி இங்கிலாந்தின் செல்சியினை (3:1, 2:2) 5:3 எனும் நிலையிலும், போர்த்துக்கல்லின் போர்த்தோ அணி ஸ்பெயினின் லகுரோனை (0:0, 0:1) 1:0 எனும் நிலையிலும் வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளன. மொனாகோ அணியானது முதல் முறையாக இச்சுற்றுப்போட்டியில் (Champions League) இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றுள்ளது. போர்த்தோ அணி இக்கிண்ணத்தை 1983 வெற்றி கொண்டது குறிப்பிடத்தக்கது.

– ஜே. ஜே.



கருணாவின் பெயரால்...

கருணா என்ற முரளீதரன் தமிழர் தாயகத்தை விட்டு அகற்றப்பட்டு ஒரு மாதம் ஆகுகின்ற நிலையில், அவரின் பெயரை வைத்து அமைதி முயற்சியை குழப்புவதற்கும், கிழக்கின் இயல்பு நிலையைச் சீரழிப்பதற்கும், ஸ்ரீலங்காவின் படைத்துறை கட்டளைப் பீடமும், புலனாய்வுத்துறையும் தீவிரமாக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பது தெரிந்த விடயம்தான்.

இந்த முயற்சியின் தொடர்ச்சியாக, இங்கே புலம் பெயர்ந்த நாடுகளிலும் சில நபர்கள் இந்தக் கருணா என்ற நபரை வைத்து பிழைப்பு நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

மார்க்சிச விமர்சகர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் ஜனநாயகவாதிகள் என்றெல்லாம் விதம் விதமான முகமூடி அணிந்திருக்கும், விரல்விட்டு எண்ணக் கூடிய இந்தப் பிழைப்புவாதிகள் கணினியையும் இணையத்தள தொடர்பையும் வைத்துக்கொண்டு கருணாவை இன்னும் செயலூக்கத்துடன் இருக்கும் ஒரு நபராகக் காட்டுவதற்கு அதி தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் தேசியத் தலைவருக்கும் தானே மரபுவழிச் சமரை கற்றுக் கொடுத்ததாக சவடால் விட்ட கருணா விடுதலைப் புலிகள் அவரை தாயக மண்ணிலிருந்து அகற்றுவதற்கான சமரை ஆரம்பித்த போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டமெடுத்த கதை, இந்த நபர்களுக்குத் தெரியாததல்ல.

தன்னை நம்பி தன்னுடன் கூடவந்த சகாக்களைக் கூட கொழும்பில் தவிக்க விட்டுவிட்டு தன்னைக் காத்துக் கொள்வதற்குத் தனக்குத் தேவையான சிலரை மட்டும் அழைத்துக் கொண்டு படையினரின் பாதுகாப்பில் பதுங்கியிருக்கும் கருணாவின் நரித்தனமும் இவர்களுக்குத் தெரியாததல்ல.

துரோகம் செய்வது, காட்டிக் கொடுப்பது, குழப்பம் விளைவிப்பது, பணம் பதவிகளுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பது முதலாவையே தங்களது அகராதியில் அதி உயர்ந்த பட்ச ஜனநாயக நடவடிக்கைகளாகக் கருதும் இவர்களைப் பொறுத்தவரை கருணா ஒரு முற்போக்குவாதி.

கருணா என்ற நபரை விட அவரது பெயர்தான் இவர்களுக்கு முக்கியம். ஏனென்றால் இவர்களுக்கென்று சில நோக்கங்கள் இருக்கின்றன. அதாவது தமிழர்கள் மத்தியில் எப்போதும் மோதல்களும் குழப்பங்களும் இருக்க வேண்டும். அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் ஒன்று படக்கூடாது. தமிழர்கள் தொடர்ந்தும் அடிமைகளாகவும் உரிமைகளுக்காக அண்டிப் பிழைக்கும் நிலையிலும் இருக்க வேண்டும். தமிழர்களுக்கு வீரமோ சூடு சுரணையோ சொந்தப் பலமோ இருக்கக் கூடாது. தமிழர்கள் ஊர், சாதி, மதம், பிரதேசம் என்ற அடிப்படைகளில் பிரிந்தே இருக்க வேண்டும்.

இதற்கெல்லாம் பெரும் தடையாக இருப்பது விடுதலைப்புலிகள். அவர்களை காட்டிக்கொடுக்கும், பிளவு படுத்தும், கொச்சைப்படுத்தும் வேலைகளைத் திறம்படச் செய்தால் இவர்கள் வேலையே செய்யாமல் பணம் சம்பாதிக்கலாம். பாரிஸ், இலண்டன் கனடா சென்னை கொழும்பு மலேசியா சிங்கப்பூர் என்று திரைகடல் ஓடி அசையாச் சொத்துக்களை வாங்கி வாடகைக்கு விடலாம். ஓசிப் பணத்தில் உலகெல்லாம் சுற்றுப் பயணம் செய்யலாம். தங்கள் சொத்துக்களை பார்வையிடலாம். மக்கள் யுத்தத்தின் மகத்தான போர் வீரர்கள் தாங்கள்தான் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டு சுயபுராணம் பாடலாம்... இப்படி இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபங்களை பட்டியல் போட்டுக் கொண்டே செல்லலாம்.

இந்த நோக்கங்களுக்காகத்தான் இவர்கள் கருணாவை வைத்து கருணாவின் பேரால் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வீடு பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அது இருக்கும் தெரு பாதுகாப்பாக இருக்க வேண்டும்.



அந்தத்தெரு பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அது இருக்கும் கிராமம் அல்லது நகரம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அந்தக் கிராமம் அல்லது நகரம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அது இருக்கும் பிரதேசம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அந்தப் பிரதேசம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அது இருக்கும் நாடு பாதுகாப்பாக இருக்கவேண்டும்.

நாடே பாதுகாப்பில்லாத நிலையில் இருந்தால் வீடு எப்படிப் பாதுகாப்பாக இருக்க முடியும்?

அது போல்தான் தனிமனித விடுதலை என்பதும். ஒரு தனி மனிதனுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமானால் அவன் சார்ந்த சமூகத்துக்கு விடுதலை கிடைக்க வேண்டும். சமூகத்துக்கு விடுதலை கிடைக்க வேண்டுமானால் அது சார்ந்த இனத்துக்கு விடுதலை கிடைக்க வேண்டும்.

இது சங்கிலித் தொடர்போல் ஒன்றை ஒன்று சார்ந்த விடயம்.

இன்று ஈழத் தமிழ் மக்களாகிய எங்கள் முன் இருக்கும் மாற்றே இல்லாத ஒரே ஒரு தெரிவு இன விடுதலைக்காக உழைப்பது என்பது தான்.

எங்கள் இனம் இப்போது எங்கள் தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் விடுதலையடையவில்லையென்றால் எங்களுக்கு என்று எதுவுமே இல்லாது போய்விடும்.

இங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் கூட இன்று நாங்கள் தமிழர்களாக இருக்கிறோம் எங்கள் பிள்ளைகள் தமிழ் பேசுகின்றார்கள். ஆனால் நாளை எங்கள் பேரப்பிள்ளைகள் தமிழர்களாக இருப்பார்களா? எங்கள் நாட்டுக்கு விடுதலை கிடைக்க வில்லை என்றால் எங்கள் பாட்டன் பூட்டன் முப்பாட்டன் பிறந்த மண் என்று சொல்ல ஒரு துண்டு நிலம் எங்கள் நாட்டில் அவர்களுக்கு இருக்குமா?

இது ஒரு முக்கியமான கேள்வி.

இருக்கும் என்று நாங்கள் அடித்துச் சொல்ல வேண்டுமானால் நாங்கள் தேசியத்தை சிதைக்க முயலும் இந்த விசக் கிருமிகளை (இந்த விசக் கிருமிகளுக்கு குழப்பீசீயா என்று ஒரு பேர் வைக்கலாம்) இனங்காண வேண்டும்.

தேசத்தை நோக்கி தேசிய செயல் பாட்டை நோக்கி அணி திரள்வதன் மூலம் நாளையை நமதாக்குவோம்.

- திறலோன்

ஆயுதத்தின் விலை...



துப்பாக்கிக் குழலில் இருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்று சொன்னவர் சீனப் பெரும் தலைவர் மாவோ சே துங்.

அன்று இந்தத் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் எங்கள் கைகளில் இல்லாததால்தான், நாங்கள் ஐரோப்பிய காலனிய ஆக்கிரமிப்பாளர்களிடம் எமது ஆட்சியுரிமையை இழந்தோம்.

முல்லைத்தீவிலே தனது வாள் வீரத்தால் ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களை வெட்டிச்சரித்த பண்டார வன்னியனிடம் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் இருந்திருந்தால் வரலாறே மாறிப் போயிருக்கும்.

ஆயுதம் இல்லாததால் அன்று நாங்கள் ஐரோப்பியர்களுக்கு மட்டுமல்ல, சிங்களவர்களுக்கும் அடிமையாகிப் போனோம்.

இன்று நாங்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்கிறோம் என்றால், இன்று எங்களை ஒரு பொருட்டாக மதித்து பேச்சுவார்த்தை நடத்த எல்லோரும் தேடிவருகின்றார்கள் என்றால், விடுதலைப் புலிகளின் ஆயுத பலமும் இராணுவ மேலாண்மையும்தான் அதற்குக் காரணமாகும்.

இந்த ஆயுத பலத்தை நாங்கள் பெறுவதற்கு ஆரம்ப காலத்தில் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த ஆயுத பலத்தைப் பெறுவதற்கும் பெற்ற ஆயுதங்களை காப்பாற்றுவதற்குமாக எத்தனையோ மாவீரர்கள் விதையாகிப் போயிருக்கிறார்கள்.

ஆனால் அண்மையில் கிழக்கு மக்களின் பாதுகாவலன் தானே என்று தனக்குத் தானே மகுடம் சூட்டிக் கொண்ட கருணா, கிழக்கைவிட்டுத் தப்பியோடிய போது பல ஆயுதங்களைத் தீயில் எரித்து நாசமாக்கியுள்ளார். ஏராளமான ஆயுதங்களை சிறீலங்காப் படை முகாங்களில் கொண்டு சென்று ஒப்படைக்குப்படி தன்னுடன் இருந்த போராளிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

ஆயுதமே தமிழினத்தின் பலம் என்பதை உணர்ந்த, கொக்கட்டிச் சோலை, மயிலந்தனை உட்பட்ட பல இடங்களில் தமது உடன் பிறப்புக்களைக் கொன்று குவித்த சிங்கள இராணுவத்திடம் அந்த ஆயுதங்கள் போய்ச் சேரக் கூடாது என்பதை உணர்ந்த அந்தப் போராளிகள் அவ்வாறு செய்யாததும் பழைய செய்தி.

கருணாவினால் கொண்டு செல்லப்பட்ட ஆயுதங்கள் கொழும்பில் பாதாள உலகக் குழுவினருக்கு விற்கப்படுவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

ஆனால் பலருக்குத் தெரியாத ஒரு செய்தி இருக்கிறது.

அது, கருணா பங்குபற்றிய ஜெய்சிக்குறு முறியடிப்புச் சமர்.....

மாங்குளத்துக்கும் ஓமந்தைக்கும் இடையிலே ஸ்ரீலங்கா படைகளை எதிர்த்து மிக அண்மித்த பகுதியில் நின்று மிகவும் ஆக்ரோசமாக ஆண் போராளிகளும் பெண் போராளிகளும் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்...

உணவுக்கும் தண்ணீருக்கும் கூடத் தட்டுப்பாடு...

வழங்கலைச் செய்ய முடியாத அளவுக்கு எதிரியின் தாக்குதல் உக்கிரமாக இருக்கிறது... கிட்டு பீரங்கிப் படையணியைச் சேர்ந்த பெண் போராளிகள்... பின்புலத்திலே நின்று முன்னரங்கப் போராளிகளுக்கு உதவியாக மோட்டார் சூட்டாதரவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்...

எதிரியின் எறிகணைகள் நெருப்பு மழையாகப் பொழிந்து கொண்டிருக்கின்றன...

இவர்களும் தமது நிலைகளை மாற்றி மாற்றி எதிர்த்தாக்குதலைத் தீவிரப்படுத்துகின்றார்கள்...

அப்போது எதிரியின் ஒரு எறிகணை இந்தப் பெண் போராளிகளது மோட்டார் நிலையைக் குறி வைத்து மின்னல் வேகத்தில் வருகிறது... நிச்சயமாக அந்த எறிகணை அங்கே விழுந்து வெடித்தால் அந்த மோட்டர் வெடித்து சின்னாபின்னமாகிப் போகும்...

பார்க்கிறாள் ஒரு பெண் போராளி... அந்த மோட்டாரை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகிறாள்...

கண்ணிமைக்கும் நேரம் தான்....



பாய்ந்து கவசம் போல் அந்த மோட்டாரை கட்டி அணைத்துக் கொள்கிறாள்...

எறிகணை விழுந்து வெடிக்கிறது...

அந்தப் பெண் போராளியின் தலை சிதறுகிறது...

அவளது தசைத் துண்டுகள் அந்தப் பெண் போராளிகள் குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீர்ப் பார்த்திரத்துக்குள் விழுகின்றன....

மோட்டார் காப்பாற்றப்படுகிறது...

நினைத்தே பார்க்க முடியாத அந்தப் பெண் போராளியின் தியாகம் எங்கே?....

ஆயுதங்களைச் சிங்களப் படைகளிடம் ஒப்படைக்கச் சொன்ன கருணாவின் துரோகம் எங்கே?.....

மாம்பழம் பழுத்தால் கிளிக்காகும் வேம்பு பழுத்தால் காக்கைக்குத்தான்

கதிர்காமர் அறிவது!

உங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கின்றது. அதாவது உங்களுக்குச் சனாதிபதி சந்திரிகா - பிரதமர் பதவியைத் தராததைத்தான் சொல்கிறேன். கடந்த தடவை உங்களுக்குக் கடிதம் எழுதியபோது உங்களுக்கு இந்தக் கேவலமான நிலை வரும் என்று எச்சரித்திருந்தேன். சில வேளைகளில் நான் தமிழில் எழுதும் பழமொழிகள் உங்களுக்குப் புரியாமல் போனதோ என்னவோ.

இனிமேல் விடுதலைப் புலிகளுடன் வெளிநாடுகளில் வைத்துப் பேச்சுக்கள் நடத்தப்பட மாட்டாது என்று வேறு கூறியுள்ளீர்கள். உண்மைதான் இனிமேல் எந்த முகத்தோடை நீங்கள் வெளிநாடுகளுக்குப் போவீர்கள். அதுவும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பரப்புரை செய்த நாடுகளில் வைத்து - புலிகளைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று சொல்லிப் பேச்சுக்களை நடத்துறது என்றால் கொஞ்சம் கஸ்டமாகத்தான் இருக்கும்.

A man who is his own lawyer is a fool for his client.

அதாவது எவன் தனக்குத்தானே வக்கீலாக வாதாடுகிறானோ, அந்த வக்கீலின் வாடிக்கையாளனுக்கு அவன் ஒரு முட்டாள். உடல் நலம் சரியில்லையென்றால் வைத்தியரிடம் போ. நானே மருத்துவம் பார்ப்பேன் என்றால் உனக்கு நீயே எமன். உங்களை நம்பியிருக்கும் அரசுக்கும், பேரினவாதிகளுக்கும் இது பொருந்தும்.

What Manchester says today – the rest of England says tomorrow.

மான்செஸ்ரர் நகரம் இன்று என்ன சொல்கின்றதோ அதை நாளை இங்கிலாந்து நாடே சொல்லும் என்பார்கள். புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அமெரிக்காவும் இங்கிலாந்தும் சொன்னால் உலகமே அவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லும் ஒதுக்கும் என்று நினைத்தீர்கள். ஆனால் இன்று நோர்வேயும், ஜேர்மனியும், ஜப்பானும், தாய்லாந்தும், தென் அமெரிக்காவும், என்ன சொல்கின்றன என்று உங்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் அந்த நாடுகளுக்குப் போய் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த உங்களுக்கு வெட்கமாக இருக்கின்றது.

A rose called by any other name would smell as sweet.

ரோஜாப்பூவை என்ன பெயரில் அழைத்தாலும் அது மணம் பரப்புவது மாறாது. இதைத் தமிழில் இன்னொரு வகையில் - சங்கு சுட்டாலும் வெண்மைதரும் என்பார்கள். நீங்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அழைத்தாலும் அவர்கள் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதில் எதுவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இது உங்களுக்கும் உங்களைப் பிரதமர் பதவியில் இருத்த விரும்பிய ஜே.வி.பிக்கும் பொருந்தும்.

Who he laughs at scars never felt a wound.

விழுந்து கூட அனுபவம் இல்லாதவன் விழுப்புண் பெற்றவனைப் பார்த்து வேடிக்கையாகச் சிரிப்பானாம். ஜே.வி.பியின் கதையும் இப்படித்தான். புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் அவர்கள். ஜே.வி.பியும் முன்னர் ஆயுதம் தூக்கியவர்கள்தானே, புலிகளும் ஆயுதம் தூக்கியவர்கள்தானே. புலிகளுடன் பேசலாம் என்றால் ஏன் ஜே.வி.பியுடன் பேசக்கூடாது என்று கூறியுள்ளீர்கள். கசாப்புக் கடைக்காரனுக்கும், பட்டாளத்தானுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஜே.வி.பியை உள்ளே இழுத்ததில் உங்களுக்குப் பெரும் பங்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

Give a piper a penny, and two penny to leave off.

பொழுது போகவில்லை என்று வீதியில் போகும் பிடில்காரனைப் பத்து ரூபா கொடுத்து வாசிக்கச் சொன்னால் அவனைப் போகச் சொல்ல இருபது ரூபா கொடுக்க வேண்டிவரும். இதேபோல்தான் ஜே.வி.பிக்கும் நீங்கள் கொடுக்க வேண்டிய விலை இன்னும் அதிகமாகவிருக்கும்.

If you buy the cow take the tail into the bargain.

மாட்டை விலை பேசும்போது வாலையும் சேர்த்துப் பேசு. ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்யும்போது அவர்களின் இனவாதக் கொள்கைகளையும் சேர்த்துத்தான் நீங்கள் ஒப்பந்தம் செய்தீர்கள் என்பதை மறவாதீர்கள். கடந்த தடவை ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பின்னர் அவர்களைக் கழற்றிவிட்டது போல் இம்முறை கழற்றிவிடலாம் என்று மனப்பால் குடியாதீர்கள்.

lightning never strikes the same place twice.

இடி ஒரே இடத்தில் இரண்டு தடவைகள் விழுவதில்லை. நீங்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று நாடு நாடாகச் சென்று பிரசாரம் செய்தபோது அதனை 90 வீதமான சிங்களவர்கள் வரவேற்றனர். உங்களுக்கு ஒரு பௌத்த பிக்குகூட சிறுநீரகத்தைத் தானம் செய்தார். ஆனால் நீங்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவதை அதே 90 வீத சிங்களவர்கள் வெறுத்தனர், எதிர்த்தனர் என்பதை மறந்துவிடாதீர்கள். மாம்பழம் பழுத்தால் கிளிக்கு ஆகும். வேம்பு பழுத்தால் காக்கைக்குத்தான் ஆகும் என்று சொல்வார்கள். நீங்கள் என்னதான் பதவிகளைப் பெற்றாலும் அதனால் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை. அது மட்டுமல்ல உங்களுக்கும்தான். நீங்கள் என்னதான் சிங்களவர்களுக்கு உதவிகள் செய்தாலும், அவர்கள் உங்களை ஒரு கைத்தடியாக அல்லது கோடரிக் காம்பாக - அதாவது தமிழர் என்ற மரத்தை வெட்டும் கோடரியின் பிடியாக அந்த மரத்தின் கிளையிலிருந்து உருவான கோடரிப் பிடியாக மட்டுமே பாவிப்பார்கள் என்பது இதிலிருந்து வெளிச்சமாகின்றது.

நாய் பாருங்கோ எப்பவும் ஏதோ பெரிசாய் வெட்டிப் புடுங்குறமாதிரி ஓடிக்கொண்டே இருக்கும். ஓர் இடத்திலை நிற்காது. அந்த மாதிரி ஓடித்திரிஞ்சியள் நாடு நாடாய். இப்ப ஒரு இடத்திலை அம்மிக்கல் மாதிரி இருக்கிறியள் அதாலை உங்களுக்கு இதை ஆறுதலாய்ச் சொல்ல முடிந்தது. கடைசியாய் ஒரு விடயம்.:-

சந்திரிகா ஆத்தா, ஆடு வளர்த்தா கோழி வளர்த்தா ஆனால் நாய் மட்டும் வளர்க்கவில்லை. ஏன் என்று உங்களுக்கு தெரியும். ஆனாலும் பாருங்கோ - நாய் தன்னுடைய நாக்கைக் கடித்துவிட்டு, நாக்கிலிருந்து வரும் இரத்தத்தை ருசி பாத்துக்கொண்டு - தனக்குப் போட்ட எலும்புத்துண்டிலை இருந்துதான் இரத்தம் வருகுது என்று நினைத்துக்கொண்டு, அந்த இரத்தத்தைச் சுவைத்துக் கொண்டேயிருக்கும். பேய் நாய்.

கடைசியாய் உங்களிடம் ஒரு விடயம். 'அண்ணன்தான் கூடப்பிறந்தான். அண்ணி கூடப்பிறந்தாளா?' என்றொரு எச்சரிக்கைப் பழமொழி தமிழிலை இருக்கு. கவனம் உங்களை இண்டைக்குத் தமிழன் என்று சொல்லிப் பிரதமர் பதவி தர மறுத்த சிங்களவர் துரோகியென்று சொல்லக் கனநாள் செல்லாது. ஏனென்றால் அயல் வீட்டான் பிள்ளை ஆபத்துக்குதவான் என்று சிங்களவனுக்குத் தெரியும். உங்களுக்கு தெரியாதுபோல..? அந்த நேரத்திலை உங்களைப் பெத்தெடுத்த தமிழனும், தத்தெடுத்த சிங்களவனும் கைவிட - எள்ளோடு சேர்ந்த எலிப்புழுக்கை மாதிரி தூக்கியெறியப்படுவீர்கள்.

The evil that men do lives after them.

நீங்கள் செய்யும் பாவங்கள் துரோகங்கள் நீங்கள் மரணித்த பின்னரும் உயிர்வாழும் என்பது ஆங்கிலப் பழமொழி. இது உண்மையோ பொய்யோ - ஒன்று மட்டும் உண்மை. தமிழரின் சரித்திரத்தில் எட்டப்பனும், காக்கை வன்னியனும் இன்னும் வாழ்கின்றனர்.

புரிந்தால் சரி.

இப்படிக்கு
வாசகன்

மட்டு. நகரில் இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு - தாண்டவன்வெளி திருமலை வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணியளவில் பேருந்தில் பயணம் செய்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வசந்த கொலம் பகே என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கதுறுவெலவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற பேருந்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தப்பேருந்தில் பயணம் செய்த இளைஞனே இந்தத் துப்பாக்கிப் சூட்டை நிகழ்த்தியதாக மட்டக்களப்புகாவல் துறையினர் தெரிவித்துள்ளனர்

மிதிவெடியில் சிக்கி இளைஞர் காயம்

கோண்டாவில் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவக் காவலரண் ஒன்றிலிருந்து முட்கம்பிச் சுருளை எடுக்க முயன்ற இளைஞரொருவர் மிதி வெடியில் சிக்கி கண்ணில் படுகாயமடைந்துள்ளார். கடந்த 4ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் செல்வபுரத்தைச் சேர்ந்த அன்னலிங்கம் சஞ்சீவன் என்ற 19 வயது இளைஞனே படுகாயமடைந்தவராவார். காவலரண் பகுதிக்குச் சென்று முட்கம்பியை எடுப்பதற்கு குனிந்த போது மிதிவெடி வெடித்ததால் இவரது வலது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டது.

ஹாட்லி கல்லூரி கணினி கூடத் தீ விபத்தில் 40 இலட்சம் ரூபாவுக்கு மேல் சொத்தழிவு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கணினிக் கூடத்தில் ஏற் பட்ட தீ விபத்தினால் 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பொருட் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இத்தீவிபத்து இடம்பெற்ற வேளை கணினி கூடத்தில் எவரும் இல்லாததால் உடனடியாக அவதானித்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை எனவும், இது மின்சார ஒழுக்கினால் ஏற்பட்டிரு க்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தின் போது கணினி கூடத்தில் 28 கணினிகளும், 3 குளிரூட்டி சாதனங்களும் மற்றும் வேறு பொருட்களும் இருந்ததாகவும் இவை அனைத்தும் கல்வி அமைச்சினால் வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களினாலும் வழங்கப்பட்ட நிதியிலேயே பெறப்பட்டவையென்றும் தெரிவிக்கப்படுகின்றது

கதிர்காமர் அமெரிக்கா பயணம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திங்கட்கிழமை அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல், பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசா ரைஸ் உட்பட பல உயரதிகாரிகளையும் கதிர்காமர் சந்திக்கவுள்ளார். இந்த பயணத்தின் பிரதான நோக்கம் சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதேயாகும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. இது தவிர, வர்த்தகம், முதலீடு, தேசிய பாதுகாப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதுடன் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அமெரிக்கத் தலைவர்களுக்கு கதிர்காமர் விரிவாக விளக்கமளிப்பார் என்றும் தெரியவருகிறது. அதேநேரம், சிறீலங்காவுக்கு அமெரிக்காவினால் அடுத்தவாரம் வழங்கப் படவுள்ள கரையோரப் பாதுகாப்புக் கப்பலின் செயற்பாடுகளையும் கதிர்காமர் பார்வையிடவுள்ளார்.

இலங்கைக்கு அமெரிக்கா நிதியுதவி

பொருளாதார, ஜனநாயக மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவின் புதிய நிதியுதவியை பெற்றுக் கொள்ளும் வறிய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மிலேனிய சவால்களுக்கான நிதியத்திலிருந்து வழங்கப்படும் இந்நிதியுதவியைப் பெறுவதற்கென ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்க மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த 16 நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மனித உரிமைகள், ஊழல் ஒழிப்பு, திறந்த சந்தை பொருளாதாரம், வாஷிங்டனால் விரும்பப்படும் கொள்கைகளை உருவாக்குதல் போன்றவற்றை மேம்படுத்தும் வறிய நாடுகள் என்ற அடிப்படையிலேயே இந்நாடுகளின் தெரிவு இடம்பெற்றுள்ளது. இலங்கையுடன் பெனின் கேப்வெர்ட்டே, கானா, லெசோதோ, மடகஸ்கார், மாலி, மொஸாம்பிக், செனகல், ஆர்மேனியா, ஜோர்ஜியா, மொங்கோலியா, வனுவாட்டு, பொலீவியா, ஹொன்டுரஸ் மற்றும் நிக்கார்குவா ஆகிய நாடுகள் இந்நிதியுதவியைப் பெறத் தகுதி பெற்றுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மட்டக்களப்பில் அதிரடிப்படை முகாம் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு நகரிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை இரவு கைக்குண்டு வீசப்பட்டதில் காவல்துறை அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார். கோவிந்தன் வீதிச் சந்தியில் உள்ள பி-7 காவல் நிலையத்திலேயே மாலை 7.30 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பிக குமார என்பவர் முகாமின் பின்புறமாகக் குளித்துக் கொண்டிருந்த போதே கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. கைக்குண்டு வீச்சில் சிறு காயங்களுக்கு இலக்கான இவர் உடனடியாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். கைக்குண்டு வீச்சைத் தொடர்ந்து பதிலுக்கு விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

சுகவீனம் காரணமாக போராளி சாவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி வீரவேங்கை தேன்மலர் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் பிரதீபா சுகவீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவடைந்துள்ளார். கண்டாவளை புளியம்பொக்கனையை நிரந்தர வதிவிடமாகவும், கோவில் பூனைத்தொடுவாய் சுண்டிக்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டவரென தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

கருத்துக் களம்

பல்லை இழந்தபின் பேச்சு என்ன பேச்சு..?

போர் என்றால் போர் - சமாதானம் என்றால் சமாதானம், சமாதானத்துக்கான போர் என்று தமிழ் மக்கள் மீது போரைக் கட்டவிழ்த்துவிட்டு விட்ட சிறீலங்கா அரசு, பேச வந்தென்றால் அது விடுதலைப் புலிகளின் பலம் தான். அடியைப்போல் அண்ணன் - தும்பி உதவ மாட்டார்கள் என்பது போல், சிங்கள அரசுக்குக் கொடுக்கப்பட்ட பல மான இராணுவ - அரசியல் அடிகள் தான் சிறீலங்கா அரசைப் பேச்சு மேசைக்கு இழுத்து வந்தது. அந்தப் பலம் விடுதலைப் புலிகளின் கைகளில் இருக்கும் ஆயுதங்களே என்பது மறுப்பதற்கில்லை.

அந்த ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, சிறீலங்கா அரசுடன் பேச்சுக்களில் கலந்துகொள்ள மாட்டார்கள் என்பதை விடுதலைப் புலிகள் அழுத்தம் திருத்தமாக பல தடவைகள் சொல்லிவிட்டார்கள். ஆனால், ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுதான் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவேண்டும் என்று விடுதலைப் புலிகளை வலியுறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்று மீண்டும் பழைய பல்லவியைக் கண்டி அஸ்கிரிய பீட மகா நாயக்க வண. உடுகம சிறீபுத்தரக் கித்ததேரர் பாடியிருக்கிறார்.

தம்மைச் சந்தித்துப் பேசிய கத்தோலிக்கத் திருச் சபையைச் சேர்ந்த ஆயர்கள் முன்னிலையில் அவர் இதனைக் கூறியிருக்கின்றார். கொழும்பு அதிமேற்றிராணியார் தலைமையில் யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், அநுராதபுரம், பதுளை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி ஆகிய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் கடந்த 6ம் திகதி கண்டிக்குச் சென்று மகாநாயக்கர்களைச் சந்தித்து உரையாடினர். இதன்போதே ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற ஆவலைத் தேரர் வெளிப்படுத்தியிருக்கிறார். இவற்றுக்கும் மேலே போய், புத்தமே தமது வாழ்வு என்ற நிலைப்பாட்டில் இருந்தும் புலிகள் விடுபட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். விடுதலைப் புலிகளால்தான் இலங்கையில் சமாதானம் தொடர்ந்து நீடிக்கிறது என்பதைத் தேரர் மறந்துவிட்டார் போலும்.

பாம்புக்குப் பல்லைப் பிடிங்கிப்போட்டு, பலம் பார்க்கலாம் என்று தேரர் நினைக்கின்றாரோ..?

ஒரு கோடி ரூபாவும் ஹெல உறுமயவும்

சிறீலங்காவில் சபாநாயகரைத் தேர்வு செய்வதிற் கூட பெரும் சிக்கல்கள் எழுந்ததை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். சபாநாயகரைத் தேர்வு செய்வதில் எழுந்த போட்டியும், அதற்காக மூன்று தடவைகள் வாக்களிப்பு இடம் பெற்ற சம்பவமும் சிறீலங்கா வரலாற்றிலேயே இதுதான் முதற் தடவை எனக் கூறப்படுகிறது.

நூலிழையில், அதாவது ஒரு வாக்கு வித்தியாசத்தில், எப்படியோ ஐ.தே.க. வெற்றியைத் தேடிக்கொண்டது. ஆனால், நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவின்பொழுது அரசாங்கம் தமக்கு ஆதரவளிக்குமாறு கோரி ஒரு கோடி ரூபா இலஞ்சம் வழங்குவதற்கு முன்வந்ததாகவும், அதை தாங்கள் முற்றாக நிராகரித்து விட்டோதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிசுமலக்கல தேரர் இப்போது தெரிவித்துள்ளார். வெசாக் தினத்தில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சபாநாயகர் தெரிவின் போது இரு பௌத்த பிக்குமார்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினால் ஒரு கோடி ரூபா தருவதாக எம்மிடம் கூறினார்கள். அவர்களின் ஒரு கோடி ரூபாவினை விட பொதுமக்கள் எமக்கு வழங்கும் ஒரு ரூபா மிகப் பெரிதென நாங்கள் மதிக்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாக்கெடுப்பில் ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் கலந்துகொள்ளவில்லை

எனினும் இரு பிக்குகள் சபாநாயகர் தேர்வில் வாக்களித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை !

சிறீலங்கா அரசுக்கு இன்று ஒரே தேர்வாக உள்ளது விடுதலைப் புலிகளுடன் பேசுவதுதான். அதனைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், இனவாதமும் வறட்டு கௌரவமும் தடுக்கின்றது. ரணில் அரசு, உலக நாடுகளில் சுரண்டுவதற்கு வசதியாக விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்று, புலிகள் மீதான தடைகளை நீக்கி சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கியது. இப்போது சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டு அரசுக்கும் அதே நிலைமைதான். உலக நாடுகளிடம் கையேந்துவது என்றால் புலிகளுடன் பேச வேண்டும். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக போர் செய்து... போர் செய்து இருந்ததையும் இழந்து, கடனுக்கு வாங்கியவையையும் இழந்து நாட்டையும் சுடுகாடாக்கியிருக்கிறார்கள். இப்போது உலக நாடுகள் தான் தஞ்சம். அதனாலை பேசியாக வேண்டும். அதுவும் புலிகளுடன்தான் பேசியாக வேண்டும். பேச்சுக்களில் ஒரு பிரதான தரப்பாகப் புலிகளை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் சந்திரிகா கூட்டணிக்கு. ஆனால், முரண்டுபிடிக்கும் ஜே.வி.பிக்கு இதில் விருப்பமில்லையாம். விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளத் திட்டவட்டமாக மறுக்கிறது. என்றாலும் தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை என்கிறது ஜே.வி.பி. முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப் புலிகள் மிகவும் பலமடைந்தவர்களாக இருப்பதனால், சுதந்திர முன்னணி அரசாங்கம் முன்னெடுக்க உத்தேசிக்கும் சமாதான முயற்சிகளில் பிரதான தரப்பாக அவர்களையே ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகக் கூறுகிறது.

ஜே.வி.பி. பேச்சுவார்த்தையை ஏற்றுக்கொள்கின்றதா அல்லது மறுக்கின்றதா என வாசிக்கின்ற உங்களுக்கே குழப்பமாக இருக்கிறதா? அதைவிட அதிகமாக ஜே.வி.பி. குழம்பிப்போய் இருக்கின்றது. சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்போது, விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையிலேயே பேச வேண்டும் என்பதை நிராகரித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.வி.பி. வெளியிட்ட நீண்டதொரு அறிக்கையிலேயே இந்தக் குழப்பமோ குழப்பம்.

அதாவது கீழை விழுந்தாலும் மீசையிலை மண் ஒட்டாமல் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் புலிகள் அமைதியாக இருக்கின்றார்கள். சிறீலங்கா அரசும் அதன் படைகளும் பல தடவைகள் புலிகளைப் போருக்குள் இழுத்துவிடச் சீண்டிப் பார்த்தார்கள். ஆனால், புலிகள் விடாப்பிடியாகச் சமாதானத்தில் இருப்பதால், என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றார்கள். இவர்களுடைய நிலை இப்படியென்றால், இவர்களுக்கு ஆயுதங்களை விற்றுப் பிழைத்தவர்களின் நிலை எப்படியிருக்கும். ஊர் உலகத்திலை விலை போகாதா, துருப்பிடித்த ஆயுத தளவாடங்களைக் கொண்டுவந்து கொடுத்து, கோடிக்கணக்காகச் சம்பாதிச்ச தரகர் மாருக்கு இலங்கையிலை போர் ஓய்ந்தது பெரும் கவலை. அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும் என்ற கணக்காகச் சமாதானம் எப்ப சாகும் என்ற ஏக்கப் பெருமூச்சோடு காத்துக் கிடக்கின்றார்கள். ஆனாலும், சமாதானத்துக்கையும் சந்தடி சாக்கோட ஆயுதங்களைச் சிறீலங்கா தலையிலை கட்டிப்போட வேணும் என்று அங்கலாய்ப்பிலை திரிகின்றார்கள்.

இப்போது புதிதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது. அதுதான் சிறீலங்காப் படையினருக்குக் குறைந்த விலைக்கு இஸ்ரேலிய ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு, அந்நாட்டு முன்னாள் அமைச்சர் ஒருவர் முன்வந்துள்ளது குறித்த செய்தியாகும்.

கொனன் சிகேவ் என்ற இந்த முன்னாள் அமைச்சர், இஸ்ரேலியரிடமிருந்து அதன் ஆயுதங்களைச் சிறீலங்காப் படையினர் கொள்வனவு செய்யும் விலையிலும் குறைந்த விலையில் வழங்குவதற்கு முன்வந்துள்ளார். இஸ்ரேலின் முன்னாள் அமைச்சர் என்ற செல்வாக்கு தனக்கிருப்பதால், இஸ்ரேலில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் சிறீலங்காக் குழுவின் தலைவராகத் தன்னை நியமித்தால் தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் குறைந்த விலையில் ஆயுதங்களைப் பெற்றுத்தர முடியுமென்றும் இவர் கூறியுள்ளார். அத்துடன், புலிகளின் தலைவர்களைப் பிடிப்பதற்கும் இஸ்ரேலின் உதவியைப் பெற்றுத் தருவதாகவும் இவர் கூறியுள்ளார். கொள்வனவு விலையிலும், குறைந்த விலைக்குப் பெற்றுக்கொடுத்து, சிறீலங்கா இராணுவத்தினருக்கு இந்த உதவியை இவர் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

சோழியன் குடுமி சும்மா ஆடாதே..?

புதிய வீதி எழுப்பும் படையினர் ?

சிறீலங்கா இராணுவம் யாழ். குடாவை ஆக்கிரமித்ததன் பின்னர், தமிழர்களின் எத்தனையோ வீதிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் பாவனைக்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. தற்போது மறவன்புலவிலிருந்து நுணாவில் ஊடாகச் சாவகச்சேரி செல்லும் கொல்லங்கரை வீதியை மக்கள் பாவனைக்கு அனுமதிக்காத படையினர், அதற்கு அருகாமையில் புதிதாக மண் அணைகளால் வீதி ஒன்றை அமைத்து வருகின்றனர்.

1995ம் ஆண்டு காலப்பகுதியில் தென்மராட்சியின் பல பகுதிகளையும் ஆக்கிரமித்த சிறீலங்காப் படையினர், இந்த வீதியையும் மூடி, இந்த வீதிப்பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர். இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த வீதியைத் திறக்குமாறு படைத்தரப்பிடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தன. ஆனால், எல்லாமே செவிடன் காதில் ஊதும் கதையாக இருக்கின்றது. இந்நிலையில், சமாதானகாலத்தில் படையினர் எதற்காக ஒரு பாதுகாப்பு வீதியை அமைத்து வருகின்றனர் என்ற கேள்வியும் அச்சமும் தமிழர்களிடம் எழுந்துள்ளது.

ஆனால், அலை எழுந்தால் அணைகள் தான் என்ன செய்துவிட முடியும்..?

- நியூட்டன்

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்
தரமான கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச்சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE
ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.
Pub-Fr

துயர் பகிர்தல்



மலர்வு: 08-05-1944

உதிர்வு: 06-05-2004

அமரர் சோமநாதன் தினகரன்

இலங்கை யாழ். சிவன் கோவில் வடக்கு வீதி (வண்ணார்பண்ணை)யைச் சேர்ந்த சோமநாதன் தினகரன் (06.05.2004) வியாழன் இரவு இறைவனடி சேர்ந்தார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், குமுதினி, ரஜனி, துஷ்கரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; முருகதாஸ், ராஜ்குமாரின் அன்பு மாமனாரும், பூமலர், திலகவதி, ரவீந்திரன், ரூபாவதி, கருணாவதி, கலாவதி, நந்தாவதி, சுரேந்திரன், (சிறி) தயாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், டினேஸ், நிவேதாவின் ஆசைப் பேரனும், இராசரட்ணம், அமரசிங்கம், கிருஸ்ணபாலா, குலநாயகம், பூலோகசிங்கம், பஞ்சலிங்கம், சத்தியநாதன், சண்முகநாதன், சற்குணநாதன், விஸ்வலிங்கம், பொன்னம்பலம், புலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நகுலேஸ்வரி, இராஜஸ்ரீ, றஜினா, மங்கயர்க்கரசி, பரமேஸ்வரி, சர்வேஸ்வரி, பாமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் திங்கட்கிழமை (10.05.2004) காலை 10 மணிக்கு இடம்பெற்று, தகனக் கிரியைகள் செம்மணி மயானத்தில் நடை பெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் துயரச்செய்தி அறிந்து எம்முடன் தொலைபேசி மூலமாகவும், நேரிலும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறிய நண்பர்கள், உறவினர் யாவ ருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

திரு. சத்தியநாதன் (பிரான்ஸ்) - 01 39 93 76 41
திரு. பஞ்சலிங்கம்(ஜேர்மனி) - 03 08 15 34 26
திரு. முருகதாஸ் (பிரான்ஸ்) - 01 47 90 44 72, 06 64 89 65 18
திரு. ராஜ்குமார் (ஜேர்மனி) - 03 07 93 86 42

"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" - **தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்**


தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.

சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.



தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம். இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

தாயக மண்மீட்புப் போரில்
எம்மோடு தோளோடு தோள் நின்று
கைகொடுத்த தமிழ் உறவுகளே!
கருத்துப்போரிலும் வெற்றியை
எமதாக்க கைகொடுத்திடுவீர்!!!

இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

முதலாவது பரிசு: 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

இரண்டாவது பரிசு: 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா.
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

மூன்றாவது பரிசு: 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா
(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்

தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் இலங்கைத் தமிழர் பட்டினியின் விளிம்பில்

தாயகம் அழைத்து வர ஏற்பாடு செய்யுமாறு உருக்கமான வேண்டுகோள்

தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் வறுமை காரணமாக பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் அனைவரையும் தாயகத்திற்கு அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அதிகாரிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் படகுகள் மூலம் தாயகம் திரும்பியுள்ள அகதிகள் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து படகுகள் மூலம் தலைமன்னார் வந்த 34 அகதிகளை சனிக்கிழமை அதிகாலை கைது செய்த தலைமன்னார் கடற்படையினர், பின்னர் காவல்துறையினரிடம் கையளித்தனர். இவர்கள் அனைவரும் ஞாயிற்றுக்கிழமை பகல் மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா முன்நிறுத்தப்பட்ட போது அவர்களை விடுதலை செய்த நீதிவான் அகதிகளை அவர்களின் சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பிவைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் மன்னார் நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த அகதிகள் அங்கிருந்த பத்திரிகையாளர்களிடம் கடந்த 14 வருடங்களாக தமிழ்நாட்டில் தாங்கள் எதிர்நோக்கிய அவலங்கள் குறித்து கருத்துத் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் முருங்கன், பேசாலை, உயிலங்குளம் மற்றும் நானாட்டான் பகுதிகளைச் சேர்ந்த தாம் கடந்த 1990 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் நடந்த கடும் மோதல் காரணமாக படகுகள் மூலம் இராமேஸ்வரம், தனுஷ்கோடி மண்டபம் ஆகிய பகுதிகளுக்கு சென்றடைந்தோம். பின்னர், திருச்சி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டோம்.

குறித்த முகாம்களில் கடும் இடப்பற்றாக்குறையுடன், அடிப்படை வசதிகளும் மிகக் குறைவு. அங்கு நிலவிய மோசமான சுகாதார சீர்கேட்டினால், அம்மை, வயிற்றுளைவு ஆகிய பயங்கர வியாதிகளுக்கு முழுக்குடும்பமும் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

அகதிகளுக்கு முகாம்களில் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டு மனித பாவனைக்கு ஊறு விளைவிப்பதாக இருந்தன. வெளியில் உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலையில் இருந்தாலும், அதனை வாங்குவதற்கு எம்மிடம் பணமிருக்கவில்லை. ஆரம்பத்தில் நாம் இலங்கையில் இருந்து எம்முடன் எடுத்துச் சென்ற ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை விற்பனை செய்தே வாழ்க்கையை மேற்கொண்டோம். எனினும், காலப்போக்கில் விற்பதற்கு பொருட்கள் எதுவும் இல்லாத நிலையில் கூலி வேலைகளுக்கு செல்லவேண்டியேற்பட்டது. அங்கும் தொழில் அற்ற நிலையிலுள்ள ஆயிரக்கணக்கான உள்ளூர் வாசிகளுடன் குறித்த கூலித்தொழில்களுக்கு பெரும் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கை அகதிகளின் வறுமை நிலையை சாதகமாகப் பயன்படுத்தி அவர்களை மிகவும் குறைந்த கூலிக்கே வேலைக்கு அமர்த்துகின்றனர். அதுவும் மிகவும் கடிமான கட்டிட வேலைகளுக்கும், கல்லுடைக்கும் வேலைகளுக்குமே இலங்கை அகதிகள் பயன்படுத்தப்படுகின்றனர். கடும் வரட்சிக் காலங்களில் முகாம்களில் வசிக்கும் அகதிகள் கூலி வேலைகள் கூட கிடைக்காமல் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர். முகாம்களில் பல்வேறு கஷ்டங்களுடன் வசிக்கும் அனைத்து அகதிகளும் எப்படியாவது தாயகம் திரும்பவேண்டும் எனும் நோக்கத்திலேயே உள்ளனர். எனினும், படகு மூலம் தலைமன்னார் சென்றடைவதற்கு இந்திய பணம் ரூபா 3500ஐ ஒருவருக்கு படகுக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

சாதாரணமாக உணவுக்குக் கூட கஷ்டப்படும் வறிய குடும்பங்கள் இவ்வளவு பெரும் பணத் தொகையைச் செலுத்த வழியின்றியுள்ளன. அகதி முகாம்களில் வசித்த பொழுது நாம் எதிர்நோக்கிய துன்பங்களை கெட்ட கனவாகவே, பெரிய தவறாகவே நாம் கருதுகின்றோம். இதே மனோநிலையில் தான் அங்கு வசிக்கும் அனைத்து இலங்கை அகதிகளும் உள்ளதாக விபரித்த தாயகம் திரும்பிய அகதிகள், இலங்கை அதிகாரிகள் தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகளை கப்பல் மூலம் தாயகம் அழைத்து வருவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் விமான ஓடுபாதை

கிளிநொச்சி பகுதியில் தற்காலிக விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளதை விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டுள்ளதாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் 29ம் திகதி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் துருண்ட் பியூறுஹொவ்ட கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசியபோது, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தின் செய்தியொன்றை அவரிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திற்கு கிழக்கே விடுதலைப் புலிகள், தற்காலிக விமான ஓடுபாதையை அமைத்துள்ளது தங்களுக்கு தெரிய வந்துள்ளதாக அந்தச் செய்தியில் சிறில் ஹேரத் குறிப்பிட்டிருந்தார். சிறீலங்கா அரசின் இந்தச் செய்தி குறித்து கருத்துதத் தெரிவித்த தமிழ்ச் செல்வன் இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட மற்றொரு விடயம் குறித்தும் ஆராய வேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்

தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் ஆட்களற்ற உளவு விமானங்கள் (யு.ஏ.வி.) பறப்பதையும் சுட்டிக் காட்டிய அவர் இது போர் நிறுத்த மீறல் எனவும் இதனால் ஏற்படும் விளைவை எதிர்வு கூற முடியாதெனவும் தெரிவித்ததார். இதேவேளை, கண்காணிப்புக் குழுவினரின் இந்தப் பயணத்தின் போது, அவர்கள் பயணம் செய்த உலங்குவானூர்தியின் விமானி இரணைமடுக் குளத்திற்கு கிழக்கே தற்காலிக விமான இறங்கு பாதை இருப்பதை கண்காணிப்புக் குழுவினருக்கு காண்பித்துள்ளார்.

எவ்வித காரணமுமில்லாது அந்த விமானி தங்களுக்கு அந்த விமான இறங்கு பாதையை காண்பித்தது குறித்து தாங்கள் கவனத்திலெடுத்துள்ளதாக கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிக்கு உலங்குவானூர்தி பறப்பது தொடர்பாக உடன்பாடு காணப்பட்ட வான் பாதையூடாகவே உலங்குவானூர்திகள் சென்று வர வேண்டுமென்பதில் தாங்கள் தீவிர கவனம் செலுத்துவதாகவும் மேஜர் ஜெனரல் துருண்ட பியூறு ஹொவ்ட தெரிவித்துள்ளார்.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

RCS PARIS
B 452 164 817 (2004B03079)

Directeur de la publication:
A.F. Santiogu

Redacteur: K. Jeisanthar

Impression:
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு

ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: தலிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

குறிப்பு:

இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

LA CHAPELLE
இறைச்சிக் கடை
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, Mº : La chapelle
Tel : 01 42 05 00 95

அதிசயம் ஆனால் உண்மை
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
VIMAL
DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

Asha Video Movies
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39

போட்டோ பாலா
மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
Mº: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வேண்டி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வேண்டுதல்
☒ நிலம் வேண்டி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 19 82

தமது உறுப்பினர்கள் மீது தொடரும் தாக்குதல்கள் சமாதான சூழலை முறியடித்துவிடும்

விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

மட்டக்களப்பில் தங்கள் உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள், போர் நிறுத்த உடன்பாட்டையும் சமாதான முயற்சிகளையும் முறித்துவிடும் அபாயமிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார். தன்னாமுனைப் பகுதியில் தங்கள் உறுப்பினர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது குறித்து கண்காணிப்புக் குழுவிற்கு தமிழ்ச் செல்வன் எழுதியுள்ள கடிதத்தில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தும் கொலையாளிகள் படையினரின் சகல ஒத்துழைப்புடனேயே செயற்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. எனவே, இவ்வாறான சம்பவங்களில் படையினர் ஈடுபடுவார்களேயானால், போர்நிறுத்த ஒப்பந்தமும், சமாதான முயற்சியும் முறியும் ஒரு அபாயகரமான நிலை ஏற்படும் என்பதோடு, பாரதூரமான விளைவுகளையும் சந்திக்க வேண்டியேற்படும்.

மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கிச் சென்று கொண்டிருந்த இவ்விரு போராளிகளும் நண்பகல் 12 மணியளவில் தன்னாமுனையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இருவரும் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு இருமருங்கிலும் 250 மீற்றர் தொலைவில் படையினரின் காவலரண்கள் உள்ளன. எனினும் கொலையாளிகள் கைது செய்யப்படவில்லை.

இந்தக் கொலையாளிகள் படையினரிடமிருந்து சகல ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறான, 'மறைமுக சக்திகளின்' உதவியுடனான கொலைகள் தொடர்ந்தால், இந்த விடயத்தில் வெறுமனே அமைதியைக் கடைப்பிடித்தவாறு இருப்பது எமது பொறுமையை இழக்கச் செய்துவிடும்.

கண்காணிப்புக் குழு இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்டோரை அடையாளம் காணுவதற்கும் சகல வழிகளிலும் முயற்சிக்கும் என்று நம்புவதோடு, இவ்வாறான சதியாளர்களை அடையாளம் காண்பதற்கான ஆழமான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை

சுதந்திர முன்னணி முதற்தடவையாக முறைப்படி அறிவிப்பு

இலங்கையின் இன நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையின் போது பிரதான பங்காளிகள் எப்போதும் அரசாங்கமும் விடுதலைப்புலிகளுமே என்று சிறீலங்காவின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடந்த சனிக்கிழமை தெரிவித்திருக்கிறது.

இந்த அடிப்படையிலேயே தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளென்பதை அரசாங்கம் அங்கீகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருக்கின்றாரென அதனை நியாயப்படுத்தி சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிக்கையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் எப்போதுமே பதவியிலிருக்கும் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தான் நடைபெற்று வந்துள்ளன. திம்பு பேச்சுவார்த்தையை தவிர எப்போதுமே இவ்விருதரப்பினருக்கும் இடையில்தான் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இத்தகைய சந்தர்ப்பங்களின் போதெல்லாம் அரசாங்கமும் விடுதலைப்புலிகளுமே பேச்சுவார்த்தையின் பிரதான பங்காளிகளாக இருந்துள்ளனர்.

பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில், திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது நிர்வாகத்தில், முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் இரு வருட ஆட்சியில் இலங்கையின் சார்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் இந்த அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளன.

அதேசமயம் தற்போதைய யுத்த நிறுத்த உடன்படிக்கையானது விடுதலைப்புலிகளின் தலைவருக்கும் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மட்டுமே கைச்சாத்திடப்பட்டதென்பது வரலாற்று ரீதியாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகும்.

பேச்சுவார்த்தையை நடத்துவது தொடர்பான அரசியல் மற்றும் நடைமுறைச் சூழ்நிலைகளை கவனத்திற்கெடுத்தால் பேச்சுவார்த்தை மேசையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பினர் அரசாங்கமும் புலிகளுமே என்பது தெளிவான விடயமாகும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது இவர்களுக்கல்ல...!

மட்டக்களப்பில் படையினர் கட்டுப்பாட்டு பகுதியில் 2 விடுதலைப்புலிகள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தன்னாமுனைப் பகுதியில் கடந்த 6ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஈருருளியில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு போராளிகளே இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வதனன், பகலவன் ஆகியோரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பிலிருந்து இவர்கள் வாழைச்சேனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இருவரும் உடனடியாகவே அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து பத்து மீற்றர் தூரத்தில், தன்னாமுனை புனித வளனார் வித்தியாலய வாசலில் பாதுகாப்பு கடமையில் இரு படையினரிருந்த போதும், துப்பாக்கிதாரிகள் மீது தாக்குதல் நடத்த படையினர் முனையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தன்னாமுனையிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் மயிலம்பாவெளி இராணுவ முகாமும் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் சத்துருக்கொண்டான் காவல் நிலையமுமுள்ளன. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வவுணதீவு-ஆயித்தியமலை வீதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் வானொன்றில் நுழைந்த குழுவொன்று ஏழு விடுதலைப்புலிகளை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றது குறிப்பிடத்தக்கது

PHONE 2000
LES PROFESSIONELS DE LA TELEPHONIE A VOTRE SERVICE
Réparation - Abonnements -Téléphones Mobiles - Vente en Gros et Détail - Déblocage
Internet - Installation Cybercafé - Abonnement ADSL - Création de Site Web.
Pour plus d'information visitez: www.phone2000.net - Tél: SFR Siva : 06 20 21 11 11